# நாசுதிராதிக் - ஞால முதன்மொழி ஆய்வுகளுக்குப் பாவாணர் தரும் ஒளி

பி. இராமநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# நாசுதிராதிக்-ஞால முதன்மொழி ஆய்வுகளுக்குப் பாவாணர் தரும் ஒளி

பி. இராமநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Nācutirātik-ñāla mutanmoḻi āyvukaḷukkup pāvāṇar tarum oḷi |
| Author | : | P. Ramanathan<br>27, Second Street<br>Thiruvalluvar Nagar<br>St. Thomas Mount P.O.<br>Chennai - 600 016 |
| General Editor | : | Prof. Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Tharamani, Chennai - 600 113<br>Ph: 2254 2992 |
| Publication No. | : | 598 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Year of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 Kg. TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 104 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees thirty five only) |
| Printing | : | United Bind Graphics<br>189, Royapettah High Road,<br>Luz, Mylapore, Chennai - 600 004.<br>✆ : 24661807, 24987562 |
| Subject | : | Contributions of G. Devaneya Pavanar to Nostratic studies |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

நாசுதிராதிக் - ஞால முதன்மொழி ஆய்வுகளுக்குப் பாவாணர் தரும் ஒளி எனும் இச்சொற்பொழிவு நூலை எழுதியுள்ள திருவாளர் பி. இராமநாதன் அவர்கள் பாவாணர் கருத்துக்களையெல்லாம் விளக்கிச் செல்கிறார். இந்த நூல் முழுதும் மொழி ஆய்வு குறித்த ஒளி மிளிர்கிறது.

> கடந்த பத்தாயிரம் ஆண்டுகளாக உலகின் வேறு எந்த மக்களுடனும் யாதொரு தொடர்புமின்றி வாழ்ந்து வருபவர்கள் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் ஆவர். ஆயினும் அவர்கள் மொழிகளுக்கும் தமிழுக்கும் இடையே இன்றும் மிக நெருங்கிய இலக்கண ஒப்புமைகளும், ஒலியன் ஒப்புமைகளும், சொல் அமைப்புகளும் காணப் படுகின்றன. தொல் திராவிட மொழி பேசுநர் (திராவிடர்) தமிழகம், தென்னிந்தியாவிலிருந்து பத்தாயிரம் - இருபதாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஆசியாவைப் பொறுத்தவரை வடக்கு நோக்கியும் ஆஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் கிழக்கு நோக்கியும் பரவினர் என்பதற்கு இது மறுக்க முடியாத சான்று ஆகும். (ப.5)

இது போன்ற பல அரிய தகவல்களை இந்நூலாசிரியர் பக்கங்கள் நெடுகிலும் அரண் செய்யும் வகையில் தர்க்கங்களை எடுத்துரைத்து விளக்கிச் செல்கிறார்.

> கால்டுவெல் ஆய்வினை முன்னெடுத்துச் சென்ற பலருள் மிகத் தகுதிவாய்ந்தவரும் விரிவான சிறந்த ஆய்வுமுடிவுகளை வெளியிட்டுள்ளவருமான ஞா. தேவநேயப் பாவாணர் (1902-1981) 1930 முதல் 1980 வரை ஐம்பதாண்டுகளில் தமது

> ஆழ்ந்தகன்ற மொழியியல் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மூலம் தமிழே திராவிடத்தாய்; ஆரியத்துக்கு மூலம் தமிழே உலக முதன்மொழி என்ற கோட்பாட்டைத் திட்டவட்டமாக நிறுவியவர் ஆவார். இன்றும் நாகதிராதிக்- ஞால முதன்மொழி ஆய்வுகளில் ஈடுபடுபவர்கள் எவராயினும் கற்றாக வேண்டிய அடிப்படை நூல்களுள் கால்டுவெல் நூலும் பாவாணர் நூல்களும் அடங்கும். (ப. 7)

எனும்படி மொழி அறிஞர்கள் பலரது நூல்களைக் கற்று ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார் இந்நூலாசிரியர்.

**சொற்கள் – எண்ணிக்கை – விழுக்காடு**

**மொழிகள் – ஒப்புமைச்சொற்கள் – விழுக்காடு எண்ணிக்கை**

எனப் (ப.8) பட்டியல்கள் விரிவுரத் தந்துள்ளமை வழியே இந்நூலினைப் பயில்வோர் எளிதில் ஆழமாக உணர்ந்துகொள்ள வழி செய்துள்ளார். மொழியின் தோற்றமும் பரவலும் எனும் இயல் 3இல்

| ஒவ்வொரு மொழியையும் பேசுநர் எண்ணிக்கை | மொழிகள் எண்ணிக்கை | பேசுவோர் தொகை (கோடியில்) |
|---|---|---|

எனுமாறு பட்டியலிட்டு விளக்கியிருப்பதன் வழியே நூலைப் பயில்வோரைக் கைபிடித்துக் கூட்டிச்சென்று வழிகாட்டிக் காட்சி விளக்கம் செய்வதுபோல் விளக்குவதை இந்நூலைப் பயில்வோர் எளிதில் உணர்வர்.

இயல் 4இல் தொல் திராவிட மொழி பேசுநர் பரவியது தெற்கிலிருந்து வடக்கு நோக்கியேயாகும்; தமிழர் இந்தியாவின் தொல் குடிகள் என்பதாகும். இக்கருதியலை விளக்கும் இந்நூலாசிரியர் கே.வி. சுவலெபில் (1972), கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, ஹெர். ஆர். ஹால், ஹீராஸ் பாதிரியார், பி.தி. சீநிவாச ஐயங்கார், வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், மறைமலையடிகள், யு.ஆர். எஹறென்பெல்ஸ், சேவியர் எஸ். தனிநாயகம், க.த. திருநாவுக்கரசு,

தேவநேயப் பாவாணர், பிரிட்ஜெட் மற்றும் ரேமாண்ட் ஆல்சின் (1988), கே.கே. பிள்ளை, பத்ரிராஜு கிருஷ்ணமூர்த்தி (2003) போன்ற பல மொழி அறிஞர்களின் கருத்துகளையெல்லாம் தர்க்க ரீதியில் விளக்கிப் பாவாணர் கருத்தினை நிலைநிறுத்தும் இந்நூலாசிரியரின் மொழி ஆய்வுத் திறன் பாராட்டுக்குரியதாகிறது.

மேலும் மொழி அறிவு குறித்த தேடல் உள்ளோருக்கு இந்நூல் பெரிய ஒரு அறிவுப் பெட்டகமாகத் திகழ்கிறது. இந்நூலுக்குத் துணை நின்ற நூற்பட்டியலைக் காண்பதன் வழியே இந்நூலில் கூறப்பட்ட பல்வேறு சான்றுகளையும் கூடுதல் விளக்கங்களையும் பெற்றுக்கொள்ளத் துணைநூற்பட்டியல் கூடுதல் துணை செய்யும்.

தமிழ் இந்தோ ஐரோப்பிய மொழி குறித்து (52-58)த் தந்துள்ள பட்டியல் இந்நூல் பயில்வோர் கூடுதல் சிந்தனை கொள்ள வழி செய்யும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான **மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் போன்று, தமிழின் சிறப்புகளைத் தரணி முழுதும் எடுத்தோதி, இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு மேன்மை ஏற்படுத்திவரும் தமிழக நிதியமைச்சர் **மாண்புமிகு பேராசிரியர்** அவர்களுக்கு நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத்துறை அரசுச் செயலர் திரு க. முத்துச்சாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

தமிழ்மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பெயரில் இந்நிறுவனத்தில் அறக்கட்டளை நிறுவிய அன்பரைப் பாராட்டுகிறேன். இந்நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன், கணிப்பொறியாளர் திருமதி ந. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடட் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# ஆசிரியர் குறிப்பு

*பி. இராமநாதன் எம்.ஏ., பி.எல்.* - இவர் 1969இலிருந்து கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தமிழியல் சார்ந்த பல புலங்களிலும் (வரலாறு, மாந்தவியல், சமூகவியல், பண்பாடு, மொழியியல்) தரமான ஆய்விதழ்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டு வருகிறார். ஏறத்தாழ, பத்துப் புத்தகங்களையும் எழுதியுள்ளார். விவரங்களை இந்நூலின் இறுதியில் உள்ள நூற்பட்டியலில் காணலாம்.

குறிப்பாக 1977-1980இல் ஞா. தேவநேயப்பாவாணர் **"செந்தமிழ்ச் செல்வி"** இதழில் "தமிழின் தொன்மையை நிலைநாட்டும் சொற்கள்" என்ற தலைப்பில் எழுதிய தொடர் கட்டுரைகளை இவர் தமிழாக்கம் செய்து **"Nostratics - the light from Tamil according to Devaneyan"** என்ற தலைப்பில் 2003இல் தனிநூலாக வெளியிட்டார். அப்புத்தகத்தின் முதல் 60 பக்கங்களில் உள்ள தமது ஆய்வு முன்னுரையில் "ஞால முதன்மொழிக்கு மிக நெருங்கியது தமிழ்" என்ற கால்டுவெல் - ஞானப் பிரகாசர் - தேவநேயன் கோட்பாட்டைப் பல்வேறு அறிவியற் புலங்களில் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள (மாந்த இனத் தோற்றமும் பரவலும், மொழியின் தோற்றமும், பரவலும், மாந்தர் மரபணு ஆய்வு, பல்வேறு மொழிப்பெருங் குடும்பங்கள் (Macro-families of Languages) இடையே உள்ள நெருக்கம் பற்றிய ஆய்வுகள், தொல்லியல் ஆய்வு) **இன்றைய அறிஞர்கள்** கொண்டுள்ள கருதுகோள்கள் ஆதரிப்பனவாக உள்ளன என்பதை இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார்.

# நன்றியுரை

'தேவநேயப் பாவாணர் அறக்கட்டளைச் சொற்பொழிவை' நிகழ்த்த எனக்கு வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ''வெளியீடுகள் மற்றும் அறக்கட்டளைச் சொற்பொழிவாளர்கள் தெரிவுக்குழுவிற்கும்" நிறுவன இயக்குநர் அவர்களுக்கும் நன்றியுடையேன். அச்சிடுவதற்கான இறுதிப்படியைத் திறம்பட ஆயத்தம் செய்த நிறுவன அலுவலர்களுக்கும் நன்றி. கையெழுத்துப் பிரதியின் முதல் கட்ட 'கணினித் தட்டச்சு வடிவை' நல்லவண்ணம் உருவாக்கித் தந்த ஆதம்பாக்கம் வி.கே. கணினி மைய ஆர். வைத்தியநாதனுக்கும் நன்றி.

தேவநேயப் பாவாணர் இருந்த காலத்தில் அவருக்கு உற்றுழி உதவிய சிங்கப்பூர்க் கோவலங்கண்ணனார் அன்னாரின் மறைவுக்குப் பின்னர்ப் பாவாணரின் (தமிழ் மொழியியல், வரலாற்று மொழியியல், ஞால முதன்மொழி ஆய்வு ஆகிய துறைகள் சார்ந்த) தன்னேரில்லாத அறிவுச் செல்வம் உலகெங்கும் பரவிப் பயன்தரச் செய்யும் நோக்குடன் இவ்வறக்கட்டளையை நிறுவுதல் போன்ற பல அரும்பணிகளை ஆற்றி வருகிறார். தமிழுலகம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

பி. இராமநாதன்

# பொருளடக்கம்


1. பொது அறிமுகம் 1

2. மாந்த இனத் தோற்றமும் பரவலும் 10

3. மொழியின் தோற்றமும் பரவலும் 17

4. தொல்திராவிடமொழி பேசுநர் பரவியது தெற்கிலிருந்து வடக்கு நோக்கியேயாகும்; தமிழர் இந்தியாவின் தொல்குடிகள் 27

5. இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் தமிழ்ச் சொற்களும் இலக்கண / மொழியியல் கூறுகளும் 41

6. வண்ணனை மொழியியலின் வழுக்கள் பற்றிப் பாவாணர் கருத்துக்கள் இன்று ஏற்கப்பட்டுள்ளமை 64

7. பாவாணர் கனவு நனவாகும் காலம் 70

நூற்பட்டியல் 82

விவரப்படங்கள், நிலப்படங்கள் 96

# இயல் - 1

# பொது அறிமுகம்

இன்று உலகில் பேசப்படும் 6000 மொழிகளும் பல்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அக் குடும்பங்களுள் முக்கியமானவை இந்தோ-ஐரோப்பியம், திராவிடம், உரால்-அல்தாய்க், ஆப்ரோ-ஆசியன் (ஹமைதோ-செமித்திக்) ஆகியவை யாகும். இந்நான்கு மொழிக் குடும்பங்களுமே பொதுவான ஒரு மொழிப் பெருங்குடும்பத்திலிருந்து (Macrofamily) தோன்றியிருக்க வேண்டும் என்று 1900ஐ ஒட்டி ஐரோப்பிய மொழியியலறிஞர் சிலர் கருதினர். அம் மொழிப் பெருங்குடும்பத்துக்கு 1904இல் டென்மார்க் அறிஞர் ஹால்தெர் பெதர்சன் நாசுதிராதிக் என்று பெயர் சூட்டினார். இலத்தீன் மொழியில் நாஸ்திராஸ் என்றால் நம்மவன் என்று பொருள். அச்சொல்லிலிருந்து நாசுதிராதிக் (நமதுமொழி) என்ற சொல்லைப் பெதர்சன் உருவாக்கினார்; இவ்வாய்வுகளைக் குறித்திட நாசுதிராதிக்ஸ் என்னும் சொல் உருவாக்கப்பட்டுள்ளது. 1960களில் உருசிய அறிஞர் இலிச் சுவிதிச் இத்துறையில் விரிவான ஆய்வுகள் செய்தார். அவர் 1965ல் உந்து விபத்தில் இறந்துவிட்டார். நாசுதிராதிக் தவிர ஏனைய மொழிப் பெருங்குடும்பங்களாக மொழியியலறிஞர் இன்று ஏற்றுள்ள மொழிப் பெருங்குடும்பங்கள் வருமாறு: சீன-காகேசியன், ஆஸ்திரிக், அமெரிக்க-இந்தியன், இந்தோ-பசிபிக், கோய்சான், காங்கோ-சகாரா.

2. பெதர்சன், சுவிதிச் ஆகியோர் நிறுவிய நாசுதிராதிக், அமெரிக்கர் கிரீன்பெர்கு 2000இல் நிறுவிய யூரேசியாடிக் இவ்விரண்டுக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை. காண்க:

**(1). நாசுதிராதிக் மொழிப் பெருங்குடும்பத்தில் அடங்கிய மொழிக் குடும்பங்கள்:**

**1965இல் சுவிதிச் கருத்துப்படி:**

இந்தோ-ஐரோப்பிய மொழிகள், உராலிக் (பின்னிஷ் முதலியவை), அல்தாயிக் (துருக்கியம் முதலியவை), திராவிட மொழிகள், கார்ட்வெலியன் (ஜார்ஜிய மொழி முதலியவை), ஆப்ரோ-ஆசியன் (செமித்திய மொழிகளும் ஹாமித்திய மொழிகளும்).

பிற்றை நாசுதிராதிக் ஆய்வாளர் கருத்துப்படி:

(i) ஆப்ரோ-ஆசிய மொழிகளை நீக்குக: ஸ்தாரோஸ்தின், செவரோஸ்கின், அலெக்சிஸ் மனாஸ்டர் ரேமர்

(ii) சுகோதியன், எஸ்கிமோ-ஆல்யூத் சேர்க்க: தால்கோபால்ஸ்கி

(iii) சப்பானியம், கொரியம் சேர்க்க (அல்தாயிக் குடும்பத்தில், அல்லது தனியாக) பாம்ஹார்டு, ஸ்தாரோஸ்தின்

(iv) கார்ட்வெலியனை நீக்குக: - பாம்ஹார்டு, கெர்ன்ஸ்

(v) எலாமைட்டைச் சேர்க்க: - தால்கோபால்ஸ்கி

(vi) சுமேரியத்தைச் சேர்க்க: - பாம்ஹார்டு.

**(2) கிரீன் பெர்க்கின் யூரேசியாடிக் மொழிப் பெருங்குடும்பத்தில் அடங்கியவை:**

எத்ருஸ்கன், இந்தோ-ஐரோப்பிய மொழிகள், உராலிக்-யூகாகிர், அல்தாயிக், கொரியன் - ஜப்பானியம்-ஜனு, கில்யாக், சுகோதியன், எஸ்கிமோ-அல்யூத்.

3. ரோஜர் பிளெஞ்ச் & மாத்யூ ஸ்பிரிக்ஸ் பதிப்பித்த தொல்லியலும் மொழியும் (1977/1999 ரௌட்லெட்ஜ்) நூல் நான்கு மடலங்கள் கொண்டது. நாசுதிராதிக் மொழிப் பெருங்குடும்பத்தில் திராவிட மொழிகளின் இடம் குறித்து இரண்டு வேறுபட்ட கருத்துக்களை அந்நூலில் காணலாம்:

**மடலம் I பக். 65-67: ஹெக்தெயஸ் எழுதிய "ஆப்ரோ-ஆசியாடிக்கும் நாசுதிராதிக்கும்"**



**மடலம் IV பக் 48-78 வாக்லாவ் பிலாசக் எழுதிய "எலாம்மொழி: பண்டைய மையக் கிழக்குப் பகுதியையும் திராவிட இந்தியாவையும் இணைத்த பாலம்"**




இ.மு. = இன்றைக்கு முன்னர்

(திராவிடமொழிக்கும் எலாம் மொழிக்கும் இடையிலான ஒப்புமையை விட எலாம் மொழிக்கும் ஆப்ரோ-ஆசியாடிக், தொல் சுமேரியன் மொழிகளுக்கும் இடையே இருந்த ஒப்புமை நெருக்கமானது).

4. ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் 2000 அக்டோபர் மாதம் பத்ரிராஜு கிருஷ்ணமூர்த்தியிடம் பேசும் பொழுது கிரீன் பெர்க் "திராவிட மொழிக் குடும்பம் யூரேசியாடிக்கின் உடன்பிறப்பாக (சகோதரியாக) இருக்க முடியுமேயொழிய மகளாக இருக்கமுடியாது'' என்றார். (கிருஷ்ணமூர்த்தி 2003 பக். 46) இதன் பொருள் என்ன? இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் பிறந்த உட்குடும்பங்களே ஸ்லாவ், இரானியன்; வேதமொழி; சமஸ்கிருதம், கிரீக், இலத்தீன், கெல்டிக், செருமானியம் முதலியவை. திராவிட மொழிகள் இவற்றுக்கு மட்டுமல்ல, இவற்றின் தாயான, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்துக்கும் முந்தைய பழமை வாய்ந்தவை என்பதே கிரீன்பெர்க் கருத்து.

5. நாசுதிராதிக் தொன்மொழிக்கும் முந்தியதாகிய ஞால முதன்மொழி (Mother Tongue of man அல்லது Proto-World) பற்றி இன்று மொழியியலறிஞர் கோட்பாடு என்ன? அட்லான்டிக் மன்த்லி என்னும் அமெரிக்க இதழில் (1991 ஏப்ரல் 1991: பக். 39 -68) ராபர்ட் ரைட் என்பவர் இதுபற்றி நயம்பட எழுதியுள்ளார். அத்தகைய ஞால முதன்மொழி சார்ந்த ஆய்வுகளில் இன்று ஈடுபட்டுள்ளவர்கள் மெரிட் ரூலன், ஜான் பெங்ட்சன், வாக்லாவ் பிலாசக், விதாலி செவரோஷ்கின் (Merrit-Ruhlen, John Bengtson, Vaclav Blazek, Vitaly Shevoroshkin) போன்றவர்களாவர். யூரேசியாடிக் பற்றிக் கிரீன்பெர்க் இறப்பதற்கு முன் கடைசியாக எழுதிய நூல் *இந்தோ-ஐரோப்பிய மொழிகளும் அவற்றோடு நெருங்கிய உறவுடையனவும்-யூரேசியாடிக் மொழிப் பெருங்குடும்பம்.* (Indo-European and its closest relatives; the Eurasiatic Language Family; Vol. I: Grammar; Vol. II: Lexicon;'' (ஸ்டான்போர்டு பல்கலைக்கழக அச்சகம், 2000/2002)

என்பதாகும். மொழியியல் ஆய்விதழ்கள் கிரீன்பெர்க் நூலைக் கடுமையாகத் தாக்கி எழுதியுள்ளன. Journal of Linguistics (38 - 2, சூலை 2002) இதழில் டான் ரிங்கே என்பவர் கிரீன்பெர்க் நூலில் உருப்படியானது ஒன்றுமில்லை, அது மறந்துவிடத்தக்கது என்று எழுதினார். Language (30-4; 2004) இதழில் பீட்டர் டி. தானியேல் அவ்வளவு கடுமையாகக் கிரீன்பெர்க்கைத் தாக்கவில்லையெனினும் நாசுதிராதிக் / யூரேசியாடிக் போன்ற கோட்பாடுகளை ஏற்பதற்கு மொழியியல் அடிப்படையில் பல தடைகள் உள்ளன என்கிறார்.

6. பல்வேறு மொழிக் குடும்பங்களுக்கிடையேயுள்ள உறவு (அதாவது, தொல் பழங்காலத்தில் அவை எவ்வாறு ஒன்றாக இருந்து படிப்படியாகப் பிரிந்து ஒன்று - பலவாகியிருக்கலாம் என்பது) பற்றி எழுதும் மொழியியலாளர்களிடையே ஆர்.எல்.திராஸ்க் (R.L.Trask *Historical Linguistics;* Arnold, London, 1996) உடைய கருத்தே விருப்பு வெறுப்பற்றதும் சிறந்ததும் ஆகும். "தொல் - நாசுதிராதிக் சுமார் 15000-10,000 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பேசப்பட்டிருக்கலாம், மொழிக் குடும்பங்களின் கால்வழிப் பற்றிய கருதுகோள்களிலேயே நாசுதிராதிக்தான் பெருமளவு ஏற்கத்தக்கதாயுள்ளது. இன்னும் பத்தாண்டுகளில் (திராஸ்க் இதை எழுதியது 1996இல்) நாசுதிராதிக் கொள்கை பலராலும் ஏற்கப்படலாம்''- இதுதான் திராஸ்க் கருத்து ஆகும். (திராவிட, உரால்-அல்தாய்க், சப்பானிய மொழிகள் 10000 ஆண்டுகட்கு முன்னர்ப் பிரிந்திருக்கலாம் என்பர் சுவெலபில் (1990)-கீழே இயல் 3; பத்தி 9). 1901ல் தன்னுடைய மொழியின் வரலாறு நூலில் ஹென்றி ஸ்வீட் சொன்னதையும் திராஸ்க் நினைவூட்டுகிறார். புதிய கருத்துக்கள் முன்வைக்கப்படும் பொழுது தாம் ஏற்கெனவே கொண்டுள்ள முடிவுகளை மாற்றிட வல்லுநர்கள் தயங்குவது இயற்கைதானே என்றார் ஸ்வீட். ஸ்வீட் மேலும் சொன்னது: "நமது வல்லுநர் ஏற்கெனவே தாம் படிக்கக் கூடியதையெல்லாம் படித்து முடித்துவிட்டார். மேலும் புதிய மொழிகளைக் கற்க அவருக்குப் பிடிக்கவில்லை.... இப்பொழுது கைக்கொண்டுள்ள கோட்பாட்டைக் கைவிடவேண்டுமேயென்ற தயக்கத்தினால் புதிய கருத்தின் மீது வெறுப்பு... புதிய கருத்து பெரும் ஒளி தருமென உணர்ந்தாலும் கூட... இதுவரைத் தான் செப்பிவந்ததைக் கைவிடத் தயக்கமும் மிகையான எச்சரிக்கையுணர்வும்''.

7. இன்று உலகில் உள்ள 640 கோடி மக்களுமே ஹோமோ சேபியன்ஸ் அல்லது "தற்கால உடலமைப்பு மாந்தர்'' (Anatomically Modern Humans) என்னும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவ்வினம் சுமார் ஒன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்காவில் தோன்றியது என்பதும், மொழி என்பது 50,000 ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியிருக்கலாம் என்பதும் பல்வேறு

அறிவியல் துறை விஞ்ஞானிகளின் இன்றைய ஒருமித்த முடிவாகும். முதல் தாய்மொழி தோன்றிய ஏறத்தாழ ஐம்பதாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இருந்துதான். தற்கால மாந்த இனம் விரைந்து உலகின் அனைத்துக் கண்டங்களுக்கும் பரவுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்பதும், அப்பரவல் தென் இந்தியா வழியாக நடை பெற்றிருக்கலாம் என்பதும் அவர்கள் கருத்தாகும். "தொல்தமிழ் (திராவிட) தோற்றமானது மொழி உருவாகியதும் தற்கால மாந்த இனம் உலகெங்கும் பரவத் தொடங்கியதுமான ஐம்பதாயிரம் ஆண்டுத் தொன்மை உடையதாகலாம்'' (Christianson M.H, et al (2003) Language Evolution; Colin Masica (2001) etc.

8. கடந்த பத்தாயிரம் ஆண்டுகளாக உலகின் வேறு எந்த மக்களுடனும் யாதொரு தொடர்பும் இன்றி வாழ்ந்துவருபவர்கள் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் ஆவர். ஆயினும் அவர்கள் மொழிகளுக்கும் தமிழுக்கும் இடையே இன்றும் மிக நெருங்கிய இலக்கண ஒப்புமைகளும், ஒலியன் ஒப்புமைகளும், சொல் ஒப்புமைகளும் காணப்படுகின்றன, தொல் திராவிட மொழி பேசுநர் (திராவிடர்) தமிழகம், தென்னிந்தியாவிலிருந்து பத்தாயிரம் - இருபதாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஆசியாவைப் பொறுத்தவரை வடக்கு நோக்கியும், ஆஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் கிழக்கு நோக்கியும் பரவினர் என்பதற்கு இது மறுக்க முடியாத சான்று ஆகும். மாந்த இனப் பரவல் பற்றிய மாந்தவியல், தொல்லியல் சான்றுகளும் கூடத் தொல்-திராவிட மொழியினர் பத்தாயிரம் ஆண்டுகட்கு வெகு முன்னர்த் தென்னிந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் பரவியதையே ஆதரிக்கின்றனர்; (இயல் 2). சங்க இலக்கியங்களும் பிற்கால இறையனார் களவியலுரை முதலியவையும் குமரிக்குத் தெற்கே இருந்த தமிழ்நாட்டுப் பகுதியைக் கடல் கொண்டது பற்றியும் கூறுகின்றன. கடைசிப் பனியூழியாகிய ஊர்ம் (Wurm) ஊழியிறுதியில் கி.மு. 8000ஐ ஒட்டி (பனிக் கட்டிகள் உருகியதால்) கடல் மட்டம் உலகெங்கும் 300 அடி உயர்ந்தது. அப்பொழுதுதான் உலகமெங்கும் இப்பொழுதுள்ள கடற்கரைக்கு அப்பால் சுமார் 200 மைல்கள் வரை (அதுவரை நிலமாக இருந்த பகுதி) கடலுள் மூழ்கியது. அவ்வாறு மூழ்கிய பகுதி "கண்டத் திட்டு'' (Continental Shelf) எனப்படும். இந்நிகழ்ச்சியையே சங்க நூல்களின் "கடல்கோள்'' செய்திகள் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம் என்பதும் இன்றைய பல்துறை அறிவியலறிஞர் கோட்பாடுகளுக்கு முற்றிலும் இசைவதாகும். தென் இந்தியாவை ஒட்டிய அக் "கண்டத் திட்டுப்'' பகுதி வழியாகத் தொல் தமிழிய இனம் கிழக்கே ஆஸ்திரேலியா வரை பரவியிருக்க வேண்டும் எனப் பிளெமிங் முதலியோர் கருதுகின்றனர்.

9. இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். பூமியில் கண்டங்கள் உருவானது, நகர்ந்தது, அவற்றுக்கான கால வரம்பு; உயிர்கள்

தோற்றம்; தற்கால மாந்தன் தோற்றமும் பரவலும்; மொழியின் தோற்றம்; போன்றவை பற்றிய கருத்தோட்டங்கள் பற்றியெல்லாம் 1960களுக்கு முன்னர் இருந்த நிலைமை வேறு; இப்பொழுதுள்ள நிலைமை வேறு. கடந்த ஐம்பது-அறுபது ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாக இவையெல்லாம் திட்டவட்டமான, மறுக்கொணாத அறிவியிற் புலங்களின் கீழ் வந்துவிட்டன (They have come squarely under the domain of specific disciplines of hard science). இவை பற்றி 1960க்கு முன்னர், சுமார் நூறு ஆண்டுகளாக இருந்து வந்த அறிவியல் சாராப் புலங்களின் (Humanities) கீழ் வெளியிடப்பட்ட உன்னிப்புக் கருத்துக்களை (அக்கால மேலை நாட்டறிஞர்கள், அவர்கள் காலத்திற்கேற்ப வெளியிட்டு அவற்றை அக்காலத் தமிழறிஞர்கள் தங்கள் கருத்துக்களுக்கு ஆதாரமாகக் குறிப்பிட்டவை) இன்றும் ஆதாரமாகக் குறிப்பிடுவது நமது கருத்துக்களுக்கு வலுவூட்டாது; மாறாக அவற்றை நகைப்பிற்கிடமாக்கும். எவ்வாறு? ஞாயிறு பூமியைச் சுற்றுகிறது என்றோ, உலகம் கி.மு. 4004இல் உருவாயிற்று என்றோ; (லைசெங்கோ கூறியது போல) "ஓர் உயிரி தன் வாழ்நாளில் அடையும் மாற்றங்கள் (acquired characteristics) அதன் பரம்பரைக்குச் செல்லும்'' என்றோ இன்று கூறுவது எவ்வாறு நகைப்பிற்கிடமாகுமோ அவ்வாறு! எனினும் அவ்வறிவியற் புலங்களின் இன்றைய நிலைகளின்படியே தமிழின் தொன்மை, முதன்மை, ஞாலமுதன் மொழிக்கு அதன் நெருக்கம் முதலியவற்றை நிறுவ இயலும் பொழுது 1960க்கு முன்னரே காலாவதி ஆகிவிட்ட கருத்தோட்டங்களை இன்றும் கூறிக்கொண்டிருப்பது கனியிருப்பக் காய் கவர்வதாகும்.

10. நாசுதிராதிக் ஆய்வாளர்களும், ஞால முதன்மொழி ஆய்வாளர்களும் திராவிட மொழிகளிலிருந்து (குறிப்பாகத் தமிழிலிருந்து: காரணம் தொல்திராவிட நிலையைக் காட்டக்கூடிய, அல்லது உய்த்துணர வழிசெய்யும் செய்திகளைப் பெருமளவுக்குக் கொண்ட ஒரே மொழி தமிழ்) கிட்டும் ஒளியைப் பயன்படுத்தியிருப்பராயின் அவர்கள் ஆய்வு முடிவுகள் வலுப்பெற்றிருக்கும். கால்டுவெல் பெருமகன் 1856 ஆம் ஆண்டிலேயே தமது "திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணத்தில்'' தமிழிய மொழிகளுக்கும் இந்தோ-ஐரோப்பிய, உரால்-அல்தாயிக், எலாமைட், ஆஸ்திரேலியப் பழங்குடிமக்களின் மொழிகள், செமித்திய மொழிகள் ஆகியவற்றிற்கும் இடையே சொற்களிலும் இலக்கணத்திலும் வியத்தகு ஒற்றுமைகள் இருப்பதை விளக்கி, தமிழ், மாந்த இனத்தின் முதல் தாய்மொழிக்கு மிக நெருங்கியதாக இருக்க வேண்டும் என்று தெரிவித்து இருந்தார்: காண்க:

> "தமிழிய (திராவிட) மொழிக் குடும்ப மொழிகள் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம், உரால் - அல்தாய்க் மொழிக்

குடும்பம் ஆகிய இரண்டு மொழிக் குடும்பங்களுக்கும் இடையே உள்ள உறவை விளக்குவனவாக உள்ளன; அது மட்டுமா? மாந்தன் முதன்மொழி தோன்றிய பின்னர் - அம் முதன்மொழியிலிருந்து இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பமும், உரால்-அல்தாய்க் மொழிக் குடும்பமும் பிரிவதற்கு முன்னர் - இருந்த காலத்திய நிலைகளை இன்றும் காட்டுவனவாக உள்ளன எனத் தோன்றுகிறது.''

"தமிழிய மொழிகளில் உள்ள சில சொற்களும் வேர்களும் மாந்தன் முதன்மொழியில் இருந்திருக்கக் கூடிய வடிவங்களிலேயே இன்றும் உள்ளனவாகக் கருத இடமுண்டு.''

11. கால்டுவெல் ஆய்வினை முன்னெடுத்துச் சென்ற பலருள் மிகத் தகுதி வாய்ந்தவரும் விரிவான சிறந்த ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ள வருமான ஞா. தேவநேயப் பாவாணர் (1902 - 1981) 1930 முதல் 1980 வரை ஐம்பதாண்டுகளில் தமது ஆழ்ந்தகன்ற மொழியியல் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மூலம் தமிழே திராவிடத்தாய்; ஆரியத்துக்கு மூலம்; தமிழே உலக முதன்மொழி என்ற கோட்பாட்டைத் திட்டவட்டமாக நிறுவியவர் ஆவார். இன்றும் நாசுதிராதிக் / ஞாலமுதன் மொழி ஆய்வுகளில் ஈடுபடுபவர்கள் எவராயினும் கற்றாகவேண்டிய அடிப்படை நூல்களுள் கால்டுவெல் நூலும் பாவாணர் நூல்களும் அடங்கும்.

12. தமிழ் என்னும் சொல்லின் திரிபே திராவிடம் (தமிழ், தமிள, த்ரமிள, த்ரமிட, த்ராவிட). திராவிட மொழிக் குடும்பம் என அழைப்பது தமிழிய மொழிக் குடும்பத்தையே. தொல் திராவிடம் (proto-Dravidian) என்று வண்ணனை மொழி நூலாய்வாளர் மீட்டுருவாக்கம் செய்வனவற்றுள் பல பிழையாய் முடிகின்றன என்பதும் பழந்தமிழே இதற்குக் கட்டளைக் கல்லாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் பாவாணர் கொள்கை. தமிழின் திரிபுகளே பிற திராவிட மொழிகள். பழந்தமிழினின்றும் வேறுபட்ட "தொல் திராவிடம்'' என்பது கற்பனையே என்பர் பாவாணர். ஆகவே இந்நூலில் திராவிடம், தொல் திராவிடம் எனக் குறிப்பிடப்படுவனவெல்லாம் உண்மையில் பழந்தமிழையே குறிப்பதாகக் கொள்க.

13. மிக அண்மையில் தான், முதன் முதலாக மேனாட்டு மொழியியலறிஞர் பாவாணர் கோட்பாடுகளை ஆதரிக்கும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். காண்க:

(1) ஸ்டெபான் ஹில்யர் லெவிட்: "இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள்'' (இந்தோ ஐரோப்பிய மொழியியல் ஆய்விதழ்) மடலம் 28: எண் 3.4. சூன். டிச. 2000 பக். 407-438). பாவாணர் தமது "The Primary classical Language

of the World (1966)'' நூலில் தமிழ் மொழியிலிருந்து இந்தோ ஐரோப்பிய மொழிகளிற் புகுந்துள்ளனவாகக் குறிப்பிடுவனவற்றுள் நூற்றுக்கு மேற்பட்டவை ஏற்கத்தக்கனவென்பது இவர் கருத்து. விவரங்கள் இயல் 5இில்.

(2) தமது (2000) நூலில் கிரீன்பெர்க் யூரேசியாடிக் பெருங் குடும்பத்தின் முக்கியமான இலக்கண ஒப்புமைகள் 72-ஐக் குறிப்பிட்டுள்ளார். அந்த 72 இனங்களில் 20-க்கு மேற்பட்டவற்றுக்குத் திராவிட மொழிகளின் இலக்கணக் கூறுகளும் பொருந்தி வருகின்றன- விவரங்கள் இயல் 3இல்.

(3) ஹெச்.பி.ஏ. ஹகோலா (பின்லாந்து) (i) ஆயிரம் துரால்ஜன் (DURALJAN) வேர்ச் சொற்கள் (2000); இந்நூலில் திராவிட மொழிகள், உரால்-அல்தாய்க் இன மொழிகள், சப்பானிய மொழி, தென் அமெரிக்கப் பெருநாட்டுக் கொஷுவா மொழி, ஆகியவற்றிடையே 1000 அடிப்படை ஒப்புமைச் சொற்களைப் பின்வரும் விவரப்படி தந்துள்ளார்.

| *சொற்கள்* | *எண்ணிக்கை* | *விழுக்காடு* |
|---|---|---|
| உரால் இனமொழிச் சொற்கள் (அவற்றுள் பின்னிஷ் 940) | 984 | 98.4% |
| திராவிட மொழிகளின் சொற்கள் (அவற்றுள் தமிழ் 585) | 808 | 80.8% |
| கொஷுவா | 605 | 60.5% |
| சப்பானிய மொழி | 489 | 48.9% |
| அல்தாய்க் மொழிகளின் சொற்கள் (அவற்றுள் மங்கோலியன் 295) | 363 | 36.3% |

(ii) சுமேரியமொழியும் தொல்துரால்ஜன் மொழிகளும் (2003; ஹஜத் அசாதியன் உடன் இணைந்து எழுதியது) முந்தைய நூலிற்கண்ட 1000 ஒப்புமைச் சொற்களில் 410 சொற்கள் (கி.மு. 3500-1800 காலக்கட்டத்தைச் சார்ந்த) சுமேரிய மொழிச் சொற்களோடும் ஒத்திருப்பதைப் பின்வரும் விவரப்படி நிறுவுகிறது:

| *மொழிகள்* | *ஒப்புமைச் சொற்கள் எண்ணிக்கை* | *விழுக்காடு* |
|---|---|---|
| உரால் இன மொழிகள் (பெரும்பாலும் பின்னிஷ்) | 418 | 99.5 |
| திராவிட மொழிகள் | 332 | 79.0 |
| அவற்றுள் தமிழ் | 267 | 63.6 |
| கொஷுவா | 249 | 59.3 |
| சப்பானிய மொழி | 233 | 55.5 |
| அல்தாய்க் மொழிகள் (பெரும்பாலும் மங்கோலியன்) | 177 | 42.1 |

(iii) 2007ஆம் ஆண்டிற்கான யூரேசிய ஆய்விதழில் (Eurasian Studies Year Book:79 - for 2007) ஹகோலோ கட்டுரை: தனது முந்தைய நூல்களின் கருத்துகளை, ஞால முதன் மொழியை நெருங்கும் அளவுக்கு, மேலும் விரிவாக்கி நாசுதிராதிக், துரால்ஜன் (தமிழிய / திராவிட மொழிகள் உட்பட), ஆப்ரோ- ஆசிய மொழிகள் ஆகிய மூன்று இனங்களுக்கும் பொதுவான 17+73+148 சொற்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார். (17 சொற்கள் வலுவான ஒப்புமை உடையவை; 73 சொற்கள் ஓரளவுக்கு ஒப்புமை யுடையவை; 148 சொற்களின் ஒப்புமை மேலும் ஆய்வுக்குரியது என்பது ஹகோலா கருத்து).

14. அடுத்து வரும் இயல்களில் மாந்த இனத்தோற்றமும் பரவலும்; மொழியின் தோற்றமும் பரவலும்; பற்றிய இன்றைய பல்துறை அறிஞர்கள் ஏற்றுள்ள செய்திகள் தரப்படுகின்றன. ஞால முதன் மொழி பற்றியும், அம்முதன் மொழிக்குத் தமிழின் நெருக்கத்தையும் ஆய்வுசெய்பவர்களுக்கு அச்செய்திகள் இன்றியமையாதவை. பிற்றை இயல்களில் பாவாணர் நூல்களிலும் கட்டுரைகளிலும் உள்ள மொழியியல் ஆய்வுகளே நாசுதிராதிக்/ யூரேசியாடிக் மற்றும் ஞால முதன் மொழி ஆய்வாளர்களுக்குப் புத்தொளி காட்டக் கூடியவை என்பது விரிவாக விளக்கப்படும்.

## இயல் - 2

# மாந்த இனத் தோற்றமும் பரவலும்

புடவியின் (பிரபஞ்சத்தின்) அகவை சுமார் 1450 கோடி ஆண்டுவரை இருக்கலாம். உலகம் உட்பட ஞாயிற்றுக் குடும்பத்தின் வயது ஏறத்தாழ 450 கோடி ஆண்டு ஆகும். உலகில் முதன் முதலில் உயிர்கள் தோன்றியது ஏறத்தாழ 300 கோடி ஆண்டுகட்கு முன்னர்தான். முதலில் தோன்றியவை பாக்டீரியா போன்ற ஓரணு உயிரிகளே. இன்றுள்ள அனைத்துச் செடி கொடிகளும், விலங்கு - பறவைகளும் ஒரே மூலத்தில் தோன்றியவையே ஆகும். இவ்வுயிரின வகைகள் 15 இலட்சம் தனி இனங்கள் (Species) ஆகும். கண்டுபிடிக்கப்படாதவையும், பெயர் சூட்டப் படாதவையும் (குறிப்பாக நிலைத்திணை, நுண்ணுயிர்கள், சிற்றுயிர்கள்) மும்மடங்கு இருக்கும் என்று அறிவியலார்கள் கருதுகின்றனர் இன்றைக்கு 24 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தடவையும், ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மற்றொரு தடவையும் பேரழிவுகள் ஏற்பட்டு அந்தந்தக் காலக்கட்டத்தில் இருந்த உயிரினங்களுள் பெரும்பாலானவை அழிந்துவிட்டன. (மிகப் பெரிய விண் கொள்ளிகள் (Meteors) உலகில் விழுந்ததால் அப்பேரழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் என்கின்றனர்). இப்பொழுது உள்ள பாலூட்டிகள் (Mammals) அனைத்துமே 16 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உருவான ஒரு சிறிய (எலி போன்ற பருமனுடைய) விலங்கிலிருந்து படிமலர்ச்சி அடைந்தவையே. குரங்குகளுக்கும் மாந்தனுக்கும் மூதாதையான இலெமூர் (Lemur) விலங்கு (ஏறத்தாழ 250 கிராம் எடை) உருவான காலம் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும். (பூச்சிகள் தோன்றி 50 கோடி ஆண்டுகளும் எறும்புகள், தேனீக்கள் தோன்றி 10 கோடி ஆண்டும், கறையான் தோன்றி 28 கோடி ஆண்டும் ஆகின்றன). புவியின் தோற்றத்திலிருந்து இக்கால மாந்தன் வரை என்ற விவரப் படத்தைப் புத்தக இறுதியில் காண்க.

2. மாந்தன் எப்படித் தோன்றினான்? மாந்தக் குரங்கினத்துக்கும் (சிம்பன்சி, கொரில்லா) மாந்தனுக்கும் பொதுவான வேறு ஓர் உயிரினம் இன்றைக்கு ஏறத்தாழ 50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில் இருந்திருக்க வேண்டும் என்பது அறிவியல் முடிவு. இன்று உலகெங்கும் உள்ள 650 கோடி மாந்தர்களுமே (அதாவது திராவிடர், இந்தோ ஐரோப்பியர்,

மங்கோலியர், செமித்தியர், அமெரிக்க இந்தியர் போன்ற அனைவருமே) ஹோமோ சேபியன்ஸ் சேபியன்ஸ் அல்லது தற்கால மாந்தர் (Homo Sapiens Sapiens or Anatomically Modern Humans) என்னும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள். இவ்வினம் ஆப்பிரிக்காவில் இன்றைக்கு ஒன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரே தாயிடம், அல்லது ஒரு சிறு குழுவிடம் இருந்து தோன்றியது என்பது இன்றைய அறிவியலார் அனைவரும் ஏற்ற முடிவு (Cavalli Sforza and others: The History and Geography of Human Genes, 1994).

3. ஏறத்தாழ மாந்தனையொத்த "முன்மாந்த இனங்கள் தோன்றிச் சில பல இலட்சம் ஆண்டுகள் வாழ்ந்து பின்னர் முற்றிலும் அழிந்தொழிந்து விட்டன. அவற்றுள் ஹோமோ எரக்டஸ் என்ற இனமும் அடங்கும். அது மட்டுமே ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறிப் பிற கண்டங்களிலும் பரவியிருந்தது. குரோமக்னான் மனிதன், பீகிங் மாந்தன், சாவகமாந்தன், அத்திரம்பாக்கம் பாசில் மாந்தன் ஆகியவர்கள் (ஏறத்தாழ 3 இலட்சம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர்கள்) இந்த ஹோமோ எரக்ட்ஸ் வகையைச் சார்ந்தவர்களே ஐரோப்பாவில் 40,000 ஆண்டுகளுக்கு முன் வரை வாழ்ந்து பின்னர் அடியோடு அழிக்கப்பட்டுவிட்ட நியான்டர்தல் (Neandarthal) இனமும் முன்மாந்த இனமே. இந்த "முன்மாந்த" இனங்கள் எவற்றிடையேயும் "மொழி" உருவாகவே இல்லை (None of them had the faculty of speech)

4. இப்பொழுதுள்ள மாந்தர்களாகிய நம் மாந்த இனம், (AMH) கடந்த ஒன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்காவில் தோன்றி உலகெங்கும் பின்வருமாறு பரவியது - அதாவது:

| | | |
|---|---|---|
| ஆத்திரேலியாவுக்கு இன்றைக்கு | 60,000 | ஆண்டுகளுக்கு முன்னரும் |
| சைபீரியாவுக்கு | " 30,000 | " |
| ஐரோப்பாவுக்கு | " 40,000 | " |
| வட/தென் அமெரிக்காவுக்கு | " 30,000-12,000 | " |
| சப்பானுக்கு | " 30,000 | " |
| நியூகினி தீவுக்கு | " 32,000 | " |
| பசிபிக் தீவுகளுக்கு (மைக்ரோனிசியா, பாலினீசியா) | " 4,000-1000 | " |

பரவினர் என்பது வல்லுநர் கருத்து ஆகும். காண்க: (நூல் இறுதியில் உள்ள நிலப்படம்).

5. கண்டங்கள் நகர்வுக் (Continental drift) கொள்கையின்படி கண்டங்கள் கடந்த 25 கோடி ஆண்டுகளாகப் பிரிந்து நகர்ந்துள்ளன. எனினும் உலகில் இன்று உள்ள கண்டங்கள் எல்லாம் ஏறத்தாழ இப்போதுள்ள உருவை ஏறத்தாழ ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன்னரே அடைந்துவிட்டன. அதற்குப் பின்னர், கண்டம் அளவுக்கு (Continental proportions) பெரு நிலப்பகுதி எதுவும் கடலுக்குள் மூழ்கவில்லை. ஆயினும் பனியூழி முடிவில் கி.மு. 8000 வாக்கில் (பனிக்கட்டி உருகி கடல் மட்டம் சுமார் 300 அடி உயர்ந்ததால் உலகமெங்கும் கடலோரப் பகுதியாகிய கண்டத்திட்டு (Continental Shelf) ஏறத்தாழ - இருநூறு கல் அளவுக்குக் கடலுள் மூழ்கியது. அவ்வாறு அக்காலக் கட்டத்தில் தமிழகத்தைச் சுற்றியும் (தென் திசை உட்பட) சில நூறு மைல் தொலைவு கடலுள் மூழ்கி யிருக்கலாம். அவ்வாறு மூழ்கிய நிலப்பகுதியையே சங்க இலக்கியங்களும் களவியல் உரையும் சுட்டுகின்றன என்பதே இன்றைய அறிவியலுக்குப் பொருந்துவதாகும். ஆப்பிரிக்காவிலிருந்து தற்கால மாந்தன் ஏறத்தாழ 70,000 ஆண்டுகட்கு முன்னர் ஆத்திரேலியா, மேற்கு ஆசியா போன்ற பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றது தென்னிந்தியா வழியாக இருக்கலாம். ஜியாகிராபிகல் மாகசீன் செப்டெம்பர் 2006 இதழில் தற்கால மாந்தர் ஆப்பிரிக்காவை விட்டுத் தென்னிந்தியாவையொட்டிய கண்டத்திட்டு வழியாகப் புலம் பெயர்ந்து சென்ற பாதையைக் காட்டும் நிலப்படம் உள்ளது. அக்காலக்கட்டத்தில் இப்பொழுது உள்ளது போலவே எல்லாக் கண்டங்களும் இருந்தனவெனினும் நிலப்பகுதி சில நூறுமைல் விரிவாக இருந்திருக்கும். இந்தியக் கரை சார்ந்த கண்டத்திட்டுப் பகுதியில் அதாவது கரையோரக் கடற்பகுதியில் (Continental Shelf) ஆழ்கடல் அகழாய்வு செய்தால் இது பற்றிய சான்றுகள் கிடைக்கலாம் என்று கூறுகிறார் பிளெமிங் (2004).

6. இன்றைய மாந்தனிடம் உள்ளவை 23 X 2 குரோமொசோம்கள். அவற்றில் அடங்கிய மரபணுக்கள் (Genomes) எண்ணிக்கை 30,000. நமது மரபணுக்களுக்கும் சிம்பன்சி மரபணுக்களுக்கும் 98.50 விழுக்காடு ஒற்றுமை உண்டு. (ஒன்றரை விழுக்காடே மரபணு நிலையில் சிம்பன்சியிலிருந்து மாந்தன் வேறுபட்டவன் என்றாலும் மாந்தன் எவ்வளவு மாபெரும் கொடுமையான உயிரியாக மாறி விட்டான்!).

7. கண்டங்கள் நகர்வுக்கொள்கை, மற்றும் கண்டங்களின் கடலோரப் பகுதிகள் கடலுள் மூழ்கிய செய்தி, குமரி முனைக்குத் தெற்கில் நிலப்பகுதிகள் கடல்கோளில் மூழ்கிய செய்தி, ஆகியவற்றின் அடிப்படையில் சங்க நூற்களிற் காணும் கடல்கோள் செய்திகளை இன்றைய அறிவியலுக்கேற்ப விளக்க வேண்டியுள்ளது. குமரிமுனைக்குத் தெற்கில் நிலப்பகுதிகள் கடல்கோளில் மூழ்கிய செய்தியைக் கலித்தொகை 104ம், சிலப்பதிகாரம் காடுகாண் காதையும் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியத்தின்

முதல் உரைகாரர் ஆகிய (கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த) இளம்பூரணரும் இதைக் குறிப்பிடுகிறார். அவருக்குப் பின்னர் வந்த அடியார்க்கு நல்லாரும் இச்செய்தியை மேலும் விரிவுபடுத்தி, சற்று மிகைப்படுத்திக் கூறுகிறார். பண்டைத் தமிழிலக்கியம் கூறும் இக்கடல்கோள் செய்தியைப் பற்றி எழுதப்பட்டுள்ள ஆய்வுரைகள் வருமாறு:

(i) ச.சோமசுந்தரபாரதி (1913) தமிழ்ப் பண்டை இலக்கியங்களும் தமிழகமும், *சித்தாந்த தீபிகா XIV*

(ii) வி.ஜே. தம்பி பிள்ளை (1913) "மாணிக்கவாசகர் தொன்ம வரலாறு" *தமிழியன் ஆன்டிகுவாரி II - 1*

(iii) மறைமலையடிகள் (1930): மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்

(iv) ஏ.எஸ். வைத்தியநாத ஐயர் (1929): "கீழைநாடுகளின் பிரளயத் தொன்மங்கள்" : *பம்பாய் வரலாற்றுக் கழக ஜர்னல் II -1*

(v) ஜே. பெரியநாயகம் (1941): மனுவின் பிரளயம் : *தி நியூ ரிவியூ XI*

(vi) ஹீராஸ் பாதிரியார் (1954): *தொல் இந்தோ நண்ணிலக்கரை நாகரிக ஆய்வுகள்,* இயல் IV பக். 411-439

*சதபதபிராமணம்* 1,8 முதலியவற்றில் கூறப்படும் "மனு பிரளயம்" திராவிடத் தொன்மத்திலிருந்து உருவாகியது என (iii) உம் (iv) உம் கூறுகின்றன. சுமெரியப் பிரளயக் கதை கூடப் பழந்தமிழ்க் கடல்கோள் தொன்மத்தி லிருந்து உருப்பெற்றதே என (i) ம் (iv) ம் கருதுகின்றன.

8. இந்திய மாக்கடலில் பழங்காலத்தில் ஒரு கண்டம் இருந்தது; அது கடலில் மூழ்கிவிட்டது என்று 19ஆம் நூற்றாண்டு இறுதியில் ஹேக்கலும் வேறு சிலரும் கருதி அதற்கு "லெமூரியா" என்ற பெயரையும் இட்டனர். ஆனால் இன்றுள்ள அறிவியலறிஞர்களின் ஒருமித்த கருத்து என்ன? 'கண்டம் அளவுக்குப் பெரிய நிலப் பரப்பு எதுவும் எந்தக் காலத்திலும் கடலுள் மூழ்கிடவில்லை' என்பதே அவர்கள் முடிவு எனக் கண்டோம். காந்திரதாவ் தமது *முக்கடற்புதிர்கள்* நூலில் இதை 1974லேயே சுட்டியுள்ளார். எனினும் இதை யாரும் கண்டுகொள்வதிலை!

> "தொன்மை நாகரிகங்களைப் படைத்த மாந்த இனங்களைக் கொண்டிருந்த (கண்டம் போன்ற) பெருநிலப்பரப்புகள் எவையும் எந்தக் காலத்திலும் இந்திய, பசிபிக், அட்லாண்டிக் பெருங் கடல்கள் எவற்றிலும் இருந்திருப்பதற்கான வாய்ப்பு அறவே இல்லை எனலாம்"
>
> "It is highly improbable that big land masses, inhabited by large numbers of people who created ancient civilisations ever existed in the Indian, Pacific or Atlantic Oceans''. (p. 267)

இப்பொழுது அறிவியல் ஏற்றுள்ளது கண்ட நகர்வு, மற்றும் பூமிப்பாளங்கள் கோட்பாடே (Continental drift, and Plate Techtonics)யாகும். இதனை விளக்கும் உலகப் படங்கள் இரண்டைப் புத்தக இறுதியில் காண்க.

9. ஆயினும் கி.மு. 8,000ஐ ஒட்டி உர்ம் (WURM) பனியூழி இறுதியில் கடல் மட்டம் உயர்ந்து உலகெங்கும் ஏறத்தாழ இருநூறு முந்நூறு கல் அளவுக்குக் கடற்கரைப் பகுதி கடலில் மூழ்கிவிட்டது என்பதை இப்புதிய கோட்பாடும் ஏற்றுக்கொள்கிறது. அக்கடல்கோள் காலத்திற்கு முன்னர் இந்துப் பெருங் கடலிலுள்ள தீவுகள் மூலமாக ஆப்பிரிக்காவையும் தென்னிந்தியாவையும் இணைத்த வால் போன்ற நிலப்பகுதிகளும் சில (பின்னர் மூழ்கி விட்டவை) இருந்திருக்கலாம் எனவும் சிலர் கருதுகின்றனர். (வால்டர் பேர்சர்வீஸ்; The Roots of Ancient India, 1971). இலெமூரியாக் கண்டக் கொள்கை நிலவி வந்த காலத்திலும் கூடச் சோமசுந்தரபாரதி, மயிலை சீனி வேங்கடசாமி, எம்.ஆரோக்கியசாமி போன்ற சிறந்த அறிஞர்கள் குமரிக்குத் தெற்கில் கடலுள் மூழ்கிய பகுதி கண்டம் அளவினதன்று; சிறு நிலப்பகுதியாக இருக்கலாம் என்றே குறிப்பிட்டுள்ளனர். கா.அப்பாத்துரையாரும் 'கடல் கொண்ட தென்னாடு' என்று குறிப்பிட்டதை உணர்க. இப்பொழுது இலெமூரியாக் கண்டக் கொள்கை ஆதாரமற்றது என்று நிறுவப்பட்டு விட்டதைச் சாக்காக வைத்துக் கொண்டு சுமதி இராமசாமி தனது கற்பனைப் புவியியலாளர்களும், பேரழிவு வரலாறுகளும்; மூழ்கிவிட்ட இலெமூரியா: Fabulous geographers, catastrophic Histories: The Lost Lemuria (2004 : பெர்மனெண்ட் பிளாக், டெல்லி) என்னும் நூலில் "கடல்கொண்ட தென்னாடு" பற்றி எழுதிய தமிழறிஞர்கள் அனைவரையும் தாக்கி ஏளனம் செய்துள்ளார்.

10. 1950களுக்குப் பின் "லெமூரியாக் கண்டக் கொள்கையை அறிவியல் அறவே கைவிட்டு விட்டது என்பது உண்மைதான். ஆனால் சுமதி இராமசாமி ஒன்றைக் குறிப்பிட மறுக்கிறார். அது என்ன? *கலித்தொகை, சிலப்பதிகாரம்,* பிற்கால உரையாசிரியர் நூல்கள் சுட்டும் கடல் கொண்ட தென்னாடு சிறிய அளவினதாக இருந்திருக்கலாம் என்று தமிழக அரசு 1972இல் வெளியிட்ட *தமிழ்நாட்டு வரலாறு — தொல் பழங்காலம்* போன்ற நூல்கள் குறிப்பிடுவதை அவர் கண்டு கொள்ளவில்லை. அன்றைய 'நாடு' என்பது 'இந்தியா' 'தமிழ் நாடு' போன்ற பெருநிலப் பகுதியன்று. இன்றைய வட்ட (தாலுகா) அளவிற்குள் கூட இரண்டு - மூன்று நாடுகள் உள்ளனவே. உரையாசிரியர்கள் குறித்த 49 நாடுகளும் சேர்ந்து கண்டம் அளவுக்கு இருந்திருக்க வேண்டியதேயில்லை. முன் பத்தியில் கூறியது போல கி.மு.8,000ஐ ஒட்டிக் கண்டத்திட்டுப்பகுதி கடலில் மூழ்கியதையே சங்க நூல்களில் உள்ள கடல்கோள் செய்திகள் கூறுவதாகக் கொண்டால் இன்றைய அறிவியல் பார்வைக்கு, சங்க இலக்கியக் கடல்கோள் செய்தி முற்றிலும் இசைவதேயாகும் என்பது தேற்றம். (காண்க பி.இராமநாதன் 1998, 2003, 2004).

11. இவ்வாறு தமிழ், தமிழர் செய்திகளைக் கொச்சைப்படுத்தி எழுதுவது இவ்வாசிரியருக்கு வழக்கமானதே. தி இந்தியன் எகனாமிக் அண்ட் சோசியல் ஹிஸ்டரி ரிவியூ 38-2 ஏப்ரல் - சூன் 2001 இதழில் சுமதி இராமசாமி "இனங்களின் எச்சங்கள்: தொல்லியல் (தமிழ்த்) தேசிய உணர்வு, சிந்துவெளி நாகரிகத்தின்பால் ஈர்ப்பு" என்று ஒரு கட்டுரை எழுதினார். சிந்து வெளி நாகரிகமும் அந்நாகரிக முத்திரை எழுத்துக்களும் திராவிடம் (தொல்தமிழ்) சார்ந்தவையே என்று சிறந்த ஆய்வாளர்கள் கமில் சுவெலபில் (1990: திராவிட மொழியியல் - ஓர் அறிமுகம், இயல் 6: திராவிட மொழிகளும் ஹாரப்பா மொழியும்) அஸ்கோ பர்போலா *ப்ரண்ட்லைன்* அக் 24,2000) கருதுவதையெல்லாம் அக்கட்டுரையில் சுமதி இராமசாமி கண்டுகொள்ள வில்லை. சிந்துவெளி நாகரிகத்தின் தமிழ்ச் சார்பை வலியுறுத்தும் தமிழறிஞர் களையெல்லாம் (பர்போலா, பார்சர்வீஸ், சுவலெபில் போன்றவர்கள் ஆய்வுகளின் அடிப்படையில் எழுதுபவர்கள் உட்பட) அவர் எள்ளி நகையாடியுள்ளார்.

12. கி.பி. 2000இல் உலக மக்கள் தொகை 600 கோடி (இந்தியா 100 கோடி உட்பட). பழங்காலத்தில் மக்கள் தொகை மிகக் குறைவு என்பதை நினைவிற் கொள்வது நல்லது. *சையண்டிபிக் அமெரிக்கன்* 1960 செப்டெம்பர் இதழில் உலகில் அவ்வப்பொழுது இருந்த மாந்தத் தொகையை ஈ.எஸ்.டீவி. (இளையவர்) கணக்கிட்டார். அவரும் வேறு சிலரும் தரும் விவரங்களை ஒருங்கிணைத்துப் பின்வருமாறு தரலாம்:

| இற்றைக்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் என்பது | உலக மக்கள்தொகை | அவர்களுள் இந்தியர் |
|---|---|---|
| 70,000 | 58,000 (கவாலி ஸ்போர்சா) | |
| 10,000 | 53 இலட்சம் | |
| கி.மு. 500 | 10 கோடி | 1 கோடி |
| கி.பி.1 | 20 கோடி | 2 கோடி |
| கி.பி. 1600 | 65 கோடி | 15 கோடி |
| கி.பி. 1881 | 140 கோடி | 25 கோடி |
| கி.பி. 1970 | 350 கோடி | 55 கோடி |
| கி.பி. 2000 | 600 கோடி | 100 கோடி |

(i) கி.பி. 500 முதல் கி.பி. 1881 வரை, மேலே இந்திய (அதாவது பாகித்தான், வங்காளதேசம் உள்ளிட்ட 1947க்கு முந்திய இந்தியப்பரப்பின்) மொத்த மக்கள் தொகையாகக் குறித்துள்ளவை ரோமிலா தாபர் : பண்டைய இந்தியாவின் பெங்குயின் வரலாறு (2002) நூலிற் கண்டவை.

(ii) கோலாலம்பூரில் 1966 ஏப்ரலில் நடந்த *முதல் உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்பு* 1969 ஏப்ரலில்

வெளிவந்தது. அக்கட்டுரைகளில் ஒன்று எம்.ஈ. மாணிக்கவாசகம் பிள்ளை எழுதிய 'சங்க காலத்தில் தமிழக மக்கள் தொகை' என்பதாகும். தற்போதைய கேரளம் சங்க காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியே. 1911 சென்சஸ்படி தற்போதைய தமிழ்நாடு + கேரளம் மொத்த மக்கள் தொகை 2.80 கோடியாக (2.01+0.79) இருந்தது (கி.பி.1இல் மொத்த உலக மக்கள் தொகையை 20 கோடியாகக் கொண்டு) 1911 தமிழ்நாடு+கேரளா மக்கள் தொகை 2.80 கோடியைப் படிப்படியாகக் குறைத்துக் கணக்கிட்டு (சங்ககால) தமிழக மக்கள் தொகையைப் பின்வருமாறு கணக்கிட்டுள்ளார் மாணிக்கவாசகம்:

| | |
|---|---|
| கி.பி. 1 | 36 இலட்சம் |
| கி.பி.300 | 50 இலட்சம் |

கி.மு. 300இல் தமிழக மக்கள் தொகை 36 இலட்சத்துக்கும் குறைவாக இருந்திருக்கும். ஆக கி.மு. 300 முதல் கி.பி. 300 முடிய அறுநூறு ஆண்டு களுமே அன்றைய தமிழக (வேங்கடத்திற்குத் தெற்கே தென்னிந்தியா) மக்கள் தொகை எந்தக் காலக்கட்டத்திலும் சுமார் 25 இலட்சத்துக்கும் 50 இலட்சத்துக்கும் இடைப்பட்ட ஒரு எண்ணிக்கையில் தான் இருந்திருக்கும். (அதாவது இன்றைய சென்னை நகர மக்கள் தொகை 40 இலட்சத்துக்குக் கொஞ்சம் கூடக் குறைய இருந்து இருக்கும்) இன்றைய தமிழகப் பரப்பின் அன்றைய மக்கள் தொகை 30 இலட்சம் என்க. மொத்த மக்கள் தொகை சங்ககாலத்தில் அவ்வாறு மிகக் குறைந்ததாக இருந்ததுடன் போக்குவரத்து வசதிகளும் மிக மிகக் குறைவாக இருந்திருக்கும். (கி.மு. 10000த்தில் தென்னாட்டு மக்கள் தொகையும் இந்திய மக்கள் தொகையும் எப்படியானாலும் முறையே 5 இலட்சத்துக்கும் 10 இலட்சத்துக்கும் குறைவாகவே இருந்திருக்கும்.)

## இயல் - 3

# மொழியின் தோற்றமும் பரவலும்

முன்மாந்த இனங்கள் அனைத்தும் பேச்சாற்றல் அற்றவை; அவர்களிடையே மொழி உருவாகவில்லை; ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய தற்கால மாந்த இனத்திடையே (AMH) மட்டுமே ஏறத்தாழ 50000 ஆண்டுகட்கு முன்னர் மொழி உருவாகியது என்பது இன்றைய பலதுறை அறிவியலாளரின் ஒருமித்த முடிவாகும். இன்று பின்வரும் விவரப்படி ஏறத்தாழ 6000 மொழிகள் உலகில் பேசப்பட்டு வருகின்றன:

| ஒவ்வொரு மொழியையும் பேசுநர் எண்ணிக்கை | மொழிகள் எண்ணிக்கை | பேசுவோர் தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| (i) 10 கோடிக்கு மேல் | 8 (சீனம், ஸ்பானிஷ், ஆங்கிலம், இந்தி, வங்காளி, போர்ச்சுகீசு, ரசியன், சப்பானியம்) | 240 |
| (ii) 1-10 கோடி (6 கோடி பேர் பேசும் தமிழ் இப்பிரிவில் அடங்கும்) | 72 (இந்த 72 மொழிகளையும் மற்றும் அடுத்த நிலை (iii) 239 மொழிகளில் 'பேசுவோர் எண்ணிக்கை' அடிப்படையில் முதல் 162 மொழிகளையும் சேர்த்து மொத்தம் 234(72+162) மொழிகள் பேசுவோர் எண்ணிக்கை) | 336 |
| (iii) 10 இலட்சம்-1 கோடி | 239 | |
| (iv) 1 - 10 இலட்சம் 795<br>10,000-1 இலட்சம் 1,605 | 2400 ((iii)இல் எஞ்சிய 77 (239-162) மொழிகளையும் (iv) (v)இல் குறித்த 5740 மொழிகளையும் பேசுவோர் எண்ணிக்கை | 24 |
| பத்தாயிரம் பேருக்குக் குறைவு | | |
| 1000-9999 1782 | | |
| 100-999 1075 | | |
| 10-99 302 | | |
| 1-9 181 | | |
| | 3340 | |
| மொத்தம் | 6059 மொழிகள் | 600 கோடிமக்கள் |

(இந்தி, மைதிலி, இராஜஸ்தானி முதலியவற்றை ஒரே இந்தி மொழியாகக் கொள்வதா? தனித்தனி மொழிகளாகக் கொள்வதா? இது பற்றி எல்லாம் மொழியியலாளரிடம் கருத்து வேறுபாடு உண்டு. 6000 அல்லது 6059 என்பதெல்லாம் ஒரு குத்துமதிப்பேயாகும். இந்த 6059 மொழிகளில் 4 விழுக்காடு ஆகிய 242(8+72+162) மொழிகளைப் பேசுவோர் எண்ணிக்கையான 576 கோடியானது மொத்தம் 600 கோடி மக்களுள் 95 விழுக்காடு ஆகும். மீதி 96 விழுக்காடு ஆகிய 5817 மொழிகளைப் பேசுவோர் வெறும் 24 கோடி மக்களேயாவர் (அறுநூறு கோடியில் அவர்கள் வெறும் நான்கு விழுக்காட்டினரேயாவர்.)

2. இந்த 6000 மொழிகளில் 2560 மொழிகளை மொழியமைப்புக் கூறுகளின்படி (ஒலியனியல், சொல்லியல், சொற்றொடர் அமைப்பு போன்ற கூறுகளின்படி) பாகுபாடு செய்து மார்டின் ஹாஸ்பெல்மாத் மற்றும் மூவர் The World Atlas of Language Structures என்ற நூலை (ஆக்ஸ்போர்டு; 2005; பக். 695 விலை $325) அண்மையில் வெளியிட்டுள்ளனர்)

3. இன்று உலகில் உள்ள மொழிகள் அனைத்தும் ஒரே முதன் மொழியிலிருந்து தோன்றியிருக்க வாய்ப்புண்டு என்ற கொள்கை 19ஆம் நூற்றாண்டின் மாக்ஸ்முல்லருக்கும் இசைவானதே. 20ஆம் நூற்றாண்டில் ஞால முதன் மொழி ஆய்வில் ஈடுபட்ட மேனாட்டறிஞர்கள் பெதர்சன், திராம்பெத்தி, சுவாதிசு, கிரீன்பெர்க், மெரிட் ரூலன், இல்லிச் சுவிதிச், தால்கோபால்ஸ்கி, செவரோஸ்கின், ஸ்தாரோஸ்தின், பாம்ஹார்டு மற்றும் கெர்ன்ஸ், ஜான்பெங்ட்சன், வாக்லாவ் பிலாசக் போன்ற பலர் பல்வேறு மொழிக் குடும்பங்களையும் ஒரு சில பெருங்குடும்பங்களுக்குள் (Macro Families) அடக்குகின்றனர் என்பதை மேலே முதல் இயலில் கண்டோம்.

4. ஞால முதன்மொழி ஆய்வாளர் மெரிட் ரூலன் தனது மொழிகளின் தோற்றம்-மொழிகளின் கொடிவழி ஆய்வு ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம், 1994 நூலின் பக்கம் 277 இல் கூறுவது வருமாறு:

> **பெரும்பாலான மொழியியலறிஞர்கள் ஒத்துக்கொள்ளாவிடினும் அல்லது ஐயப்பாட்டுடன் கருதினும் இன்றுள்ள மொழிகள் அனைத்தும் (இன்று இறந்துவிட்ட ஆனால் முன்னர் நிலவியதற்குச் சான்றுகள் கிட்டியுள்ள மொழிகள் உட்பட) ஒரே ஞால முதன்மொழியிலிருந்துதான் தோன்றின என்பதற்கு வலுவான ஆதாரம் உள்ளது.**

அந்நூலின் பக்கங்கள் 277-366 இல் 27 முக்கியமான கருத்துகளுக்குப் பல்வேறு மொழிக்குடும்பங்களிலும் உள்ள சொற்கள் (Global Etymologies) தரப்பட்டுள்ளன. அக்கருத்துக்களுக்கு ஞால முதன் மொழியில் என்ன வேர்ச் சொல் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க அது முன்னோடியாகும்.

அவற்றுள் பலவற்றுக்கு (ஏறத்தாழ 17க்கு)த் தமிழ்ச் சொற்களே பொருள் பொதிந்தனவாகவும் ஞாலமுதன்மொழியின் வேர்ச்சொல் வடிவை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன: "தமிழே இயன்மொழி" எனப் பாவாணர் செப்பியதை இது மெய்ப்பிக்கிறது)

| ஞால முதன் மொழி வேர் | திராவிடச் (தமிழ்) சொல் |
|---|---|
| 1. AJA (Mother, older female relative) | ஆய் : Mother |
| 2. BU (N) KA (knee, to bend) | வாங்கு : to bend |
| 3. BUR (Ashes, dust) | பூழி : powder |
| 4. KOLO (hole) | ஒள் : to pierce, to make hole [குழி (மதிவாணன்2006)] |
| 5. KUAN (dog) | குக்கல்/குக்கன்(குரைப்பது) |
| 6. KUNA (woman) | பெண் - கிரேக்கம் gune [கன்னி (மதிவாணன்2006)] [4,5,6க்கு ரூலன் "திராவிட" மொழிச் சொல் தரவில்லை. மேலே தந்துள்ள தமிழ்ச் சொற்கள் இந் நூலாசிரியன் தந்தவையே] |
| 7. MAKO (child) | மகன் (-மழ=இளமை) |
| 8. MALIQA (so suck, suckle, nurse, breast. | மெல்லு(தல்) |
| 9. MANA (to stay in a place) | மன்னு(தல்) : to be permanent |
| 10. MANO (man) | மன் : (from மகன்) |
| 11. MENA (to think about) | முன்னு(தல்) : to think |
| 12. Pal (2) | பால் : part, portion |
| 13. PAR (to fly) | பற : to fly |
| 14. PUTI (vulva) | பொச்சு |
| 15. TEKU (leg, foot) | தாவு=: jump; (பர்ஜி: tak தாக்=நட) |
| 16. TIK (finger, one) | ஒண்ணு-ஒண்டி. தெலுங்கு-ஒகடி உரால் : odik |
| 17. TIKA (earth) | துகள் : dust. |

5. தமிழிய (திராவிட) மொழிகள் தனிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற செய்தியை 1816இலேயே பிரான்சிஸ் வைட் எல்லிஸ் நிறுவியிருந்தார்.

இராபர்ட் கால்டுவெல் பாதிரியார் 1856இல் தனது திராவிட அல்லது தென் இந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் மாபெரும் நூலை வெளியிட்டார். திருந்திய விரிவான இரண்டாம் பதிப்பில் (1875), ஒருபுறம் திராவிட மொழிகளுக்கும் மறுபுறம்,

இந்தோ-ஐரோப்பிய மொழிகள்
செமித்திய மொழிகள்
எலாமைட் மொழி
சித்திய (இப்பொழுது "உரால்-அல்தாய்க்") மொழிகள்
சப்பானிய மொழி
ஆஸ்திரேலியப் பழங்குடிகள் மொழிகள்

ஆகியவற்றுக்கும் இடையே காணும் இலக்கண ஒப்புமைகள், சொல் ஒப்புமைகள் ஆகியவற்றைப் பற்றி ஏராளமான தகவல்களை அவர் தந்தார். இம்மொழிக் குடும்பங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரியுமுன்னர் இருந்த (மாந்தன் தொன்மொழியின்) நிலையை விளக்குவதற்கான ஒளியைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளிலிருந்துதான் பெற்றாக வேண்டும் என்பதை அத் தகவல்கள் வலுவாக நிறுவின. இந்தப் பார்வையில் திராவிட (தமிழிய)மொழிகளின் முக்கியத்துவத்தைக் கால்டுவெல்லுக்கு முன்னர்க் கண்டுபிடித்து வெளியிட்டவர் எவரும் இலர்.

6. தனது தமிழ்மொழிக் கையேடு (1855) நூலில் ஜி.யூ.போப் - உம் இதைச் சுட்டியுள்ளார்: "(தமிழிய, அதாவது திராவிட மொழிகள் சமஸ்கிருதம் தோன்றிய காலத்தில் தோன்றியதும், சமஸ்கிருதம் எந்த முன்மொழியிலிருந்து தோன்றியதோ அதே முன்மொழியிலிருந்தே தோன்றியதும் ஆன ஒரு மொழியிலிருந்து உருவாகிப் பின் பிரிந்தவை ஆகும். அந்தத் தமிழிய மொழிகளுக்கும் (இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த) கிரீக், காதிக், பாரசீகம் முதலிய மொழிகளுக்கும் இடையே ஒப்புமை இருந்ததைக் காட்டும் பல சான்றுகள் உள்ளன. சமஸ்கிருதத்துக்கும் தமிழிய மொழிகளுக்கும் ஒப்புமை இல்லாத நேர்வுகளிலும் கூட அத்தகைய ஒப்புமைகள் உள்ளன)".

7. கால்டுவெல் கோடிட்டுக் காட்டியதை மேலும் நுணுகி ஆராய்ந்து "மாந்த இன முதன் மொழி ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும்; மிகு தொன்மை வாய்ந்த தமிழே அனைத்து மொழிக் குடும்பங்களுக்கும் (இந்தோ-ஆரிய மொழிகள் உட்பட) மூலமான மொழியாகக் கருதப்பட வேண்டும்" என்ற கோட்பாட்டை,

மாகறல் கார்த்திகேய முதலியார் 1913லும்
கா.சுப்பிரமணிய பிள்ளை 1920களிலும்

மேலும் விரிவாக, ஆழமாக

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1930, 1940களிலும்
ஞா.தேவநேயப் பாவாணர் 1940-1980 காலக்கட்டத்திலும்

நிறுவியுள்ளனர்.

8. 1884ஆம் ஆண்டிலேயே விட்னி, எட்கிரன் (Whitney and Edgren) ஆகியோர் பாணினியின் தாது பாடத்தில் கண்டுள்ள 1750 "வேர்களுள் பெரும்பாலானவை உன்னிப்பில் உருவானவை" என்றனர்: "தாது பாட வேர்களில் பாதியை-ஏன் பாதிக்குமேல்-எந்தக் காலத்திய சமஸ்கிருத நூலிலும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இனியும் கண்டுபிடிக்கப் போவதில்லை". (More than half-actually more than half -of them never have been met with, and never will be met with in the Sanskrit literature of any age. Whitney 1884. "The study of Hindu Grammar and the study of Sanskrit'' American Journal of Philosophy; 5; pp 279-97). விஸ்வநாத் காய்ரே (2003) கூற்றையும் காண்க:

"சமஸ்கிருத வேர்ச்சொற்கள் என்று கூறப்படுபவை சொற்களுக்குப் பொருத்தமாகக் கற்பிக்கப்பட்டவையே. சொல்லின் மெய்யான (அல்லது கற்பனை செய்த) பொருளுக்கு ஏற்ப அந்த வேர்களுக்கும் பொருள் கற்பித்தனர். இப்படித்தான் சூர்யா என்பதற்கு சு=அசைவு; சூ=ஊக்குவி, என இரண்டு வேர்களைக் கற்பித்தனர்.

"வேத சமஸ்கிருதம் இந்தியாவில் உள்நாட்டு (தமிழிய) மொழிகளைப் பேசுவோர் பெரும்பாலாராக வாழ்ந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட மொழி. எனினும் உள்நாட்டு மொழிச் சொற்களின் தாக்கம் இருந்திருக்கும் என்பதை ஒரு கருதுகோளாகக் கூட மனதிற்கொள்ள மறுக்கும் நிலை உள்ளது. அத்தகைய ஆய்வுகளில் ஈடுபடுவாரும் இலர்".

"(Roots, particularly in the Sanskrit etymological tradition are phonetic abstractions from words. They are assigned meanings to be consistent with the known or imagined meanings of the word. That is how a familiar word like Surya could be derived from the two roots *su*, to move and *sū*, to stimulate

"In spite of the acceptance of the premise that Vedic Sanskrit was developed in India in an environment of indigenous languages, etymological relations of Sanskrit words with those in the Indian languages have not been even conceptually considered, let alone being investigated'')

பாவாணர் தமது *வடமொழி வரலாறு* நூலின் 190-295 ஆம் பக்கங்களில் விட்னி, காய்ரே முதலியவர்கள் சம்ஸ்கிருத தாது பாட வேர்ச் சொல்களைப் பற்றிக் கூறியது முற்றிலும் உண்மை என்பதை விரிவாக விளக்கியுள்ளார். இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்ப மொழிகளின் (ஏன், பிறமொழிக் குடும்ப மொழிகளிலும்தான்) அடிப்படைச் சொற்கள் பலவற்றுக்கு

ஞானப்பிரகாசரும் பாவாணரும் நூற்றுக்கணக்கான பொருத்தமான தொல்-திராவிட வேர்ச் சொற்களை இனம் காட்டியுள்ளார். ஞானப்பிரகாசர் 1953இல் தெரிவித்த கருத்து வருமாறு:

> "இந்தோ ஐரோப்பிய மொழிகளில் 'வேர்கள் என உன்னிக்கப் படுபவை பொருள் தொடர்பற்ற வெறும் குறியீடுகள்தாம். திராவிட மொழி வேர்களோவெனில் ஐயத்திற்கிடமின்றிப் பொருளையும் காரணத்தையும் காட்டுபவையாக உயிரோட்ட முள்ள முளைக்கரு போலத் தோன்றும்; எந்தக் கருத்தோட்டத்தில் பல்வேறு சொற்கள் உருவாயின என்பதைத் தெற்றென அவை காட்டும் வகையில் அமைந்துள்ளன. இத்தன்மை அவற்றுக்கு இல்லாததால் இந்தோ ஐரோப்பிய "வேர்கள்" இருள் மண்டிய பொருளற்ற வெறும் ஒலிக்குவியல்களாகவே தோன்றும். அவற்றுக்கும் தெளிவு தந்து ஒளிகாட்டி உயிரூட்டம் தரக் கூடியவை திராவிட மொழி வேர்கள்தாம்."

பிறமொழி வேர்களுக்கும் இக்கருத்து பெரும் அளவுக்குப் பொருந்துவதாகும். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரி இதழில் (1929) ஞானப்பிரகாசர் "மொழியின் தோற்றம்" என்ற கட்டுரையில் "இந்தோ ஐரோப்பிய மொழிகளின் தந்தையாகிய தொன் மொழியின் தோற்றத்திற்கான ஆதாரங்கள் தமிழில்தான் கிட்டும்" என முழங்கியிருந்தார். (Tamil supplies this long looked for clue to finding the true origin of the proto indo-European language.)

9. திராவிட மொழிகளுக்கும் பிற மொழிகளுக்கும் இடையேயுள்ள உறவுகள் குறித்து இதுவரை பின்வரும் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன.

## நாஸ்திராடிக்/யூரேசியாடிக் பெருங்குடும்பம்

1. **திராவிடமும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளும்** — **கால்டுவெல், போப், ஞானப்பிரகாசர், தேவநேயன், இளங்குமரன், மதிவாணன், இலியிச்-சுவிதிச், அருளி, அரசேந்திரன், ஸ்டெபான் ஹில்யர் லெவிட்**

(பாவாணர் தமது ஆய்வு நூல்களில் கண்டு நிறுவியுள்ள தமிழ்-இந்தோ ஐரோப்பிய/ஆரிய ஒப்புமைச் சொற்களில் நூற்றுக்கணக்கானவை (reasonable and perceptive) என்று முனைவர் ஸ்டெபான் ஹில்யர் லெவிட் இந்தோ ஐரோப்பிய *(மொழியியல்)* ஆய்விதழில் (மடலம் 28:3-4;2000 சூன் - திசம்பர் பக்கம் 407-438இல்) வெளியிட்ட தம் கட்டுரையில் ஏற்றுள்ளார். மேலும் 2000இல் வெளியான *"இந்தோ ஐரோப்பிய மொழிகளும் அவற்றொடு நெருங்கிய உறவுடையனவும்: யூரேசியாடிக் மொழிப் பெருங்குடும்பம்: மடலம் I இலக்கணம்"* என்னும் நூலில் கிரீன்பெர்க் யூரேசியாடிக் பெருங் குடும்பத்தின் முக்கியமான இலக்கண ஒப்புமைகள் 72-ஐக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த 72 இனங்களில் 20க்கு மேற்பட்டவற்றுக்குத் திராவிட மொழிகளின் இலக்கணக் கூறுகளும் பொருந்தி வருகின்றன.)

| | |
|---|---|
| 2. திராவிடமும் உரால்-அல்தாய்க் மொழிக்குடும்பமும் | கால்டுவெல், பரோ, மெங்கெஸ், அந்திரனாவ், வாசக், ஹெச்.பி.ஏ. ஹகோலா, சாலெக் |
| 3. திராவிடமும் எலாம் மொழியும் (கி.மு. 3000க்கு முன்னர் மெசபொதாமியாவிற்குக் கிழக்கே எலாம் நாட்டில் பேசப்பட்டது) | மக்-அல்பின், கே.வி. சுவலெபில் |
| 4. திராவிடமும் சப்பானியமும் | சுசுமு ஓனோ; பொன். கோதண்டராமன், ஹெச்.பி, ஏ. ஹகோலா, சுவெலபில் |
| 5. திராவிடமும் கொரிய மொழியும் | ஹூல்பர்ட்; பவுன் துரை |
| 6. திராவிடமும் எத்ருஸ்கன் மொழியும் (கி.மு.1000-300 அளவில் இத்தாலியில் பேசப்பட்டது) | ஸ்டென் கோனோ; இரா.மதிவாணன் |

(கமில் சுவெலபில் 1990இல் வெளியிட்ட *திராவிட மொழியியல்* - ஓர் அறிமுகம் என்னும் நூலின் பக்கங்கள் 99-122இல் மேலே குறித்த 2-4 தொடர்புகள் பற்றி விரிவாக ஆராய்கிறார்; தொல் திராவிட மொழி, எலாமைட், தொல் உரால்-அல்டாய்க் மொழி, சப்பானிய மொழி ஆகியவை சுமார் கி.மு. 10,000க்கு முன்னர் ஒன்றாக இருந்து பிரிந்தவையாக இருக்கலாம் என்று கருதுகிறார்.)

## மொழிப் பெருங்குடும்பங்களில் ஏனையவை

| | |
|---|---|
| 7. திராவிடமும் சுமேரியா மொழியும் (கி.மு. 3000க்கு முன்னர்ப் பேசப்பட்டவை) | ஹீராஸ், ஏ.சதாசிவன், ஜே.வி.கின்னியர் வில்சன், ஹெச்.பி.ஏ.ஹகோலா. |
| 8. திராவிடமும் மிதன்னியும் (கி.மு.1500க்கு முன்னர் வடக்கு சிரியாவில் பேசப்பட்டவை) | ஜி.டபுள்யூ. பிரவுன் (1930) |
| 9. திராவிடமும் பாஸ்கு மொழியும் (ஸ்பெயின்) | ஹீராஸ், லாகோவரி, பெனான் ஸ்பிக்னு சாலெக். |
| 10. திராவிடமும் ஆப்பிரிக்க மொழிகளும் | செல்வி லிலியாஸ், ஹாம்பர்கர், டட்டில், ந்டியா (Ndiaye), உபாத்யாயா. |
| 11. திராவிடமும் ஆஸ்திரேலியப் பழங்குடிமக்கள் மொழிகளும் | நாரிஸ், பிரிச்சார்டு, ஆர்.எம். டபுள்யூ.டிக்சன், பி.இராமநாதன் (1984). |

இப்பழங்குடி மக்கள் கடந்த 8000 ஆண்டுகளுக்கு மேலாக உலகின் வேறெந்த மக்களுடனும் தொடர்பின்றி வாழ்பவர்கள். இவர்கள் மொழி களுக்கும் தமிழுக்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்புதான் தமிழின் தொன்மை பத்தாயிரம் ஆண்டுகட்கு குறையாதது என நிறுவ மறுக்கொணாச் சான்று ஆகும். (அடுத்த இயலைக் காண்க)

| | |
|---|---|
| 12. திராவிடமும் கொஷுவா மொழியும் (தென் அமெரிக்கப் பெரு நாடு) | டாக்டர் சீனிவாசன்: சாமன்லால், ஹகோலோ. |

[இச்செய்திகளை விளக்கும் உலகப் படத்தை நூல் இறுதியில் காண்க]

10. கிரீன்பெர்க் தமது 2000 நூலில் குறித்துள்ள யூரேசியாடிக் பெருங்குடும்பத்தின் முக்கியமான இலக்கண ஒப்புமைகள் 72-இல் திராவிட மொழிகளின் இலக்கணக் கூறுகளுடன் பொருந்தி வருவனவற்றின் பட்டியல் [வரிசை எண்கள் கிரீன்பெர்க் பட்டியலில் உள்ளபடி]:

(i) 1. தன்மைப் பிரதிப் பெயர் M; 3. தன்மைப் பிரதிப் பெயர் N; 6 முன்னிலை N; 21 தனிநபர் N.

திராவிட மொழிகளின் பிரதிப் பெயர்கள் வருமாறு

| | | பழந்தமிழ் | தற்காலத் தமிழ் |
|---|---|---|---|
| I | தன்மை ஒருமை/பன்மை | யான்;நான்/யாம்; | நான்/நாம்; |
| | வேற்றுமை ஏற்கும் வடிவம் | என்/எம் | என்/எம் |
| II | முன்னிலை ஒருமை/பன்மை | நீன்,நீ/நீம்; | |
| | வே.ஏ.வ. | நுன்/நும்;உன்/உம் | நீ/நீர் |
| III | படர்க்கை ஒருமை/பன்மை | தான்/தாம்; | தான்/தாம்; |
| | வே.ஏ.வ. | தன்/தம் | தன்/தம் |

திராவிட மொழிகள், எலாமைட், சீனமொழி, ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகள் போன்றவற்றில் பிரதிப் பெயர்கள் பெரும்பாலும் N(ன்) என்றே முடிகின்றன.

(ii). 8.1 பிரதிபெயர்/சுட்டு ; 9 சுட்டு அ-இ

பின்வரும் திராவிட மொழிச் சுட்டுகளும் வினாக்களும் ஒழுங்காக அமைந்திருக்கும் நேர்த்தியை 1856இலேயே சுட்டிக்காட்டிய கால்டுவெல் "சமஸ்கிருதத்துக்கு முந்திய நிலையில் இருந்த மிகமிகப் பழைய தன்மைகளை இன்றளவும் திராவிடம் தன்னிடத்தில் வைத்துள்ளது. அவை, அதுவும் குறிப்பாகச் சுட்டுகள் சமஸ்கிருதத்திடம் இருந்து கடன் பெற்றவை அல்ல. சமஸ்கிருதமும் மற்ற இந்தோ ஐரோப்பிய மொழிகளும் எந்த ஜாபெதிய (=தற்காலத்தில் இதைத் தொல்-இந்தோ-ஐரோப்பியன் என்பர்) வேர்களிலிருந்து தமது சுட்டுகளைப் பெற்றனவோ அவற்றுக்கு

இணையானவை இந்தத் திராவிட மொழிச் சுட்டுக்கள் ஆகும்" என்று பகர்ந்துள்ளார்.

| | முச்சுட்டுகள் | | | வினா |
|---|---|---|---|---|
| | அண்மை:இ | இடை:உ | சேய்மை:அ | யா அல்லது எ |
| ஆண்பால் -ஒருமை | இவன் | உவன் | அவன் | யாவன்/எவன் |
| பெண்பால்-ஒருமை | இவள் | உவள் | அவள் | யாவள்/எவள் |
| ஒன்றன்பால் | இது | உது | அது | யாது/எது |
| பலர் பால் | இவர் | உவர் | அவர் | யாவர்/எவர் |
| பலவின்பால் | இவை | உவை | அவை | யாவை/எவை |

(iii) 17. பன்மை த; 20 குழுமத்தைக்குறிக்கும் L

காண்க: தமிழ்ப் பன்மை ஒட்டு ஆர்/அர் [நெஞ்சு-நெஞ்சினார்; நல்ல-நல்லோர்/நல்லார்/நல்லர்] லெவிட் 1998: பக். 152.

குழுமத்தைக் குறிக்கும் L: காண்க தமிழ் *கள்;* தெலுங்கு *லு;* கன்னடம் *கலு.*

(iv) 25. உடைமைப் பொருள் N

பழந்தமிழில் "இன்" உடைமை, நெருக்கம் ஆகிய பொருள்களில் வருகிறது [பலவின் பயன்; கள்ளின் சாடி] லெவிட் (1998) பக்.152.

(v) 26. கொடைப்பொருள் ka

கொடைப்பொருள் (Dative) வேற்றுமையானது ஒரு பொருள் அல்லது நபர் பால் நெருக்கம் (allative) பொருளிலும் வரும். தமிழ் "அங்கு" - பேச்சு வழக்கில் "அங்க".

(vi) 34. தொகுப்புப் பொருள் ko(-N); ko-(m)

தேவநேயப்பாவாணர் இலத்தீன் cum; கிரீக் sum; சமஸ்கிருதம் sam./saha ஆகிய தொகுப்புப் பொருள் சொற்கள் தமிழ் "உம்-கும்"லிருந்தே உருவாகியுள்ளன என்று நிறுவியுள்ளார் [*செந்தமிழ்ச் செல்வி,* டிசம்பர் 1965]

(vii) 35 விளி E

திராவிட விளிகள் ஏ,ஓ காண்க.

(viii) 36 குறுமைப் பொருள் K:

தமிழில் குறுமைப் பொருள் தரும் : கு (தேவநேயப் பாவாணர்; *'செந்தமிழ்ச்செல்வி'* பெப்ருவரி 1973)

(ix) 39 பெயர்ச் சொல் ஆக்கம் M

கிரீன்பெர்க் கூற்று; "வினையைப் பெயராக்குவதற்கு யூரேசியாடிக் மொழிகளில் அதிகமாகப் பயன்படுவனவற்றில் இரண்டாம் இடம் Mக்கு உள்ளது" காண்க: தமிழ் ஓடு-ஓட்டம்.

(x) 40. கிழமைப் பொருள் I

"நீரின் தன்மை" என்பதிற் போலத் தமிழில் *இன்* கிழமைப் பொருளில் வரும். தேவநேயர்" இல் என்பதிலிருந்தே "இன்"-ஐ வருவிக்கிறார் (தமிழ் வரலாறு) 1967; ப. 237)

(xi) 47 ஆணைப் பொருள் ka

காண்க-தமிழ்;-உண்க, இடுக, கற்க (தமிழிலும் 'க' ஒட்டு நயமான (பணிவான) வேண்டுகையைக் குறிக்கும்).

(xii) 56 அல்பொருள் N; 57 அல்பொருள் M; 58 அல்பொருள் E/ele

தமிழ் இல்/இன்; அல்/அன் [இன்மை சுட்டுபவை] இவற்றிலிருந்தே அல்பொருள் N, M உருவாயின என்க. (காண்க: லெவிட் 1998 பக் 148; லெவிட் 2000, பக். 427) இல்/அல்—இல்ல/அல்ல; பின்னிஷ்மொழி "அல"; Chuvan மொழி ele ஆகியவ இவற்றிலிருந்து தோன்றியிருக்கலாம்.

(xii) 60 வினா k; வினா J; 64 வினா N

தமிழ் வினா ஓ உடன் ககரம் சேர்ந்து இங்கோ, அங்கோ எங்கோ போன்ற சொற்கள் உருவாயின. வினா k இவற்றோடு தொடர்புடையதோ?

தமிழ் வினா ஏ இந்தோ ஐரோப்பிய ya ஆனது;

பிறமொழிகளில் je, jo ஆனது.

தமிழ் ஏன்/என் ஒலி இடப்பெயர்ச்சிக்குட்பட்டு ne(what) ஆயிற்றோ?

(xiii) 65 எண்ணுப் பொருள் MT (பின்னிஷ்-உக்ரியன், துருக்கி, மங்கோலிய மொழிகளில் NT

காண்க: தமிழ் ஐந்து; ஒன்று, இரண்டு, எட்டு, ஆகியவற்றிலும் "து" ஒலிமாறி வழங்கிவருவதைக் காணலாம்.

(xx) 68. இருமுறைபலுக்குதல்

(dada-mi=i give] in verb "give" காண்க: yukagir மொழி தாதி=to give. தருதற்பொருள் தமிழ்ச் சொல் "தா" பல மொழிகளிலும் சென்றுள்ளது.

## இயல் - 1

# தொல் திராவிட மொழி பேசுநர் பரவியது தெற்கிலிருந்து வடக்கு நோக்கியேயாகும்; தமிழர் இந்தியாவின் தொல்குடிகள்

இப்பொழுது பல நாடுகளிலுமுள்ள பல்துறை அறிஞர்களும் பொதுவாக ஏற்றுக் கைக்கொண்டுள்ள (தவறான) கருதுகோளின்படி தொல்திராவிட மொழி பேசுநர் தாயகம் வட கிழக்கு ஈரான் பகுதியாகும்; அங்கிருந்து சுமார் கி.மு. 3000ஐ ஒட்டி அவர்கள் இந்தியா, தென்னிந்தியா, இலங்கையை நோக்கி அதாவது தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து சென்றனர்; செல்லும் வழியில், பேருந்து வரும்பொழுது ஆங்காங்குச் சிலர் இறக்கிவிடப்படுவது போலத் திராவிட மொழிபேசும் குழுக்கள் சில ஆங்காங்கு விட்டு வரப்பட்டன. [கே.வி. சுவலெபில் (1972): "திராவிடர்கள் இறக்கம்" (The descent of the Dravidians) *திராவிட மொழியியல் பற்றிய பன்னாட்டு ஆய்விதழ்* (IJDL) தொகுதி 2; பக். 57-63] பிரித்தானியக் கலைக் களஞ்சியத்தில் திராவிட மொழிகள் பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரையிலும் அவர் இக்கருத்தையே கூறுகிறார். தமது *தென்னிந்திய வரலாறு* (4ம் பதிப்பு 1976) நூலில் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியும் இது "நடந்திருக்கக் கூடாதது அல்ல" (not unlikely) என்கிறார்.

2. இதற்கு நேர்மாறான கொள்கை திராவிட மொழி பேசுநர் வடக்கு நோக்கிப் பரவினர் என்னும் "திராவிடர் ஏற்றம்" கொள்கையாகும்: (DRAVIDIAN ASCENT (from south)). இப்பொழுது அது பழைய பாணிக் கொள்கையாகக் கருதப்படினும் அதனை வலியுறுத்தியுள்ள அறிஞர்களுள் ஹெர். ஆர். ஹால்; ஹீராஸ் பாதிரியார், பி.தி.சீநிவாச ஐயங்கார், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், மறைமலை அடிகள், யூ.ஆர்.எஹரென்பெல்ஸ், சேவியர் எஸ்.தனிநாயகம், க.த.திருநாவுக்கரசு, தேவநேயப்பாவாணர், பிரிட்ஜெட் மற்றும் ரேமாண்ட் ஆல்சின் (1988), கே.கே.பிள்ளை ஆகியோரும் அடங்குவர். பத்ரிராஜு கிருஷ்ணமூர்த்தி (2003) நூலில் (The Dravidian Languages) கூறுவது வருமாறு:

> "திராவிட மொழி பேசுநர் இந்திய நாட்டில் தோன்றி வாழ்ந்தவர் என்றும் கி.பி.1500ஐ ஒட்டி ஆரிய மொழி பேசுநர் இந்தியாவுக்குள் நுழையும் காலத்திற்கு முன்னரே இந்தியா முழுமையும் பரவியிருந்தனர் என்றும் கூறுவதே தற்போதைக்கு வலுவான

கருத்தாகத் தோன்றுகிறது (For the time being, it is best to consider Dravidians to be the natives of the Indian sub-continent who were scattered throughout the country by the time the Aryans entered India around 1500 BCE.

சுவிரா ஜெய்ஸ்வால் (1974); ஜே.ஆர்.மார் (1975); பர்டன் ஸ்டெய்ன் (1998) ஆகியோர் 'திராவிடர் ஏற்றம்' கொள்கையை ஏற்காவிடினும் "திராவிடர் இறக்கக்" கொள்கையையும் ஏற்க மறுக்கின்றனர்.)

3. திராவிட மொழி பேசுநர் கி.மு. 3000ஐ ஒட்டி இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்ற கோட்பாடு மேலே இதுவரை இந்நூலில் கண்டவற்றோடு பொருந்தி வருகிறதா? மொழிப் பெருங் குடும்பங்களுக்கிடையேயுள்ள வரலாற்றுக் காலத்துக்கு முந்திய உறவுகளைப் பற்றி ஆய்வு செய்யும் அறிஞர் பலர் இத்தவறான கோட்பாட்டினை ஒட்பம் இன்றிப் பின்பற்றி வருகின்றனர். எடுத்துக்காட்டாக ஆர்.பி.ளெஞ்ச், எம்.ஸ்பிரிக்ஸ் 1997 இல் தொகுத்து வெளியிட்ட *தொல்லியலும் மொழியும்: (1) கோட்பாட்டு ஆய்வுநெறிக் கருத்தோட்டங்கள்* என்னும் நூலில் ரென்புரு பின்வரும் முடிவைக் கூறுகிறார்:-

> "(மத்திய கிழக்குப் பகுதிகளில் இருந்து வேளாண்மைத் தொழில் மக்கள் பண்டு பரவத் தொடங்கியது பற்றிய) தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் தொல் இந்தோ ஐரோப்பியன், தொல் ஆப்ரோ - ஏசியாடிக், தொல் எலாமைட், திராவிடம், தொல் அல்டாய்க் மொழிகள் ஆகிய மொழிகளைப் பேசியோர் அனைவரும் மிகச் சுருங்கிய மையக் கிழக்கு நிலப்பகுதியில் (சுமேரியா, எலாம், இன்றைய துருக்கி) உடன் உறைந்து இருக்க வேண்டும். இம்மொழிகள் எல்லாம் (நாஸ்திராடிக் மொழியியலாளர் கூறுவது போல) தொடர்புடையவையாக இருப்பது உண்மையானால் அவர்களெல்லாம் அப்பகுதியை விட்டுப் பிரிந்து விலகிய கி.மு. 8000-6000 காலக்கட்டத்துக்கு முன்னர் ஒருசில ஆயிரம் ஆண்டுகள், இம்மொழிகள் அனைத்திற்கும் மூலமான நாஸ்திராதிக் மொழி அந்நிலப்பகுதியில் பேசப்பட்டிருக்க வேண்டும் என்பது தொல்லியல் கண்டுபிடிப்புக்களுக்கும் ஒத்து வரும் வாதமாகும்."

இவ்வாறு தொல்-நாஸ்திராதிக் பேசியவர்கள் அனைவரும் 10000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருங்கே மையக் கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருந்தார்கள் என்ற இந்தக் கோட்பாட்டையும் (அதன் தொடர்பான "இந்தியாவுக்குள் திராவிடர்கள் இறங்கியது சுமார் கி.மு.3000ஐ ஒட்டித்தான்" என்ற கோட்பாட்டையும்) பொய்ப்பிப்பது திராவிட மொழிகளுக்கும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் இடையே உள்ள நெருங்கிய பிணைப்பு

ஆகும். இனி, "தொல்-திராவிட-ஆஸ்திரேலியப் பழங்குடி மொழி" பற்றிய செய்திகளைக் காண்போம்.

4. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 1770இல் சுமார் 3 இலட்சத்திற்கும் 10 இலட்சத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது எனக் கருதப்படுகிறது. 1960-க்குள் அவர்கள் எண்ணிக்கை 50,000 அளவுக்குக் குறைந்தது. இப்பொழுது ஒரு லட்சம் அளவுக்கு உள்ளனர். அவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்பது பற்றி ஆய்வாளர்கள் கருத்துக்கள் பொதுவாகப் பின்வருவன போன்றவையேயாகும்:

> எல்கின்(1938): "கிடைத்துள்ள சான்றுகளின்படி (ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள்) தென்னிந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்ததாகவே தெரிகிறது"
>
> லாக்வுட்(1963): "இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் சுமார் 15000 ஆண்டுகளுக்கு முன்னர் புலம் பெயர்ந்து சென்றவர்களின் வழித்தோன்றல்களே ஆஸ்திரேலியப் பழங்குடிமக்கள்". [அண்மைக்கால ஆய்வுகளின்படி 15000 ஆண்டுகள் என்பதற்குப் பதிலாக 60,000 ஆண்டுகளுக்கு முன்னர் என்று கொள்ளவேண்டும்].

5. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் அக் கண்டத்தில் 60000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே வசித்து வருகின்றனர். அன்று அவர்கள் தம்முடன் கொணர்ந்த தொன்மொழி இன்று 200 மொழிகளாகப் பிரிந்துள்ளது. எனினும் அவை அனைத்தும் மூலமொழியின் அடிப்படைக் கூறுகளைப் பெருமளவுக்கு இன்றும் கொண்டுள்ளன என்கின்றனர் ஆர்.எம்.டபுள்யூ. டிக்சன் போன்ற அறிஞர்கள் (*ஆஸ்திரேலிய மொழிகள்*, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், 1980). தொல் ஆஸ்திரேலிய மொழியானது மிகப் பழைய மொழி; எடுத்துக்காட்டாக, "தொல் இந்தோ ஐரோப்பிய மொழி" உருவாவதற்கு மிக முற்பட்ட காலத்திலேயே அது பேசப்பட்டுவந்தது என்று சுட்டிக் காட்டுகிறார் டிக்சன். தொல் ஆஸ்திரேலிய மொழியை வேறு எம் மொழிக் குடும்பத்தோடு தொடர்பு படுத்தலாம் என்று கருதுங்கால் திராவிடமொழித் தொடர்பு ஒன்றே எண்ணத்தக்கது என்கிறார் டிக்சன். நாரிஸ், பிரிச்சார்டு, கால்டுவெல் ஆகியோர் ஆய்வுகளைப் பின்பற்றி 1885-லேயே சி.டி.மக்னீன் ஆஸ்திரேலிய மொழிகள்-திராவிட மொழித் தொடர்பு பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> திராவிட மொழிக்கும் (தெற்கு, மேற்கு) ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் இடையிலே நெருங்கிய இலக்கண ஒற்றுமை உள்ளது. பிரதிப் பெயர்கள் (pronouns) வருமாறு:

| திராவிடம் | ஆஸ்திரேலியன் |
|---|---|
| தன்மை: நான்,யான்,ஞான் | ஞா,ஞாய்,ஞாட்ஸ,ஞான்ய |
| முன்னிலை: (thou)நீன்,நின் | நின்ன,ஞின்னே,ஞிண்டு,ஞிண்டே |
| (you) நீன்,நிம்,நீர்,நும்,நீவு | நிமிடு,நுரே,நுவ,ஞீர்லே |

தமிழ் "என்னை"யுடன் ஆஸ்திரேலிய "எம்மோ"வை ஒப்பிடுக. பின்வரும் இனங்களில் இவ்விரு குடும்ப மொழிகளுக்கும் இடையே பொதுவான இலக்கண ஒற்றுமை உள்ளது; முன்னொட்டுக்களுக்குப் பதிலாகப் பின்னொட்டுக்கள் பயன்பாடு; தன்மைப் பன்மையில் உளப்பாட்டுப் பன்மை உள்ள நிலை; வேர்ச்சொல்லோடு சில ஒட்டுக்களைச் சேர்த்து (அடி - அடிப்பி, செய்-செய்வி போல) செயப்பாட்டு வினை, பிறவினை போன்றவற்றை உருவாக்கிக் கொள்ளுதல்; ஒட்டு நிலைமொழிச் சொற்றொடரமைப்பு; வாக்கிய அமைப்பு போன்றவை அவ்வொப்புமைகள்.

6. டிக்சன் தமது 1980 நூலில் பின்வரும் கூடுதல் ஒப்புமைகளையும் சுட்டுகிறார்:

1. ஒலியன்களில் வியத்தகு ஒற்றுமை
2. ட,ற,ர,ல,ள போன்ற ஒலியன்கள் சொல் முதலில் ஒரு பொழுதும் வரமாட்டா
3. நான்காம் வேற்றுமை உருபு தமிழில் உள்ளது போல் கு(gu)தான்.
4. சொல் முதலில் ஒரு மெய் மட்டுமே வர இயலும்.

7. சொல் வடிவிலும் பொருளிலும் தமிழுக்கும் ஆஸ்திரேலிய மொழிகளுக்கும் இடையே உள்ள வியத்தகு ஒற்றுமையைக் காட்டும் பட்டியல் வருமாறு (இராமநாதன் 2003).

| ஆங்கிலத்தில் | தமிழில் | பொருள் | ஆதாரம் |
|---|---|---|---|
| Yerumba | எறும்பு | honey ant | Basedow; p. 117 |
| moiranje | மய்ராஞ்சி | loin cloth of hair | " 114 |
| kutturu | குத்துரு | fighting stick | " |
| ngambula | ஞாம்புல | my eye | Love, p. 42 |
| ngungubula | ஞீங்கிபுல | your eye | " |
| ambula | அம்புல | his eye | " |
| nynggubula | ஞிங்கூபுல | her eye | " |
| indja | இஞ்ஞா | nearby he | " |
| ino | இனோ | some distance he | " |
| iru | ஈரு | out of sight he | " |
| ngarendu | ஞாரெண்டு | You and I (Inclusive) | " |

| | | | |
|---|---|---|---|
| arendu | ஆரெண்டு | another and I (Inclusive) | " |
| iraiya | இறைய | father | " p.43 |
| bui | பூய் | go away | " p.34 |
| kalam | கலம் | catamaran | " p. 6 |
| undjanguru | உஞ்சான்குரு | place of origin of river | " p.48 |
| umindjanguru | உமிஞ்சான்குரு | place where river joins the sea | " p.48 |
| ngangga | ஞஞ்ஞா | mother | Bates |
| beelgar | பீல்கார் | river people | " |
| waddarngar | வத்தர்ங்கார் | seacoast people | " |
| wa me | வாமெ | come out | Warner; 298 |
| nin me | நின் மெ | stop there | " ; 298 |
| ilayaru | இளையரு | young man | Strehlow p. 77 |
| palanali | பளநாளி | ancient times 1957 | Harney : p.73 |
| coo-ee | கூய் | Australian aboriginal call | " |
| katte | கட்டெ | digging stick | " |
| maran | மாரன் | proper name 1959 | Harney |
| Kunanjan | குனஞ்சன் | proper name | |
| munro | மன்ரோ | surroundings of shrine | " |
| Anmma nyinnin | ஆன்மா நின்னின் | Glad you here to see | Lockwood (1963)p188 |
| ngoora nongu yal wonga | இங்ஙர நோங்கு யாள் வோங்க | who said that? | " |
| wamara (anglicised as woomera) | வாமர | throwing stick | Lockwood (1962) |
| wulay | ஒலே | vanish, get lost | Dixon (1972) |
| wiama | வாமா | come, you | Greenway |
| Na | நா | what? | " |
| ngaaa | ங்ங்க | this here | Dixon (1980);357 |
| Gurundji | குருஞ்சி | place name | Bird-Rose |
| Oenpalli | அயன்பள்ளி | place name | " |
| Karangupurru | கரங்குபுற்று | place name | " |
| ngaliwurru | ஞாலி வூற்று | place name | " |
| pira | பிற | moon | " |

8. அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் அக் கண்டத்திற்குள் நுழைந்தபொழுது கடல் மட்டம் இப்பொழுதுள்ளதைவிட 400 அடி - 600 அடி குறைவாக இருந்தது. தற்பொழுது கடல் நீரால் மூடப்பட்டுள்ள கண்டத்திட்டு (continental shelf) அப்பொழுது நிலப் பரப்பாக இருந்தமையால் எல்லாக் கண்டங்களின் பரப்பளவுமே அதிகம். ஆஸ்திரேலியா, நியூகினி, டாஸ்மேனியா அனைத்துமே இணைந்து ஒரே கண்டமாக இருந்தன. மொத்தப் பரப்பு இப்பொழுதுள்ளதை விட 1/7 பங்கு அதிகம். டிமோர் தீவுக்கும் தொல் ஆஸ்திரேலியா கண்டத்துக்கும் இடையே கடல் ஒரு சில மைல்கள் தான் இருந்திருக்கும். இப்பொழுது உள்ள ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் முன்னோர்கள் அனைவரும் டிமோர் மற்றும் இந்தோனேசியத் தீவுகளிலிருந்து கட்டுமரம் போன்றவற்றில் சில மணிநேரத்தில் கடலைத் தாண்டிச் சென்று ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்திருக்கவேண்டும். நுழைந்த பின்னர்ச் சுமார் 500 ஆண்டுகளுக்குள் அவர்கள் ஆஸ்திரேலியா-டாஸ்மேனியா முழுமையும் பரவி விட்டனர் என்று தொல்லியல் சான்றுகள் நிறுவுகின்றன. கி.மு.15000 அளவில் கடல் மட்டம் 200 அடி உயர்ந்தது. அதன் பின்னர் மேலும் உயர்ந்து கி.மு. 6000ஐ ஒட்டித் தற்போதைய நிலையை அடைந்தது. ஆக, கடந்த 8000ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்திரேலியா தனிமைப்படுத்தப்பட்ட ஒரு கண்டமாக இருந்துவந்துள்ளது. அக் கண்டம் வாழ் பழங்குடிகள் கடந்த 8000 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பிறபகுதிகளில் வாழும் எந்த மக்களுடனும் யாதொரு தொடர்பும் இல்லாது வாழ்ந்து வருகின்றனர். (கி.பி. 18ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் அக் கண்டத்தைக் கண்டுபிடிக்கும் வரையில் அதுதான் நிலைமை). "திராவிடர் இறக்கம்" கொள்கைப்படி மத்தியக் கிழக்கு நாடுகளைவிட்டுக் கி.மு.3000இல் நீங்கித் தொல்-திராவிடர் தெற்கு நோக்கிப் புலம் பெயர்ந்து பரவி கி.மு.1000இல் தமிழ்நாடு அடைந்தனர் என்று கொண்டால் தமிழுக்கும், கடந்த 8000 ஆண்டுகளுக்கு மேலாக எந்த மக்களுடனும் யாதொரு தொடர்பும் இல்லாமல் வாழும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் எப்படி அவ்வளவு வியத்தகு ஒப்புமைகள் இருக்க முடியும்?

9. (i) தன்னுடைய *திராவிடர் உறவுமுறை* என்னும் நூலில் தாமஸ் டிராட்மன், உறவு முறையில் (மச்சான் - மச்சினி மண முறை உட்பட) திராவிடர்களுக்கும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய ஒற்றுமை புதிராக இருக்கிறது என்கிறார். இராமநாதன் தமிழ்ப்பொழில் (மே-ஜூன் 1991) கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது போல் "திராவிடர் இறக்கம்" என்ற கொள்கையை விட்டுத் "திராவிடர் ஏற்றம்" கொள்கையைக் கடைப்பிடித்தால் இப்புதிர் விடுபடும்.

(ii) மாந்த இனப் பரவல் பற்றிக் குறிப்பிடும் ஸ்டீவ் ஜோன்ஸ் (1992) நவீன மாந்த இனம் ஆஸ்திரேலியாவில் 50,000 ஆண்டுகளுக்கு

முன்னரே குடியேறிவிட்டது; எனினும் ஐரோப்பாவுக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன்னரும், சீனாவுக்கு 35000 ஆண்டுகளுக்கு முன்னரும், பிற பகுதிகளுக்கு அதற்குப் பின்னரும் பரவியதாகத் தெரிகிறது என்பதைச் சுட்டிக்காட்டிப் பின்வரும் சிக்கலை முன்வைக்கிறார்:

> "ஆப்பிரிக்கா, மையக் கிழக்கு நாடுகள் ஆகியவை தவிர உலகின் பிற பகுதிகளில் நவீன மாந்த இனம் முதன் முதலில் குடியேறிய தற்கான சான்றுகள் ஆஸ்திரேலியாவில் தான் உள்ளன. நவீன மாந்த இனம் ஆப்பிரிக்காவிலிருந்து முதலில் வடக்கே வந்து நண்ணிலக் கரை நாடுகள், மையக் கிழக்கு நாடுகள் ஆகியவற்றுக்கு முதலில் பரவி, பின்னரே பிற இடங்களுக்குச் சென்றது என்ற கோட்பாட்டு இச் செய்தியுடன் முரணுவதால் அக் கோட்பாடு பற்றி மேலும் யோசிக்க வேண்டும் போலத் தோன்றுகிறது."

அடுத்த பத்திகளில் விளக்கியுள்ளது போல் ஏறத்தாழ அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தென்னிந்தியா வழியாக ஆப்பிரிக்காவிலிருந்து தொல்-திராவிட-ஆஸ்திரேலிய மொழி பேசுநர் பரவினர் என்ற கோட் பாட்டை மேற்கொண்டால் ஸ்டீவ் ஜோன்ஸ் சுட்டிய சிக்கல் நீங்கிவிடும்.

(iii) இது பற்றி 1999 கருத்தரங்கு ஒன்றில் காலின் பி.மாசிகா தெரிவித்தது வருமாறு:

> "தென் ஆசியாவில் கழிபழங்காலத்தில் ஒரு பொதுவான முதாதை மொழி இருந்திருக்க வேண்டும். தற்போதைய மாந்த இனம் [ஏறத்தாழ 50,000 ஆண்டுகளுக்கு முன்னர்] உலகெங்கும் பரவத் தொடங்கிய காலக்கட்டமே தொல் திராவிட மொழியின் தொடக்க காலம் ஆகலாம்" (It may be a question of a very ancient common substratum in South Asia, Pre-Dravidian going back even to the original peopling of the world; The year Book of South Asian Languages and Linguistics, 2001, New Delhi).

(iv) திராவிட மொழிகளுக்கும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் இடையிலுள்ள மிக நெருங்கிய ஒப்புமையை இராமநாதன் குப்பத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்தின் *திராவிடியன் ஸ்டடீஸ்* 1-3; ஏப்ரல்-சூன் 2003 இதழில் வெளியிட்டுள்ள கட்டுரை விரிவாக நிறுவுகிறது. தொல் தமிழிய மொழி பேசுநர் தென் இந்தியாவில் கண்டிப்பாக 10,000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து இருக்க வேண்டும் என்பதையும் இங்கிருந்து அதற்கும் நெடுங்காலம் முன்னரே ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் தொல் தமிழ் மக்களிடமிருந்து பிரிந்து சென்றிருக்க வேண்டும் என்பதையும் அக்கட்டுரை நிறுவுகிறது.

10. தமது IJDL ஜூன் 2007 கட்டுரையில் ஸ்டெபான் லெவிட் பின்வருமாறு "திராவிடர் ஏற்றம்" கொள்கையை ஆதரித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

> "கடல் மட்டம் இப்பொழுதுள்ளதைவிட மிகக் குறைவாக இருந்த பனியூழிக் காலத்தில் ஆப்பிரிக்கா - தென்னிந்தியாவை இணைத்த வால் போன்ற நில இணைப்புகள் / தீவுகள் வழியாக ஆப்பிரிக்காவிலிருந்து தென் ஆசியாவிற்குத் திராவிட மொழி பேசுநர் வந்திருக்கலாமென்னும் கோட்பாட்டை இராமநாதன் வலியுறுத்துகிறார். அக் கோட்பாட்டை நானும் ஆதரிக்கிறேன். ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களைப் பற்றி ஆய்வுசெய்த அறிஞர் அம்மக்களின் மொழிகள் திராவிட மொழிகளுடன் மட்டுமே தொடர்புள்ளவை எனக் கண்டுள்ளனர். உறவுமுறை (Kinship), பூமராங் (வளைதடி) பயன்பாடு ஆகியவையும் அம்மக்களுக்கும் திராவிடருக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன. கி.மு. 6000ஐ ஒட்டி உலகெங்கும் கடல் மட்டம் உயர்ந்து நிலப் பகுதிகளின் பரப்பு சுருங்கிய பொழுது உலகின் பிற பகுதி மக்களுடைய நாகரிகங்களிடம் இருந்து துண்டிக்கப்பட்டனர் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள். அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்தது ஏறத்தாழ 40,000 ஆண்டுகட்கு முன்னர் இருக்கலாம் என்கின்றனர் ஆஸ்திரேலிய அறிஞர். இதிலிருந்து குறைந்தது 40,000 ஆண்டுகட்கு முன்னரே திராவிடர் இந்தியாவில் இருந்தனர் என்பது தெளிவாகின்றது. இந்த ("திராவிடர் ஏற்றம்")க் கோட்பாட்டின்படி திராவிட மொழி பேசுநர் தென்னிந்தியாவிலிருந்து வடநாடு செல்கின்றனர்; பின்னர் அங்கிருந்து பாரசீகத்திற்கும் அதைத் தாண்டிப் பிற நிலப் பகுதிகளுக்கும் செல்கின்றனர். அந்தப் பிற நிலப்பகுதிகளில் மூல திராவிட மொழிக் குடும்பத்திலிருந்து பிரிந்து உராலிக், அல்தாயிக், இந்தோ-ஐரோப்பியம் ஆகிய மொழிக்குடும்பங்கள் உருவாகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்துக்குத் திராவிடம் தாயா? தமக்கையா? என்பதை இன்றைய நிலையில் திட்டவட்டமாகக் கூற இயலாது."

[ஒப்பன் ஹைமர் (2003) The Real Eve : Modern Man's journey out of Africa நூலின்படி மரபணு ஆய்வும் (காகசஸ் இனத்தைச் சுட்டும் M 17) தொல் திராவிட மொழி பேசுநர் இந்தியாவிலிருந்து வடக்கு வடமேற்காக 10000 ஆண்டுகளுக்கு வெகுகாலம் முன்னரே மைய கிழக்கு-மைய ஆசியா, ஐரோப்பா, என்றவாறு படிப்படியாகப் பரவியிருக்கலாம் என்ற கோட்பாட்டிற்கு எதிராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது].

11. தென்னிந்தியாவிலிருந்து வடக்கே செல்லச் செல்லத் திராவிட மொழிகள் தமிழிடத்துக் கொண்டுள்ள நெருக்கம் குறைகிறது. இந்தோ ஆரிய மொழிகளிலிருந்து கடன் பெற்ற சொற்களால் மட்டும் அல்ல, மூலத் திராவிடச் சொற்களை அவை சிதைத்தும் உருமாற்றியும் வழங்குவதாலும் இந் நிலை ஏற்படுகிறது. எனினும் அவற்றில் உள்ள திராவிடச் சொற்களுக்கும் பொருத்தமான வேர்ச் சொற்களைப் பழந்தமிழில் தான் காண வேண்டி இருக்கிறது (அவ் வேர்களில் சில தற்காலத் தமிழில் புழக்கத்தில் இல்லாதவையாகவும் இருக்கலாம்). மேலும் தனிநாயகம் (1953) கூறுவது போல்

> "(கி.மு. 300-கி.பி.200 காலத்தைச் சார்ந்த) சங்கத் தமிழ் நூல்களில் தமிழக மண்ணிலேயே அவை தொல் வரவாகத் தோன்றியவை என்பதைக் காட்டும் அனைத்து அடையாளங்களும் உள்ளன. எந்த நாட்டிலிருந்தோ தமது மொழியுடனும் இலக்கியத்துடனும் தமிழர் தமிழகத்துக்கு வந்து குடியேறியதாக யாதொரு ஆதாரமும் அந் நூல்களில் இல்லை என்பதையும் இதிலிருந்து உணரலாம்."

இந்துமாக் கடலில் இந்தியாவுக்குத் தெற்கிலிருந்த தென்னாட்டுப் பகுதிகள் பண்டு கடல்கொள்ளப்பட்டுத் தமிழகப் பரப்பு சுருங்கியதாகப் பழந்தமிழ் இலக்கியங்களும் மரபுச் செய்திகளும் கூறுவது ஏறத்தாழ கி.மு.8000ஐ ஒட்டியும் பின்னரும் உலகெங்கும் கண்டத்திட்டுப் பகுதிகள் (Continental shelf) கடலுள் மூழ்கியதையே குறிப்பிடுவதாகக் கொள்வது மட்டுமே இன்றைய அறிவியலுக்கு ஒத்தது என்பதை இராமநாதன் (1998, 2003, 2004)-ல் காண்க. அவ்வாறு கடல் மட்டம் உயர்ந்து கண்டத்திட்டுப் பகுதிகள் மூழ்குவதற்கு முன்னர் ஆப்பிரிக்காவையும் தென் இந்தியாவையும் இணைத்த வால் போன்ற நிலப்பகுதிகளும் இருந்திருக்கலாம் என்பதை வால்டர் ஏ.பேர்சர்வீஸ் *பண்டைய இந்திய நாகரிகத்தின் வேர்கள்*, 1970 நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> "இந்துமாக் கடலில் அண்மையில் நடந்த ஆய்வுகளின்படி, அக்கடலில் பண்டு ஒரு கண்டம் அளவுக்குப் பெருநிலப்பரப்பு இருந்து பின்னர் மூழ்கியதற்கு வாய்ப்புகள் இல்லையெனினும் அவ்வப்பொழுது (அந்தக் காலக் கட்டத்தில்) தீவு நிலப்பகுதிகள் கடல் மட்டத்துக்கு மேல் உயர்ந்து வால் போல் இருந்து இருக்கலாம் எனக் கூற ஆதாரம் உள்ளது."

12. (i) ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தற்கால மாந்த இனம் ஆப்பிரிக்காவில் தோன்றியது; முதல் தாய் மொழி ஏறத்தாழ 50000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவானது; இன்றைக்கு ஒரு இலட்சம்-50000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து அவ்வினம் தென்னிந்தியா வழியாகவும் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியது என்பதையெல்லாம் மேலே கண்டோம். இவ்வாறு வடக்கு, வடகிழக்கு, கிழக்கு நோக்கிய மாந்த இனப் பரவலில் திராவிட மொழி பேசுநருக்கு மையமான பங்கு

இருந்திருக்க வேண்டும். திராவிடர் ஏற்றம், (Dravidian ascent) பற்றிய இந்தக் கோட்பாட்டை *"ஞானப்பிரகாசர் - தேவநேயன் கோட்பாடு"* என அழைக்கலாம். திராவிட மொழிகளோடு ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளுடன் உள்ள நெருங்கிய தொடர்பையும் (ஏன் மொழிக்குடும்பங்கள் பிறவற்றுடன் உள்ள நெருங்கிய தொடர்பையும்) விளக்கவல்லது இக் கோட்பாடு மட்டுமே.

(ii) தென்னிந்தியாவிலிருந்து வடக்கே பரவிய திராவிட மொழிபேசுநர் உருவாக்கியதே சிந்துவெளி நாகரிகமாகும். (காண்க: மதிவாணன் 1995; இராமநாதன் 1999; பூர்ணசந்திரஜீவா 2003.) அவர்களுக்குச் சுமேரிய, எலாம் நாகரிகங்களை உருவாக்கியதிலும் பெரும் பங்கு இருந்திருக்கவேண்டும்.

13. மாந்தர் இன (A M H)ப் பரவல், மொழியின் தோற்றமும் பரவலும் ஆகியவற்றின் அடிப்படையில் திராவிட மொழி பேசுநர் பண்டு தெற்கிலிருந்து வடக்காகப் பரவிய பொழுது (Dravidian Ascent) குடியேறிய பகுதியே சிந்துவெளி நாகரிகப்பகுதி என்று கொள்வதற்கான ஆதாரங்களோடு அந்நாகரிகம் தமிழ் நாகரிகம் என்பதற்கு உள்ள மேலும் பல வலுவான ஆதாரங்களில் சில வருமாறு:

i) மொகஞ்சொதரோ-ஹரப்பா இடிபாடுகளில் திராவிடக் கட்டுமானக் கலையைக் காணலாம். வீடுகளில் பயன்பட்ட பொருள்கள், நகை (ஆபரணங்)கள், பருத்தி ஆடைகள் அனைத்தும் திராவிடச் சார்புடையவை.

ii) தமிழரின் சிற்றிலக்க முறையையே சிந்துவெளி நாகரிக எடை அளவுகளில் காண்கிறோம் என்பதைச் செங்கம் கு.வேங்கடாசலம் நிறுவியுள்ளார்.

iii) இன்றைய இந்து மதத்தின் முதன்மைக் கூறுகள் அனைத்தும் திராவிட-தமிழ்-சிந்துவெளி நாகரிகக் கூறுகளே ஆகும். சமண-புத்த மதங்களின் தோற்றத்துக்கும் சிந்துவெளி மற்றும் வடநாட்டில் பண்டு இருந்த தமிழ் (திராவிட) ஞானிகளே காரணமாவர். இக்கருத்தை டைலர் (1973) பின்வருமாறு கூறுவார்:

> "இன்றைய வேத மதக் கருத்துக்கள் அவற்றிற்கு எதிரான சமண புத்தம் முதலிய கருத்துக்கள் இவற்றிற்கு இடையே முதலில் உறழ்வு, பின்னர் இணைப்பு என்றவாறு இந்துமதம் உருவானது என்று கருதுவது அவ்வளவு சரியானதல்ல. சிந்துவெளி நாகரிகம் சார்ந்த, பண்டைய தொல்லிந்திய (தமிழிய) நாகரிகத்தின் புத்துயிர்ப்பே, மறுமலர்ச்சியே இன்றைய இந்துமதம் ஆகும்." (The Hindu synthesis was less than the dialectical reduction of orthodoxy and heterodoxy than the resurgence of the ancient aboriginal Indus civilisation)

மறைமலையடிகளும் (1903,1923,1930) இக்கருத்தினரே.

iv) இன்றைய இசைக்கலை ஆரியர் தமிழரிடமிருந்து கற்றதே (ஓ.கோஸ்வாமி *இந்திய இசைவரலாறு*, 1957)

v) சிந்துவெளி முத்திரை எழுத்துக்கள் பழந்தமிழே என்பதை நேர்மையான அறிஞர்கள் அனைவரும் ஏற்கின்றனர் (அஸ்கோ பர்போலா, ஐ.மகாதேவன், கமில்சுவெலபில், பொஸெல்). அறிஞர் மதிவாணன் தமது Indus Script-Dravidian (1995) நூலில் சிந்துவெளி முத்திரை வாசகங்களைத் தொல் தமிழ்ப் பெயர்களாகப் படித்துள்ளார்.

14. சிந்துவெளி அகழாய்வுகளுக்கு நெடுங்காலம் முன்னரே ஹெவிட் (1888), மறைமலையடிகள் (1903) போன்ற நுண்மாணுழைபுலமிக்க அறிஞர், ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியா முழுவதும் வாழ்ந்து வந்த நாகரிகமிக்க தமிழிய மக்களிடமிருந்தே ஆரியர் நாகரிகத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தைத் தெளிவாகக் கூறியிருந்தனர். இவற்றின் விரிவை இராமநாதன் : *சிந்துவெளித் தொல் தமிழ் நாகரிகம்* 1999 இயல்கள் 3-6 மற்றும் 8 இல் காண்க).

15. ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த திராவிடர் என்று தன்னை அழைத்துக் கொண்ட எஸ்.ஹீராஸ் பாதிரியார் (11.9.1888-14.12 1955) *தொன்மை இந்தோ - நண்ணிலக்கரை நாகரிக ஆய்வு* (Studies in Proto-Indo Mediterranean Culture 1953) என்னும் நூலில் சிந்துவெளி நாகரிகம் திராவிடருடையது; அவர்கள் மொழி திராவிட மொழி என்பதை நிறுவியுள்ளார். மிகப் பழங்காலத்தில் (கி.மு. 5000க்கும் நெடுங்காலத்துக்கு முன்னர்) முதற்கண் காவிரிக் கரையில் உருவாகிய அரப்பா நாகரிகம் இந்திய மேற்குக்கரை வழியாகத் தமிழர்களால் சிந்துவெளி, சுமேரியா, எகிப்து, நண்ணிலக்கரை நாடுகள் வரை கொண்டு செல்லப்பட்டது என்பது ஹீராஸ் கொள்கை. (அவர் வாதத்துக்கு ஆதாரமாகக் கொண்ட செய்திகள் சில இப்பொழுது தவறாகத் தோன்றலாம்; சிந்துவெளி முத்திரைகளை அவர் திராவிட மொழி சார்ந்தவை என்று கொண்ட முடிவு சரியென்றாலும் அவர் முத்திரைகளில் படித்துக் கண்ட வாசகங்கள் இன்று ஏற்கத்தக்கனவாக இல்லை. இருந்தாலும் அவர் கண்ட அடிப்படை உண்மை இன்றும் வலுவுடையதாகவே உள்ளது).

16. என் லாகோவரி 1963இல் வெளியிட்ட *திராவிடர் தோற்றமும் மேல் நாடுகளும்* (Dravidian Origins and the West) என்னும் நூல் சிறந்த மொழியியல் மெய்மைகளை உணர்த்துவதாகும். "திராவிடர் நண்ணிலக்கரை நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வந்து இந்தியாவில் சிந்துவெளியில் முதற்கண் குடியேறிப் பின்னர்க் குமரி வரை பரவினர்" என்ற அபத்தக் கொள்கையை அவர் (விவரம் புரியாமல்) பின்பற்றியிருந்த போதிலும் அவர் நிறுவிய பின்வரும் மெய்மைகள் முக்கியமானவை:

i) 6000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து அட்லாண்டிக் கடல்வரை ஒரே மாதிரியான "பல சொல் பிணிப்பு ஒட்டுநிலை" (Polysynthetic Suffixal) மொழிகள், இடையீடு இன்றிப் பரவியிருந்தன. அவற்றின் சொற் களஞ்சியங்கள் ஓரளவுக்கு ஒன்றுபோல் இருந்தன. பொதுச் சொல் விழுக்காடு மொழிக்கு மொழி மாறுபட்டு இருந்திருக்கலாம். திராவிட மொழிகள், எலாமைட், சுமேரியன், ஹர்ரி, காகேசியன், ஹல்தி, போன்றவை ஒரே மொழியமைப்புக் கொண்டு ஒன்றுக்கொன்று உறவுடையவையாகச் சங்கிலித் தொடர்போல அமைந்திருந்தன.

ii) இந்தோ ஐரோப்பிய மொழி பேசுநர் (கி.மு. 2000ஐ ஒட்டி) ஐரோப்பாவுக்குள் கிழக்கிலிருந்து நுழையுமுன்னர் அங்குப் பேசப்பட்டு வந்த மொழிகளில் ஒன்றான பாஸ்கு (யூஸ்கரா) இன்றும் பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் இடைப்பட்ட பிரெனீஸ் மலைப்பகுதியில் பேசப்பட்டு வருகிறது. தொல் திராவிட மொழி இந்தப் பாஸ்கு மொழியுடன் மட்டுமின்றி இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கு முன்னர் ஐரோப்பாவில் பேசப்பட்ட தொன் மொழிகளுடனும் உறவுடையது.

iii) இம்மொழிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளவை; ஒரே பொதுவான தாய் மொழியின் வட்டார வழக்குகள் என்றே கூறலாம்.

17. சுவெலபில் "சுமார் கி.மு.10000க்கு முன்னர்த் திராவிடம், உரால்-அல்டாய்க், சப்பானியம் மொழி பேசுநர்களிடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும்" என்று கருதியுள்ளார். அத்தகைய தொடர்பையும் " திராவிடர் ஏற்றம்" கோட்பாடே விளக்கவல்லது. ஞானப் பிரகாசர்-தேவநேயன் கோட்பாட்டின்படி கி.மு.10000க்கு முன்னரே தொல் இந்தோ-ஐரோப்பியம் பேசுநர் தொல் திராவிடம் பேசுநரிடமிருந்து பிரிந்து விட்டனர்; மைய ஆசிய ஸ்டெப்பிப் புல்வெளிகளில் சில ஆண்டுகள் வாழ்ந்தனர்; அவர்களில் சில குழுவினர் கி.மு. 4000-3000 அளவில் மேற்கு நோக்கி ஐரோப்பாவுக்குச் சென்றனர் (அவர்களிடம் பின்னர் உருவானவையே கிரீக், இலத்தீன், கெல்டிக், ஜெர்மானிக், ஸ்லாவிய மொழிக் குடும்பங்களாகும்); வேறு சில குழுக்கள் கிழக்கு-தென்கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்த காலம் கி.மு.2500ஐ ஒட்டி ஆகும்; அவ்வாறு கிழக்கே வந்த குழுவினர் மொழிகளில் அதாவது இந்தோ ஆரிய, இரானிய மொழிகளில் கி.மு.10000க்கு முன்னர்த் தொல்திராவிட மொழியினரிடமிருந்து பிரிந்த காலத்தில் கொண்டு சென்ற தொல்திராவிட மொழிக் கூறுகளோடு சேர்த்து, வடமேற்கு இந்தியாவிலும் அப்பாலும் வாழ்ந்து வந்த திராவிடர் மொழி பேசுநர்களிடம் இருந்து (இரண்டாவது கட்டமாக) புதிதாக மேலும் பல திராவிட மொழிக் கூறுகள் சேர்க்கப்படலாயின. அதாவது தொல் தமிழிய மொழி பேசுநர் ஏற்றம் (Dravidian ascent) பற்றிய

இக்கோட்பாடு ஏற்கத்தக்கதாகவே தோன்றுகிறது; அது தொல்மாந்தர் மொழியியல் முடிவுகளை மேலும் சீர்மை பெறச் செய்ய வல்லது; நாளடைவில்

மாந்த இனத் தோற்றமும் பரவலும்;
மொழிப் பெருங்குடும்பங்கள் உருவாக்கமும் பரவலும்;
வரலாற்றுக்கு முந்திய தொல்லியல்

ஆகிய மூன்று துறைகளிலும் அனைத்தையும் விளக்கத்தக்க ஒருங்கிணைந்த பெருங்கோட்பாடு (Grand synthesis) உருவாக வழி கோலக் கூடியதும் ஆகும்.

18. காலின் ரென்புரு தமது 1999 கட்டுரையில் தற்கால மாந்த இனப்பரவல் வரலாறு பற்றிய பெருங்கோட்பாட்டை மரபணு ஆய்வு, வரலாற்று மொழியியல், நாகரிக வளர்ச்சி பற்றிய தொல்லியல் சான்றுகள் ஆகிய மூன்றையும் இணைத்துப் பின்வருமாறு உருவாக்கலாம் என்பார்.

A(1) மரபணு ஆய்வு
(Molecular Genetics)

(x) மாந்த இனப் பரவல் வரலாறு
Population History

A மரபணு ஆய்வில் பல்வேறு பகுதி மக்களிடம் காணும் வேறுபாடுகள். Models of Genetic Variability




B பண்பாடு நாகரிக வளர்ச்சி நிலைகள். Models of cultural Progress

C பல்வேறு பகுதிகளிலும் காலங்களிலும் மொழி நிலை மாற்றம். Models of Linguistic change

B(1) தொல்லியல் (வரலாற்றிற்கு முந்திய காலம் சார்ந்தது) Prehistoric Archaeology

C(1) வரலாற்று மொழியியல் Historical Linguistics

19. ஆக, தமிழே இந்தியாவின் தொன்மொழி என்பதையும் அம்மொழியும் அம்மொழி பேசுநரும் தெற்கிலிருந்து வடக்காகவும் (ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களைப் பொறுத்தவரை கிழக்கு நோக்கியும்) கழிபழங்காலத்தில், குறைந்தது பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பரவியிருக்க வேண்டும் என்பதையும் இவ்வியலில் கண்டோம். கடைசியாக இன்னொன்று: தமிழ்பற்றிய இவ்வுண்மை நிலையறியாதவர்களும் தமிழில் திறமான (அன்று கால்டுவெல், போப் போன்றவர்களுக்கு இருந்த புலமையில் கால்பங்கு அளவு கூடப்) புலமை இல்லாதவர்களும் ஆன மொழியியலாளர்

பலரும் தமிழிய மொழிக்குடும்ப மொழிகளுக்குப் பின்வருமாறு அபத்தமான பரம்பரை வரலாறு கூறிவருவது நகைப்பிற்கிடமானது.

தொல்திராவிடம்
(இது மாயை என்பது பாவாணர் கருத்தாகும்)

வடதிராவிடம் | மையத்திராவிடம் | தென் திராவிடம்

குருக் | பிராஹூய் | தெலுங்கு | கோண்டி | பார்ஜி | தமிழ் | துளு

மால்தோ | கூய் | கோலாமி | கன்னடம்

மலையாளம்

தொடக்கக் காலத்தில் இக்கொள்கையினராக இருந்தவர்தான் சுவெலபில். ஆயினும் தமது 1990 நூலில் (பக் 59) பின்வருமாறு கூறுவதிலிருந்து அவர் ஓரளவுக்கு உண்மை நிலைமையை உணரத்தொடங்கியுள்ளார் என்று அறியலாம்.

> "தொல் திராவிட மொழியின் நிலைமைகளை மிக அதிகமான அளவுக்கு இன்றும் கொண்டுள்ளவை தென் திராவிட மொழிகளே- அதுவும் குறிப்பாக 2000 ஆண்டுக்கு முற்பட்டு வழங்கிய தமிழ் மொழியே என்று சில அறிஞர் கருதுகின்றனர்..... மூல திராவிட மொழியின் நிலைமைகளை, அதுவும் குறிப்பாக ஒலியனியலில், இன்றும் காப்பாற்றி வைத்து நமக்குத் தெரிவிப்பது பழந்தமிழே."
>
> [One group of scholars] is inclined to look to the Southern Dravidian group of languages particularly represented by old Tamil of some 2000 years ago, as manifesting more clearly the proto-Dravidian state of affairs"....On the whole, Old Tamil has indeed preserved, particularly in phonology, a very archaic state of affairs.

20. மேலும் சுவெலபில்(1990) பக்கங்கள் 84-122ல் உள்ள இயல்கள் 6. திராவிடமொழிகளும் ஹாரப்பன் மொழியும், 7. திராவிடமொழிகளும் உரால்-அல்தாய்க் மொழிகளும், 8. திராவிட மொழிகளும் எலாம் மொழியும், 9. திராவிட மொழிகளும் சப்பானிய மொழியும் ஆகிய நான்கு இயல்களிலும் மிக விரிவாகவும் வலுவான ஆதாரங்களின் அடிப்படையிலும் திராவிட மொழிகளும் குறிப்பிட்ட நான்கு மொழிகளும்/மொழிக்குடும்பமும் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே மூலத்திலிருந்து உருவாகியிருக்கலாம் என்று தெள்ளத்தெளிவாக அறிவிப்பதைக் காணலாம். (ஆனால் இவ்வியல்களின் சுருக்கமென்று சொல்லி, கிருஷ்ணமூர்த்தி (2003) நூலின் பக்கம் 43-47இல் தரும்பொழுது சுவெலபிலின் தேற்றமான கூற்றுக்களின் வலுவை நீர்க்கவைத்து "இவ்வொப்புமைகளெல்லாம் உன்னிப்புக் கருத்துக்கள்தாம்" எனச் சுவலெபிலே ஒத்துக்கொள்கிறார். "Even by Zvelebil's own confession they are all speculative studies" என்று செப்பி ஒதுக்கிவிடுவது வியப்பிற்கிடமானது!)

## இயல் - 5

# இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் தமிழ்ச்சொற்களும் இலக்கண/மொழியியல் கூறுகளும்

## கால்டுவெல் முடிவுகள்

1. கால்டுவெல்தான் முதன் முதலில் திராவிடச் சொற்கள் பலவற்றுக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிகள் பலவற்றின் சொற்களுக்கும் இடையிலுள்ள (ஞால முதன் மொழியிலிருந்து கிளைத்தகாலத்திலேயே உருவான) ஒப்புமையைத் தன் நுண்மாணுழைபுலத்தால் கண்டு நிறுவியவர். தம் நூலின் 569-607 பக்கங்களில் அவர் குறிப்பிடும் அத்தகைய சொற்கள் வருமாறு:

சமஸ்கிருதம் கடன் பெற்ற தமிழ்ச் சொற்கள் பக்கங்கள் 569-581:

அக்கை, அக்கா, a mother. (பரோ, தேவநேயன்) அத்தா, அத்தி, a mother, an elder sister, a mother's elder sister

அடவி (தேவநேயன்)

ஆணி (தே)

அம்பா father, mother (also in old High German and Oscan: amma; Icelandic, amma=grandmother; German: amme=nurse] (பரோ,தே)

ஆலி=தோழி [<-ஆள் feminine suffix] (ப, தே. 1971)

கடுக, கடு, sharp, pungent, fierce (ப, எமெனோ)

கலா=கலை (ப,தே,எ 1971)

காவேரி=மஞ்சள்; ஆற்றின் பெயர் (தே)

குடி, house; பின்னிஷ் kota; Teutonic cot, cote etc? (ப, தே)

பட்டன, பட்டண, பட்ட, a city, town, village (ப. தே)

பந்நோ=பொன்

பல்லீ, a city/town/village பள்ளி (ப,தே)

bhaj, bhaga <- பகு (தே)

மீன - மீன் (ப,தே)

valaksha=white<-வெள்; Hungarian vilag = a light; Slavonian veli=white

வல <- வளை (to surround)

வளயம் <- வளையம், வளையல் (ப,தே)

valgu=handsome <- அழகு

ஸவ, ஸாவ <- சா; Samoiede chawe=dead
ஸுக்தி, a curl சுற்று
ஸாய the evening சாய் (தே)
malaya மலை (ப,தே)

2. குந்தர்த் (Gundert) *Zeitzscrift Deutschen Morganlandische Gesellschaft* 1869 இதழில் குறித்தவற்றுள் கால்டுவெல் ஏற்றவை வருமாறு:
உருண்ட, a demon <- உருள், உருண்டு
ஏட, ஏடக a sheep or goat (ப,தே)
கர பா(b)ல, கரவால, a sword <- கைவாள்
கர்நாடகம்
குண்ட (d) a hole <- குண்டு (ப,தே)
குர்குர = நாய் குரை (ப,தே,எ. 1971)
கேயூர, a bracelet worn on upper arm <- கை, உறு (ப.)
கோகில குயில்
கோட (ghota) = a horse குதிரை, underived, indigenous Dravidian word; தெ. குர்ரம்
சம்பக (மரம்)
நாரங்க orange
பிட,பிடக, a large basket பிடி
புத்ர=son <- புது
புந்நாக (மரம்) <- பொன்
பேட <- பெட்டி (ப,தே)
பல phala <- பழம்
மருத்த <- a medicine man, a sorcerer மருந்து, மருத்துவன்
மர்க்கட=குரங்கு <- மரம் (ப.)
முக்த <- முத்து (ப.)
bhillas <- வில்
ராத்ரி <- இரா, இரவு
விரல, loose <- விரல்
ஹேரம்ப=எருமை (ப,தே)
ஸ்ரிங்கவேர <- இஞ்சி
ரூப <- உருவம், உருவு, உரு (ப,தே)

3. கித்தல் (Kittel) *Indian Antiquary* 1872 ஆகஸ்டு இதழில் குறித்தவற்றுள் கால்டுவெல் ஏற்றவை வருமாறு:
அட்ட, an upper loft <- அடுக்கு, அட்ட (தே)
அட்ட boiled rice, food <- அடு (தல்) [ப,தே]
அட்ட/ஹட்ட, a market, a marketplace <- பட்டி, ஹட்டி
ஆம், yes ஆகும், ஆம்

ஆர கூட brass, combination of metals

ஆட, ada, as a suffix, playing with, tending after eg vachata, talkative - ஆடு=to play /use

ஆல as a suffix possessing e.g. malayala, அஸ்வவால, (ஆள் to possess)

ஆலி, a ditch - ஆழி <- ஆழ

பாலந the Milk of a cow that has recently calved; பால்

வல்லி <- வள் = bend, surround, வள்ளி (ப,தே)

முகுர, முகுல a bud <- முகிழ்

குட <- குடம்

Kuthara, an axe <- கடி = to cut

மேலும் கால்டுவெல் தாமே கண்டனவாகக் கூறும் முடிவுகளைப் பின்வரும் அ, ஆ பகுதிகளில் காண்க.

அ) திராவிடமொழிகளுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொதுவான மூல மொழியிலிருந்து உருவானவையும் வேர்மூலம் தெளிவாகத் தமிழிலேயே விளங்குவனவும் ஆன சொற்கள்:-

| திராவிடம் | சமஸ்கிருதம் |
|---|---|
| அடி(த்தல்), உதை(த்தல்) | Skt uth uth, to strike, to knockdown |
| அடை (தல்) | Vedic ad, to pervade, to attain |
| எண் (to speak, to say) | an, to sound |
| அரு(மை) | arh, to deserve<br>argha, value |
| ஊரு(தல்) | ur, to go |
| கட(த்தல்), கடு | கடு,கடுக |
| கழுதை | khara, |
| கின்ன; கன்னடம், சின்ன (தமிழ்) | kanika, kaniya, |
| கை (hand); செய். | kar, to do; kara (a hand) |
| செய் (gey கன்னடம்) | chakare, i did<br>[ural-aetaic<br>kez heis (Humgarian)<br>ghur, (Mongol) |
| குரல் | har, to shout<br>gar, to sound |
| கிழி | khur, to cut, to scratch |
| கெடு | khid, to suffer pain or misery<br>khit, to terrify<br>khet; bad, low<br>[Greek chedos=sorrow] |

| | |
|---|---|
| கொடு | kut=crooked |
| சிலிர் | chel, to shake to tremble |
| செ (to be red) | sona, to be red |
| செவி | ஸ்ரு=to hear |
| தடி, தட்டு | tad, to strike, to beat [எமெனோ 1971] |
| தீ | di, the base of dip to shine |
| தூவு,தூறு/தூற்று | dhu, to shake, to agitate<br>dhuli, dust<br>tus, to sprinkle<br>dust(Eng) |
| நட(த்தல்) | nrit-nat, to dance, to act |
| நெய் | nah, to spin |
| பல் (many, as a verb, to be multiplied) | pulu; puru, much, more |
| பாடு [தமிழில், படி என்பது பாட்டுப் படித்தல் என்ற பொருளிலும் வழங்குவதே] | path, to read, to recite |
| பால் <- (பகல் பகு) | phal, derride<br>latin: par-s, a portion |
| பிற | para, different, foreign |
| பொறு | bhri, (bhar) to bear |
| பால் (milk) | payasa, milk<br>paya, water (pa, to drink) |
| பேசு | bhash, to speak |
| பூ | phull-a, to blossom<br>pushpa, a flow |
| வல், strong, வல்லமை, வன்மை | bala, strength |

ஆ) தமிழ்ச் சொற்களோடு இயைபுடைய மேலை இந்தோ ஐரோப்பிய மொழிச் சொற்கள் (அந்தந்தப் பொருள் குறித்த சமஸ்கிருதச் சொல்லுக்கும் தமிழுக்கும் இடையிலுள்ள இயைபை விட மிக நெருங்கிய தெளிவான உறவைக் காட்டுபவை)

| | |
|---|---|
| அசை | Greek ei-ō, to shake, to move to and fro |
| அருவி | Lat, riv-us; Eng.river<br>rhuō, to flow |
| அலை | G. ala-omai; ale; to wander<br>Germ, welle, a wave |
| அவா, ஆவல் | Latin ave-o, to desire<br>Sans av, to desire |

| | |
|---|---|
| அவ்வா, அவ்வை | L. av-us, a grandfather<br>avia, a grandmother<br>av-unculus, a maternal uncle |
| ஆவி | G. aō, to flow; Skt. vā, to flow |
| இழு [கன்னடம்: எளெ] | G. helco [alliance of r to l in all languages] |
| இரும்பு | L. oes, oer-is; Saxon iren<br>Old Ger. er, Skt ayas |
| ஈனு | Eng. to ean or yean, Anglo Saxon, eanian |
| உயர் | G. aeir-o, to raise up, Armenian wor, high |
| எரி [கன்னடம், துளு உரி] | L. ur-a to burn, Armenian or, fire |
| உளை, mire | G. el-os, a marsh |
| ஊளை, | L. ululo, to howl, G. alo-luzo; E.howl, |
| எய் (அம்பை) | G. hiō, to shoot, to cast<br>heō to send |
| எழு | L. air-or to rise, to get up |
| எழு ஞாயிறு | L. Ori-ens sol |
| எல்லா, எல்லாம், எல்லீர் | Ossete. al; ali, all Saxon eal; Old HG al; Eg. all. |
| ஏர் (கன்னடம் ஆரு) a plough | L. ara,<br>G. aro-ō<br>Lith aru<br>[Schelegel's connection of these with Skt *ar* (ri or ṛi) signifying to cut or hurt, is not convincing. Radical meaning of *ri* seems to be, to run] |
| ஓரம் | L. ora, border |
| கடி, to cut, rend, | E.cut |
| reprove; கத்தி | Welsh cateia, to cut |
| கண், காண் | Welsh ceoniaw, to see<br>Skt kana, one eyed<br>Greek gno-nai<br>Latin gna, gnarus<br>Skt ña (தே) |
| கரடி | Persian chars<br>Kurd harj<br>L. urs-us |
| கழுகு | Persian kergish |

| | |
|---|---|
| | Skt garuda, grdhra |
| கள, களவு | L. clep-o to steal G. klap-eis |
| gavri (கன்னடம்) கெபி, a cave | |
| கப்பு (கன்னடம்) a pitfall | L kave-a, a cavity, a den |
| காய் to be hot, to bom | G. kaio, to be hot, to burn |
| காங்கை, (கன்னடம்) kage | S. kama, to desire; [compare Hebrew ham; hammam, to be warm; h a -ad, desire] |
| கிண்டு | G. kent-eo to prick, to goad, to spur on |
| கிழ | G. gerās, gerāi-os, age, aged Skt jar-as age |
| கிழமை [ஒருகோளுக்குக் கிழமையுடையது, உரியது] | G. kuri-akē sunday, the lord's day [kuri-os, a lord, possessor, allied to கிழ possession] |
| கிளை | G. klados, a youn shoot, brand |
| குப்பை | G. kopros, dung, dirt |
| குறு, குறுகு, குறை | German. kurz<br>L. curt-us<br>G.kurtos, currved |
| குரி [கன்னடம்]-ஆடு | Irish, kaora<br>Georg, chhuri |
| குருடு | Persian kuru; Kurd kor; Ossete kurm, blind |
| குளிர், சிலிர்<br>(க.தெ.சளி) | German kuhl<br>Saxon cyl, col<br>Eng cool, cold, chill<br>Latin gelu |
| கேள் | L. aus-cul-to to hear listen, cluo, to be called<br>G. klu-o, to hear,<br>Irish cluas, the ear<br>Lithuanian klau, to hear |
| கொல் | Russion kolyu, to stab<br>E. kill, quell |
| சாத்து | Saxon scytt-an to shut in, Eng to shut<br>Dutch schutt-en to stop |
| சால், a bucket, a furrow, | G.sēlia a flat board or tray with a raised rim |
| சிவரு (கன்னடம்), சிராய்ப்பு | Eng a shiver |

| | |
|---|---|
| சீறு | G. sur-iza to pipe, to his<br>L. Su-surr-us a whispering or whistling |
| சுடு, சுடர் | Persian sus-an;Kurd sodjan Ossete suds-in, to burn<br>L. sicco, dry<br>S. sush, dry |
| சுவை | E sap German saft |
| சுருங்கு | E. shrunk German schrumpfen |
| செப்பு | G. epo, gepo, to speak |
| செல் | L. cel, to go, celer, ex-cell-o, proe-cell-o<br>G.Kel, hel-ēs, a runner<br>kello to urgeon<br>Skt sal to go or move<br>sel to move, tremble<br>Hindi chal, to go |
| தகு | German taug-en, to be fit for<br>Eng doughty |
| தயிர் | G. tur-os, cheese<br>Skt dhayī drinking, supping, sucking |
| தின் | G. tendo to nibble, eat daintily<br>tenthies, a govrman |
| திற, தொற, திறவு | G. thura, a door<br>O. HGerman tor<br>Vedic dur<br>Skt dvara |
| தீண்டு, to touch kindle | Gothic tandya, I kindle |
| தெள் clear | G. delos clear, manifest |
| தொலை | G. tel-os an end<br>tel-e far off (from telos) |
| திருப்பு (தெலுங்கு: த்ரிப்பு-திப்பு),<br>திருகு, திரும்பு, திரி, திரிகை | G.trep ō to turn<br>E. turn Skt tarku, a spindle, to squeeze close |
| நசு(க்கு) | G. nass- ō |
| நரம்பு (நார்) | G. neur-on a tendon, a ligament |
| நினை, நெஞ்சு | G. no-eō;mno-omai, to think on, to remember |
| நீந்து, நீஞ்சு, நீச்சு | L.no (navi) to Swim<br>G. neo-ō, nēcho |

| | |
|---|---|
| நெய் (to weave) | G. neo-ō, to spin<br>nema, a thread<br>L. neo to spin, to entwine, to weave<br>German nah-en to sew<br>Skt nah, to bind, to tie |
| படு, பாடு | L. patior and G path-ein<br>to suffer, to receive or feel an impression;<br>Skt badhā trouble.<br>L. pet in impeto also to fall upon<br>Skt pat (Prakrit pad) to fall |
| பண், பண்ணு<br>பண்ணை, பணி | G. pon-eō to toil<br>Pon-os, work, a task<br>pen-omai to work<br>Babylonion *ban-as* to do, to make<br>Skt paṇ,to do business, negotiate |
| அனுப்பு (தெ: அம்பு, பனுப்பு, பம்பு) | G. Pempō to send pomp-ē a sending |
| பழு (படு, பண்டு தெலுங்கில்)<br>to be old, to become ripe | G. palai-os old, ancient palai, in olden times Skt phala, fruit |
| பல், பலர், பல, பல்கு | G. polus, poly, many much *hoi polloi* the many, the majority<br>L. Plus<br>German filu much |
| பள்ளி (பள் hollow) | G. polis a city<br>Skt pallī a village, town |
| பிய்த்தல் / பிய்க்கு | G. pekō to eomb<br>E to pick? |
| பிரி, போழ்<br>(பால், a portion) | L. par-s a portion<br>portio, to divide<br>G. por-ō; Skt phal-a to divide |
| பிள்ளை | L. pull-us, puell-a a boy, a girl<br>pullus, young of an animal |
| புகழ் | Old Persian pagiru, I praise |
| புழுதி, பூமி, பூழ்தி | L. pulvis |
| புறம், அப்புறம், இப்புறம்<br>புறத்து, புறம்பாக,<br>புறப்பாடு [கன்னடம் பரகெ(ge)= outside) | G. para, beside<br>L. foris, abroad<br>forum, public place<br>fori, decks of a ship |
| பூசை (பூனை), புலி, | Cashgar (Afghan) pusha |

| | |
|---|---|
| பில்லி (தெலுங்கு; பூனை) | Irish pus Eng puss<br>L. feles / felles a cat etc<br>Persian pelang, a tiger |
| பெண் | L. femina |
| பெரு (பரு) | Skt puru, pulu much<br>*barh, varh* to be preeminent |
| பெறு | L. pari-o, pe-per-i to bring forth, to acquire |
| பையன், பையல், பைதல் | G pais, paidos a boy or girl servant<br>L. puer, Persian puser a son<br>E. boy; Skt putra? |
| பொறு, பொறுப்பு, பொறுமை | G. pherō; L.fero<br>Skt bhṛi (bhar) to bear<br>OHG bēran, pēran<br>E bear, bore<br>Old E bearn a child |
| பொழுது, போழ்து | L ber suffix of time<br>(September, December)<br>Skt vār - a time<br>Per bar, the theme of bāri, once |
| போர், போகு | G. ba ō, to go<br>L. va do to march<br>Heb bā to come; occasionally to go |
| போடு | Dutch poot-en to set or plant<br>Danish poder to graft Eng put |
| விழு (க. bilu) | E. to fall G. fall-en |
| மகன் | L. mas, a male Gothic mag-us<br>a boy, a son; Gaelic mac, a son;<br>Tibetan maga, son in law |
| மன்(னுதல்) | L. manere |
| மயிர் [மை black] | Persian mui<br>Armenian mas |
| மற | Lith mursz to forget |
| மா (எ.கா.அரிமா) | L. mas a male |
| மாழ்கு, மாழ், மாள் | L. marc eo, to wither, to be faint<br>G. maraino to waste away, die<br>S. mri (mar) to die<br>Vedic marka, dying away? |
| மிகு, மிஞ்சு, மிகல் | L. magnus, magis, G. mega, megalis<br>Persian mih, meah<br>OHG mihhil, michil |

| | |
|---|---|
| | Norse mikil; Danish megen<br>Eng might Scotch mickle<br>Skt magh mah-maha |
| முழ்கு, அமிழ் | L. mergo to plunge, to immerse |
| முகில் | G.o-michl-e, a cloud<br>Lithuanian migla Slavonian mgla<br>Gothic milhma |
| முயல்(to labour / endeavour) | L. mol-ior to endeavour to slrive<br>G. molo-s the toils of war<br>Eng to moil |
| முணு | L. murumuro, to mutter<br>G. mu mu, to mutter, to grumble |
| மூக்கு (முகர் = to small) | G. muktēr the nose |
| மெல், மெல்ல | L. mollis, soft, tender pliant<br>G. malakos soft, gentle tender<br>Skt-mridu |
| அறை, (பாறை); ராய் (தெ)கல்= | G. la-as (*l* replaces *r*) |
| வல், வலி, வலிய, வன்மை<br>வலி=இழு; வலு=வன்மைபெறு<br>வலிய தானாக<br>வலம், right (hand) | L. val-po tobe strong, vali-idus<br>Skt bala, val-am right-hand,<br>Val-iya spontaneously |
| வள் fertility, abundance வளர் | L. al-o to nourish |
| விண்டு <- விண் | L. vent-us E.wind? |
| விறை | G. phrisso to tremble<br>rhig-eo, to shiver, shudder with cold<br>frig-eo to be cold<br>frig-us cold<br>rig-eo, rig-or to be stiff<br>E. freeze |
| வீண் | L. van-us empty, unreal, frivolous, vain |
| வேள்-வேண்டு | Saxon wanian, to fail |
| [க bēndu, bēdu bēlku, bēku] | Eng want |
| வேறு (வெறு=void, distant?) | L. *var-us* different, dissimilar.<br>*varius* diversified, various. |

4. தமிழோடு உறவுடைய செமித்திய, உரல் அல்தாய்க் மொழிச் சொற்களெனக் கால்டுவெல் கண்டறிந்தவை வருமாறு:

செமித்திய மொழிகளின் சொற்களோடு உறவுடைய தமிழ்ச்சொற்கள்:

அப்பா, அம்மா, ஆறு, அல், அவா, இரு இறங்கு, எரி, ஊர், எறி, எருமை, கூர் சாய், சினம், சிறு, சுமை, சுவர், செவ்வை, நாட்டு, நீட்டு,

நோக்கு, பழு, பால் (பகுதி), பெறு, வா [கன்னடத்திலும், பாபிலோனியத்திலும் *ba* எபிரேயத்தில் *bo*] மாய், மாறு, மெத்தை.

உரால் அல்தாய்க் சொற்களோடு உறவுடைய தமிழ்ச் சொற்கள்:

அக்கா, அத்தன், அன்னை, அப்பன், அம்மை/அம்மா, அரு(மை) /ஆர், அல்/ஏல் (prohibitive particle) அவ்வா, அலை, ஆறு, ஆம், இரும்பு, நீந்து, ஊர், உள், எழுது, எலும்பு, ஓக (தெ-one) ஒக்க(all) கடி/கறி, கட்டு, கண் கண்ணீர், கடல், கரு, கரடி, கழுகு, கல்/காழ், கள்ளம்/களவு, காற்று, காய் கால், கிழ, கீழ், குதிரை, குடி, குளிர், கை (தெ.கேலு) கப்பு, செவு/கிவி; கேள், கொல், கோன், கோழி, சாரல், சா(கு), சேரு, தலை, தீ, தேர், தோல், நக்கு, நகை, நாய், நெற்றி, நோடு, ஞாயிறு, பசுமை, பையன், பழ, பல் (tooth),பல்,/பல, பால், பிடி, பிறகு, பிள்ளை, புகை, பெண், பொக்கிலி (தெ=navel); வயிறு, வாழ்/க:bal, மனை, மரம், மறி, (விலங்குக்குட்டி), மலை, முறுமுறு, முன் (before), வான், வாய், விழி வெளிச்சம்; மேலும் ஹங்கேரிய மொழியுடன் உறவுடையனவாகக் குந்தர்த் தெரிவித்த 29 சொற்கள் [இவற்றோடு இயைபுடைய செமித்திய, உரால் அல்தாய்க் மொழிச் சொற்களை மூல நூலில் காண்க. இங்கு இடமில்லை].

வேதமொழியிலும் சமஸ்கிருதத்திலும் ஏறியுள்ள தமிழிய மொழிச் சொற்கள் பற்றிய பரோ ஆய்வுகள்

5. பரோ தமது 1945, 1946, 1948-கட்டுரைகளில் சமஸ்கிருதச் சொற்கள் ஏறத்தாழ 500 (ரிக்வேதத்திலேயே ஏறியுள்ள சுமார் 200 சொற்கள் உட்பட) தமிழிய மொழிகளிடமிருந்து கடன் பெற்றவை என்று நிறுவினார். அவற்றுள் 85 சொற்களை மட்டும் தமது *சமஸ்கிருதமொழி* (1973) நூலில் எடுத்துக்காட்டாகக் குறித்துள்ளார். அவற்றுள் சிலவற்றை எமெனோ தனது 1954, 1971 கட்டுரைகளில் வழிமொழிந்துள்ளார். [பரோ, எமெனோ சுட்டிய இச்சொற்களில் சில கால்டுவெல்லின் மேற்கண்ட பட்டியலிலேயே இருந்தவை. அப்பட்டியலில் அவை (ப)(எ) எனக் குறிக்கப்பட்டுள்ளன].

வேதமொழி / சமஸ்கிருதத்திலும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் ஏறியுள்ள தமிழ்ச்சொற்கள் பற்றிய பாவாணர் ஆய்வுகள்.

6. 1931 சூன் - சூலை *செந்தமிழ்ச் செல்வி* கட்டுரையிலேயே "மாந்தன் முதலில் பேசிய மொழி தமிழேயாதல் வேண்டும் என்றார் பாவாணர். பின்னர் 1940-இல் வெளிவந்த *ஒப்பியன்மொழி நூலில்* தமிழ் உலக முதற் பெருமொழியாயிருக்கலாம் என்றார் பாவாணர். 1949இல் எழுதி 1953இல் அச்சேறிய *முதல் தாய் மொழி*யில் "அம்மூலமொழிகளுள் முதன்மையானது தமிழே" என்றார். பின் 1981 சனவரி வரை வந்த பல்வேறு நூல்களிலும் பாவணர் தமிழே திராவிடத் தாய், ஆரியத்திற்கும் மூலம்: தமிழே உலக முதன்மொழி என்ற கோட்பாட்டையே திட்பமாக நிறுவியுள்ளார்.

7. தேவநேய பாவாணர் தமது *வடமொழி வரலாறு* (1967) நூலின் பக்கங்கள் 63-269-இல் "வடமொழிப்புகுந்த தென்சொற்கள் என்ற பகுதியிலும்

(The Primary Classical Language of the World (1966) பக்கங்கள் 224-269) மேலும் ஏராளமானவற்றின் பட்டியலைத் தந்துள்ளார். கால்டுவெல், பரோ போன்றவர்கள் ஏற்கெனவே கண்ட சொற்கள் பலவும் அவற்றுக்கும் மேலாகப் பாவாணர் தாமே கண்ட சொற்கள் பலவுமாக, மேலும் தென்சொல் மூலத் திரிசொற்கள், தென் சொல்லடிப்புணர்ப்புச் சொற்கள் தமிழிலிருந்து மொழிபெயர்த்துக் கொண்ட சொற்கள் (calx); இருபிறப்பிகள் (hybrids); வடவர் போலியான சமஸ்கிருதவேர் காட்டும் சொற்கள்; பல்வகைத் திரிப்புகளால் "வடசொற்கள்" எனச் சாதித்த சொற்கள்; தமிழ்ச் சுட்டுச் சொற்கள் / வினாச் சொற்களைப் பின்பற்றி வடமொழியில் உருவான சொற்கள்; முதலியவை பற்றி அந்நூலின் பக்கங்கள் 269-290ல் காணலாம். வடமொழிச் சொற்களுள், குறைந்தபக்கம் ஐந்திலிருபகுதி தமிழென்பர் பாவாணர் (*வடமொழி வரலாறு* : பக்கம்294) அவற்றுள் மேலே கால்டுவெல் சொற்பட்டியலில் அடங்குவனவற்றிற்கெதிரே (தே) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

8. ஸ்டெபான் ஹில்யர் லெவிட் தமது (2000) கட்டுரையில் பாவாணர் ஆய்விற் கண்ட பின்வரும் (தமிழ் - இந்தோ ஐரோப்பிய / ஆரிய ஒப்புமைகள் ஏற்கத்தக்கனவாகும் (reasonable and very perceptive) என்கிறார். இவரே மேலைநாட்டு மொழியியல் அறிஞர்களுள் முதன்முதலாகப் பாவாணர் கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அவற்றுள் பல ஏற்கத் தக்கவை என்று கூறியவர் ஆவார்.

(இவற்றுள் சில ஏற்கெனவே கால்டுவெல், பரோ, எமெனோ தந்த பட்டியல்களிலும் அடங்கியவை)

| தமிழ் | இந்தோ ஐரோப்பிய மொழி |
|---|---|
| ஒன்று, ஒண்ணு | one (Eng) |
| எல்லாம் | all (") |
| இல் (வீடு) | inn (") |
| (Negative) இல் (இல்லை) / அல் | no (") |
| (Locative) இல் (அதில்) / அல் | in (Eng) |
| ar / அர் (அவர்) | er (") |
| த் (இறந்த காலம்) | ed / t(") |
| அக்கா / அக்கை | Acca (Latin) = அம்மா |
| இலக்கு/இளக்கி | laxus (latin, lax (Eng.) |
| உதள் (வெள்ளாட்டுக்கடா) | Wether (Eng): vitulus (Latin) =கன்று |
| உரை (ப்,த்) | orare (Latin); Oral (Eng) |
| எல் | helios (Greek); Sol; (Latin) |
| ஏர் | Arable (E); arare (L) Erian (Old English) |
| ஒட்டு (சார், இசை, பொருந்து) | Oath (E); eid(Old High German) |

| | |
|---|---|
| கப்பல் | skiff, ship (E); Scapha (L); skaphe (Greek) |
| கர (ப்,ந்த்) | crypt(E);crypta(L); crypte(Greek) |
| கரடு | Coarse (E) |
| கரி | Char, charcoal (E) |
| கரை (வ்,ந்த்) | Cry (E);Schrien (German) |
| கல் | Calculus (E&L) |
| கலம் (கப்பல்) | Galley(E), Galea (L&Greek) |
| கவர் / கவர்வு | cupere (L) -desire; Cupido |
| கள் (கட்ப்,கட்) | clepere(L)- Steal<br>Kleptein (Greek) |
| களி | Clay(E); Cloeg (Old E) |
| கறங்கு (கறங்கி)-ஒலி<br>-சுழல் | ring (E);Hringan (Old E); hring (Old High German); Gyros (Greek) |
| கனை (ப்,த்) | neigh (E); Hnaegan (old E); negen (Middle High German) |
| காண் (காண்ப்,கண்ட்); | know (E); Cnawen (old E); |
| காண்கை | Gnoscere (L); |
| கால் (காற்று) | Gale (E) |
| கால் (முளை) | Caulis (L); kaulos (Greek) |
| கிழம் | Geros(Greek) |
| கிழி | Cleave(E);Cleofan (old E);<br>Glubere(L) - உரி Glyphein (Greek) - செதுக்கு |
| கிளர் (ஒளிவிடு) | glare(E); glaren (M, Eng) |
| கிளர் (எழுச்சிகொள்) | exhilarate (E); hilarare(L); hilarus (L) |
| குடி | cot (E); kot (old Norse)<br>சிறு குடிசை |
| குடில் | hut(E); hutta (old High German) |
| குரு (நிறம்) | Chroma (Greek) |
| குருகு | Crane (E);Grus (L) |
| குருளை | Girl (E); Gurle, girle (M Eng)<br>சிறுவன்/சிறுமி |
| குலவு (குலவி) | Curve (E); Curvare (L) |
| குழி | hole (E); Holh (old Eng)<br>hol (old High German) |

| | |
|---|---|
| கை | kheir (Greek), கை |
| sசப்பு/ சுப்பு | sup, sip, soup, sop (E) |
| திமிர் (வ்,ந்த்) - பூசு | Smear (E); Smeoru (old Eng)<br>Smero (old high German)<br>smyris (Greek) - emery<br>myron (") - unguent |
| தாவளம் | tavern (E), taberna (L) |
| தாளு (தாளி) | tolerate (E); tolarare (L) |
| திண், தணர்(ப்,த்) | dense(E)' densus (L) |
| திருப்பு (திருப்பி) | trope, trophy, tropic, strophe (E)<br>tropus(L) - tropos (Greek)<br>trepein (G) - to turn<br>tropicus(L) - Tropikos (G) trope;<br>trepein (G) - to turn<br>strophe(G)-act of turning strephein |
| திரும்பு (திரும்பி) | turn, tour, tournament, tourney, |
| &திரி (வ்,ந்த்) | tourniquet (Eng), tornare(L) |
| தினை | tiny (E) tine (M Eg) |
| | anatomy, dichotomy, epitome, |
| துமி (ப்,த்) | (E); temnein (Greek) - to cut |
| நோக்கு (நோக்கி) | look(E);Looken(MEng) Locian<br>(Old E); locon (old Saxon) |
| படு (ப்,த்) படை | bed (E); betti(old High German)<br>fodere (L) - to dig |
| பில்லி (பூனை) | felis (L) |
| பொலி (வ்,ந்த்) பொலம் | bellus (L) - அழகிய |
| வலி | valour(E); valere (L) |
| விழை (வ்,ந்த்) | philos(Greek) - dear, friendly |
| வேள் (வேட்ப்,வேட்) | will (E)? |
| இரும்பு | iron (E) (plausible) |

9. ஏற்கெனவே தான் 1988இல் எழுதிய கட்டுரையிலும் 2000-இல் எழுதிய கட்டுரையிலும் லெவிட் தாமாகவே அறிவித்த வேறு சில ஒப்புமைகள் வருமாறு.

| | |
|---|---|
| மெல் | Milk (E) |
| கன்று | Calf (E) |
| பேசு | speak, speech (E), Sprechen<br>(German) |

| | |
|---|---|
| கால் | leg (Metathesis) |
| குளிர் | cold, cool, chill (E) |
| கொல் | kill (E), cwellan (old Eng) |
| கோ, கோள் | king (E), konig (German) |
| கோ | God(E); Gott (German) |
| தமிழ் (தமிழர்) | Deutsh (German) - people |
| பழம் | phala (Skt) |
| மா... | maha (skt), Maur (Welsh)mor (Irish) ma(old Eng) - more (E) |
| ஊர் | புர (Skt) |
| நாடு | Nation (E) <- French, Latin natio - birth; nasci - be born; natus born |
| குக்கல் (குரைப்பது) குக்கன் | kurkura, kukkura, kukkuta (Skt) kutta (Hindi) Similarly by metathesis and vocing: dog (E) |
| இன் (கள்ளின் சாடி முத்தின் ஆரம்) | en (used in German in forming adjectives: "den Guten Stahl") |
| இல் (Non-existence) | lie (E) பொய் |
| " | il (Skt) be quiet; lie(E) - stay at rest |
| " | sin/sine (L) - without |
| இரு | ir (Skt) -rise, set in motion (Semantic Shift) |
| பூ..... | Phulla (Skt) |
| சொல் | tell(E); zellen (old High German) |

10. 1964-1977 ஆண்டுகளில் தாம் *செந்தமிழ்ச் செல்வியில்* எழுதிய கட்டுரைகளில் அம், அல், உ, உம், உய், உல், ஊது, கல், குல், சுல், துல், நுல், புல், முல், வன், வல் விள், (இவை ஒவ்வொன்றும் பல தனித் தனிப் பொருள் புடை பெயர்ப்பில்) ஆகிய அடிப்படைத் தமிழ் வேர்ச் சொற்கள் அறுபது பற்றிய கட்டுரைகளை வேச்சொல் கட்டுரைகள் என்ற பெயரில் பாவாணர் வரைந்தார். (இவற்றுள் 1964-73 கட்டுரைகளைக் கழகமும், அனைத்தையும் 2001-ல் தமிழ் மண் பதிப்பகமும் வெளியிட்டுள்ளன). அவ்வேர்ச் சொற்களிலிருந்து கிளைத்தனவாகப் பாவாணர் கண்டறிந்த சமஸ்கிருத/ இந்தோ ஐரோப்பியச் சொற்களைக் குறிப்பிடுவது இன்றியமையாதது.

| ......என்னும் வேர்பற்றிய பாவாணர் கட்டுரை | அக்கட்டுரையில் கண்ட தமிழ் -> சமஸ்கிருத இ.ஐ.சொற்கள் |
|---|---|
| அம் (பொருந்தல்) | அம்-அமை-அவை-சவை Sabha (S) |
| அல் (பொருந்தல், கலத்தல் முதலியன) | அல்-இல்-இர்-இரும்பு iron (E) |

| | |
|---|---|
| உ (சுட்டு -முன்மை) | உம்-சும் summum (L)<br>உ -ut,ud (Skt Prefixes indicating height and greatness) |
| உம் (கூடுதல்) | உம்-உக-உகத்தல் (joining) நுக Yuga (S) - yoke (E) |
| உய் (செல்லுதல், முன்மை) | உய்-அய் (S) = to go; = ayana<br>உய்-இய uy -iy (S) = " |
| உல் (எரிதல்) | உல்-உர்-உரு -uro (-burn) Latin<br>உல்-அல்-அர்-அரத்தம் - rakta(S) |
| உல் (வளைதல்) | உல்-உலவு-உலகு -loka (S) |
| ஊது (ஒலிக்குறிப்பு) | ஊதை-வாத (S); hoot(?) |
| கல் (கருமை) | கல்-கள்-காள்-Kali (S)<br>கல்-கர்-கரு-கருத்தல் (வினை செய்தல்) தமிழில் வழக்கிழந்தது) -<br>கருவி -karana (S) |
| குல் (தோன்றல்) | குல்-குள் குருளை -gurle (ME) - girl<br>கல் குல் குட குட்டி - kide (ME) - kid |
| குல் (வளைதல்) | குல்-குட-குடி -cote(OE) -cot |
| குல் (குத்தல்) | குத்து குத்தி கத்து -cutte(ME) -cut<br>குத்து-குந்து-Cf squat (M.E) |
| குல் (எரிதல்) | குல்-கால்-காய்-காய்ந்து-காந்து<br>-cand (=shine, be white)L<br>-chand, chandra (S) |
| குல் (துளைத்தல்) | குல்-கில்-கிள்-கிழ்-கிழி<br>(=tear off) = cleof (OE) -cleave |
| சுல் (வளைதல்) | சாரல் (hill) சேரல -சேரலன் -kerala (S)<br>சுல்-சல்-சர்-சருகு-சருக்கு-சருக்கம்-சக்கரம்-Chakra (S)<br>(as against kru-chakra (Sanskritists) car(?)-chakra; of doubtful derivation(M.Williams) |
| சுல் (துளைத்தல்) | சுருங்கை -srunga (S); Siringa (L); syringe (E) |
| துல் ( " ) | துன் - துன்னல் -tunnel (E) |
| நுல் (ஒளிர்தல்) | நுல்-நெல் (gold-like bright grain)-நெகில்-நெகு-நகு<br>நகர் -Nagara (S) |
| நுல் (நீட்சி) | நுல்-நெல்-நெகில் நீல, நில்-நிலம்-nila (S)<br>நுல்-நில்-நிற்றல்-நிச்சல்-நித்தல்-nitya (S) |

| | |
|---|---|
| நுல் (பொருந்தல்) | நுல் நெல்-நள்-நளி-நடி -nataka(S) நுல்-நெல்-நெய்-நேயம்-நேசம் (Pkt-snih-sneha (S) |
| புல் (பொருந்தல்) | புல்-பொல்-பொரு-பொருத்து-பொத்து-பொத்தகம் – Pustaka(S) |
| புல் (widening) | புலு-புது (Cf மெல் -மெது) புதை - புடம் -புட்டம் bhrishta (S), but (LG), |
| புல் (திரட்டல்) | புல்-புள்-பிள், பிண்டு, பிண்டம் -pintam (Rg Veda)=lump, clod (Burrow also favours Dravidian origin) |
| புல் (விரும்புதல்) | புள்-பெள் (=like)-பெட் -pet (E) |
| புல் (வளைதல், சுற்றிவளைதல்) | புல்-புரி -pari (S; peri (Greek) |
| புல் (துளைத்தல்) | புல்-புர்-புரை -pura(S); poros(=passage) Greek; pore(E) புல்-புள்-பிள்-பிளா-பிடா -pitaka(S) புல்-புள்-பள்-பள்ளி -house, village) – palli(S); polis(G) புல்-பொல்-பொய்-பெய்-பேய்-பேசு-bhash (S) பொளு-பொழு-பொகு-பகு (=to divide) bhaj (S) (According to Caldwell also) பக்கம் -paksha (S); pagus(L) பத்தி -Bhakti (S) பதி-பாதம்-பாத(S); podos (G); foot (E) பாதம்-பாதை -path (E) pul-pal-pal-palaiya-palaios (=old) G |
| முல் (இளமை) | முல்-மள்-மழ-மழவு-மகவு-Mac (Gaelic word signifying son) முல்-முளு-முழு-முகு-முகம் -mukha (S) |
| முல் (முன்மை) | முல்-முன் - முந்து- முது-முதிர்-முதுமை -mature(L) ? |
| முல் (மென்மை) | முல்-மெல் -mollis(=soft)L; mellow(E); மெல்-மெல்குதல் மெல்லுதல் -Cf molere (=grind) L; mel(=grind) Gothic; mill meal (E) |
| முல் (பொருந்தல்) | மன் - மான் -மானம் (=equivalence) மாத்திரம் – matra (S) -மா (=measure)-mas(S) மல்-மால்-மாலை—mala(S) மல்-(=blackness) -Cf mal(OE); mole(E) மல-மரு-மரு-(= embrace)-marumam |

| | |
|---|---|
| | மருமம்- mammam மம்மம்- அம்மம் - ammam-mamma (L) for breasts மருளல் -Mirablis (mirari, wonder at)= mirror (E) முல்-முட்டுதல் -CF: mitan(OE); meet (E moot(=assembly)E Cf also butt (E) |
| | மட்டு-மடி =metan (OE, OS); meta (On); mete (=to measure)E |
| | மத்து-மது -madhu(S);methu(=wine)G; mead(E) |
| முல் (வளைத்தல்) | மரு-மறு-மற்று-மாற்றம் (=speech); Cf motto (Italian); mot (mo)=word, saying F முணங்கு moen (OE;moan(E) |
| முல் (துளைத்தல்) | முள்-முழு-முழுகு -mergo, mergere(L); merge(E) |
| | மடு (=to eat)-மடம்-matha(S) |
| | மடை (- cooked rice); CF meat (E) from Germanic |
| வல் (வளைதல்) | val-vaṭṭu-vaṭṭam-vaṭṭa (parakrit) =vrddha (S); vert, vers(L) |
| வள் | வள்-வர்-வார் (proto-Dravidian form of verb meaning "come") -வா-வ-வர்-வரு [as against எமெனோ வர்-வார்] |
| | வள்-வன் - வென் (=to come)L; veni=to come Cf tel-ten-ten ; koḷ -koṉu(Tel) |
| வின் (விரும்புதல்) | வின் -வெள்-வேள்-வேட்கு(தல்) Cf; bhiksh (S); beg (E) |
| வின் (பிளவு) | விழி-vili-vidi, visi (=to see)L; vid (=to know)(S) விடர் -vitaravan (=cat with cleavege in iris)- vidalam, vidaram (=cat)S vaiduryam=cat's eve, a gem |

11. மேலும் இறுதியாகச் *செந்தமிழ்ச் செல்வியில்* 1977-80இல் பாவாணர் வெளியிட்ட கட்டுரைத் தொடரில் பின்வரும் 22+2 தமிழ்ச் சொற்களும் அவற்றிலிருந்து உருவான ஆயிரக்கணக்கான சொற்களும் பல்வேறு மொழிக் குடும்பங்களிடையேயும் (இந்தோ-ஐரோப்பிய மொழிகள் உட்பட) பரவி அம்மொழிகளின் சொற்றொகுப்புகளின் முக்கியப்பங்கு வகிக்கின்றன என்று நிறுவியுள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். இக் கட்டுரைகளின் ஆங்கில ஆக்கம் பி.இராமநாதன் செய்தது (விரிவான முன்னுரையுடன்) -2004இல் "Nostratics the light from Tamil according to Devaneyan" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

i) உம்பர் -upari (Rg Veda); upari (Skt); super (Latin, with prosthetic *s*); huper(Greek); hyper (Eng).

ii) உய் - Vedic and Skt = to go, walk, flow, advance

iii) உருளை - Uruḷai - rota (Latin, 'a wheel'); roll (Eng.)

iv) கண்-காண் - Cunning (ME), knowen (ME). know (Eng)-jñan (Skt)

vi) காந்து- candeo(L); cand, candra (Skt)/

vii) காலம் -kāla (Skt)

viii) கும்மல் -cum(L);sum(G),sum(Skt)

x) எல்லா -are (Skt); hallo (E)

xii) மகன் -magus (Gothic); mac/Mc (Gaelic); mann (German); man (E); manus (Vedic); manu, manushya (Skt.)

xiii) முன்னுதல் -mannutal-manam-manas (Skt)

xv) புகா bhuj, bhukti, bhojana (Skt)

xvi) பள்ளி polis (Greek)

xvii) பதி-பாதம் -pada (RV); podos, pedis(Latin, Greek)

xviii) புரி-pur (RV); peri (Greek)

xix) பொறு -bhri (RV); phero(Greek);fero(Latin); bear (Eng);

xx) பகு-paksha(Skt.) phasis (Greek) fama(Latin)

xxi) பேசு- bhash (Skt.) phasis (Greek) fama (Latin)

xxii) திரும்பு - strophe (Greek); torquero(Latin); torque (Eng)

தொகுதிச் சொற்கள்

பூனைப்பெயர்கள்: kotti (Kannada) and korri (Malayalam)
katta (Greek);
pucai-puss/pus/pusse (Eng.etc.)
pillai-billi(Hindi): feline (L)
Vitaravan - vitaraka etc. (Skt.)

கள் வழிப் பிறந்த நெருப்பின் பெயர்கள் : cul-sol (L) sun etc.

தனிச் சொற்கள் 40 பற்றியும் மெல்-வல், அம்மை - அப்பன் போன்ற இணைச் சொற்கள் 5 பற்றியும்; (அ.இ.உ. சுட்டுச் சொற்கள் போன்ற) தொகுதிச் சொற்கள் 5 பற்றியும் பாவாணர் எழுத எண்ணியிருந்தார் என்று *செந்தமிழ்ச் செல்வி* சனவரி 1977லிருந்து அறிகிறோம். முழுமையாக இதனைச் செயற்படுத்து முன்னர் 1981 அவர் மறைந்துவிட்டார் (ஆனால் சுட்டுச் சொற்கள் பற்றிப் பாவாணர் தமது நூல்கள் பலவற்றில் மிக விரிவாக எற்கெனவே எழுதிவிட்டார்.)

## இலக்கணக் கூறுகள்

12. திராவிடமொழிகளின் பின்வரும் இலக்கணக் கூறுகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் மூலமொழியின் அத்தகைய இலக்கணக்கூறுகளின் அளவுக்குக் கழிபழந் தொன்மை வாய்ந்தவை என்பதையும் கால்டுவெல்தான் முதலில் உணர்த்தியவர். தமது நூலின் 149-151 பக்கங்களில் தமிழிய மொழிகளிலிருந்து தான் சமஸ்கிருதம் ட், d, ண் முதலிய வளை நாஒலியன்களை (Retroflex/Lingual/Cerebral), அவ்வொலியன்களைக் கொண்ட தமிழ்ச்சொற்கள் பல உட்படக் கடன் பெற்றது என ஆணித்தரமாக நிறுவினார். மேலும் அவர் தமது ஒப்பிலக்கணத்தின் 1875-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பில் "வட இந்திய மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து மாறுபட்டுள்ளன; அவ்வாறு மாறுபட்ட தன்மைகள் பெருமளவுக்கு இந்தோ ஆரியமல்லாத (திராவிட) மொழிகளைச் சார்ந்தவை" (The direction into which those vernaculars have been differentiated from Sanskrit has to a considerable extent been non-Aryan) என்றார்.

13. இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலிருந்து கடன் பெறப்படாதவையும், என்றாலும் அம் மொழிகளின் தொல்பழங் காலத் தன்மைகளையொத்தனவாக இருப்பனவும், ஆன பின்வருவனவற்றை இன்றும் திராவிட மொழிகள் கொண்டுள்ளன என்பதையும் கால்டுவெல் நிறுவினார். (அதாவது இக்கால மொழியியல் நடையில் கூறுவதானால், தொல் இந்தோ-ஐரோப்பிய மொழித் தன்மைகளைத் திராவிட மொழிகள் தாமாகவே கொண்டுள்ளதை நிறுவினார்.)

(1) ஒலிப்பு எளிமை, இனிமைக்காக 'ந' வின் பயன்பாடு - கிரேக்க மொழியில் உள்ளது போல

(2) படர்க்கையிடப் பிரதிப் பெயர்களிலும் வினைச் சொற்களிலும் பால் வேறுபாடு இருப்பது- குறிப்பாகப் பொதுப்பால் இருப்பது

(3) சுட்டுப் பிரதிப் பெயர்களிலும், படர்க்கைப் பிரதிப் பெயர்களிலும் பொதுப்பால் ஒருமையைக் காட்ட d, த் பயன்பாடு

(4) இலத்தீனில் உள்ளது போலப் பொதுப்பால் பன்மையைக் காட்ட *அ* பயன்பாடு

(5) சேய்மைச் சுட்டுக்கு *அ;* அண்மைச் சுட்டுக்கு *இ* பயன்பாடு

(6) பெர்சியன் மொழியிற்போல, பெரும்பாலும் இறந்த காலத்தைக் காட்ட *த்* பயன்பாடு

(7) வேரில் ஒரு ஒலியனை இரட்டித்துச் சில சொற்களில், இறந்த காலத்தைக் காட்டுதல்

(8) வினைச் சொல்லில் ஓர் உயிரெழுத்தை நீட்டி ஒலித்து வினையாலணையும் பெயர்களை அமைத்தல்.

"Primitive underived Indo-Europeanisms discoverable in the Dravidian languages [in current parlance : 'Proto-Indo European features derived from Dravidian"]:-

1. The use of *n*, as in Greek to prevent hiatus
2. The existence of gender in the pronouns of the third person, and in verbs and in particular the existence of a neuter gender.
3. The use of *d* or *t* as the sign of the neuter singular of domonstrative pronouns or pronouns of the third person.
4. The existence of a neuter plural, as in Latin, in short *a*.
5. The formation of the remote demonstrative from a base in *a;* the proximate from the base in *i*.
6. The formation of most preterites, as in Persian by the addition of *d*.
7. The formation of some preterites by the reduplication of a portion of the root.
8. The formation of a considerable number of verbal nouns by lengthening the vowel of the verbal root.

"இந்தியா ஒரு மொழியியற்புலம்" ஆய்வாளர்கள் திராவிட மொழி களிருந்து இந்தோ ஆரிய மொழிகளுக்குச் சென்றுள்ளனவாகக் கருதும் இலக்கணக் கூறுகளும், மொழியியல் கூறுகளும்.

14. இந்திய மொழிக் குடும்பங்களிடையே பொதுமை குறித்து முதன்முதலில் விரிவாக 1956 இல் (Language 32; பக். 2-16) "இந்தியா ஒரு மொழியியற்புலம்" (India as a Linguistic Area) என்னும் கட்டுரையில் எழுதியவர் எமெனோ. இந்தியாவில் உள்ள தமிழிய, இந்தோ ஆரிய, முண்டா இன மொழிகளிடையே பொதுமைக் கூறுகள் (பெரும்பாலானவை தமிழிய மொழிகளிடமிருந்து பிறவற்றுக்குப் பரவியவை) உள்ளதை அக்கட்டுரை நிறுவியது. இக்கோட்பாட்டின் கரு வெகு முன்னரே உருவானது. (1788லேயே சர்வில்லியம் ஜோன்ஸ்) இந்தி முதலிய வட இந்திய மொழிகளின் இலக்கணக்கூறுகள் இந்தோ ஆரியமொழிக் குரியவையல்ல [அப்பொழுது "தமிழிய மொழிக் குடும்பம்" பற்றி மேனாட்டறிஞருக்குத் தெரியாது] என்று கூறியுள்ளார்:

(Regarding modern Indo-Aryan Languages): "and this analogy might induce us to believe, that the pure Hindi, whether of Tartarian or Chaldean origin, was primeval in upper India, into which the Sanskrit was introduced by conquerors from other kingdoms in some very remote age".)

15. தமிழிய மொழிகளிலிருந்து வேதமொழி, சம்ஸ்கிருதம் வட இந்திய (இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தினவாகக் கருதப்படும்) மொழிகள், ஆகியவற்றில் ஏறியுள்ள ஒலியனியல், இலக்கணவியல் மொழியியல் கூறுகள் பலவற்றை எமெனோ தமது 1956 கட்டுரையில் நிறுவினார்.

i) ஒலியனியல் : *ட;ள* (ரிக் வேதத்தில்), *ண* ஆகிய வளை நாவொலிகள் (retroflex/cerebral/domal தமிழிய மொழிகளிலிருந்து கடன் பெற்றவை. அவ்வொலிகளைக் கொண்ட சொற்களைத் தமிழிலிருந்து கடன் பெற்ற பின், ஒலிகளையும் வண்ணமாலையில் சேர்த்தனர்.

ii) வினையெச்சம் (gerund/absolutive/incomplete verb/past nonfinite verb/converb/indeclinable participle/ adverbial participle/past participle (Jothimuthu), Conjunctive participle (Grierson) ரிக்வேத காலத்திலேயே ஏறிவிட்டது.

iii) நேர் கூற்று முடிந்தவுடன் "என" என்று தமிழில் வருவது போல் ("தன் செய்வினை முடித்தெனக் கேட்பல்-"*புறநானூறு* 27:9-10) சமஸ்கிருதத்தில் கூற்றுக்குப் பின்னர் "இதி" iti (= இப்படிக் கூறினார்) என வருதல்.

iv) எதிரொலிச் சொற்கள் (echo words) "புலி கிலி" போன்றவை

v) ஒலிக்குறிப்புச் சொற்கள்-சளசள, பட பட போன்றவை.

vi) ஓடு, ஓட்டு, ஓட்டுவி; நட, நடத்து, நடத்துவி போன்ற, வாய்பாட்டு (simplex, causative, causative of causative) வினை வடிவங்கள்.

vii) எமெனோ 1974 கட்டுரை: தமிழ் *உம்* பயன்பாடு போன்ற சமஸ்கிருத *அபி* api ஐ பயன்படுத்துதல்.

viii) மேலது கட்டுரை: திராவிட உறவு முறைச் சொற்களிலும் சரி, இந்தோ-ஆரிய உறவுமுறைச் சொற்களிலும் சரி, பெரும்பாலும் தொழிலைக் குறிக்கும் சாதிப்பெயர் ஆணுக்கு உள்ளது. ஆனால் பெண்ணைக் குறிக்கும் பொழுது இந்தச் சாதிக்காரனுடைய மகள்/மனைவி/தாய்/பிற உறவு என்ற அளவிலேயே அமைந்து விடுகிறது.

16. முன் பத்தியிற்கண்ட செய்திகளைக் காலின் மாசிகா தமது Defining a Linguistic Area: South Asia (1976) நூலில் விரிவாக விளக்கியுள்ளார். தமிழிய மொழிகளையொட்டிய மாற்றங்களே இந்தோ-ஆசிய மொழிகளில் ஏறியுள்ளன என்பது அவர் கருத்து "(India) is a fairly

stable typological area where the brunt of the burden of adaptation is borne by intrusive rather than local languages."

17. பாவாணருடைய *வடமொழி வரலாறு* (1967) 295-321 பக்கங்களில் இலக்கணவதிகாரம் என்னும் பகுதியில் பின்வரும் இலக்கண/மொழியியல் கூறுகளை வேதமொழியும் சமஸ்கிருதமும் தமிழிய மொழிகளிடமிருந்தே கடன் பெற்றுள்ளன எனத் தெளிவாக நிறுவுகிறார்.

எழுத்தியல்

1. வண்ணமாலை (தமிழிய மொழியையொட்டி உருவாக்கிக் கொண்டது 2. ஒலியும் பிறப்பும் 3. எழுத்துச்சாரியை 4. எழுத்துவைப்பு முறை, 5. எழுத்தொலிமாத்திரை/அளபு 6. எழுத்துவடிவம் 7. புணர்ச்சி.

சொல்லியல்

"வடமொழி வேற்றுமையமைப்பும் தமிழைத் தழுவியது"; "வடமொழி திரிமொழியாதலின் அதன் வினைகட்கு வேர்ச்சொற்கள் அம்மொழியில் இல்லை. அவைபெரும்பாலும் இயல்மொழியாகிய தமிழில் தான் உள்ளன." [தாது பாட வேர்களின் தன்மை பற்றி ஏற்கெனவே மேலே இயல் 3, பத்தி 8இல் கண்டோம்]. குறிப்புச் சொற்கள்-அசைகள்; இணைப்பிடைச்சொல் (உம்-உந்து-Skt-உத்த; OE, Eng and) சுட்டு/வினாச்சொற்கள், வினையெச்சம்.

தொடரியல்

தொகைச் சொல்(ஸமாஸ); சொற்றொடர் வரிசை ("பெரும்பாலும் தமிழ் முறையை ஒத்ததே").

18. பாவாணர் 1966இல் வெளியிட்ட The Primary Classical Language of the World பக்கங்கள் 279-286ல் தமிழிலிருந்து இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் ஏறியுள்ள (முன்னொட்டுகள், பின்னொட்டுகள், சுட்டுகள், வினை ஈறுகள் முதலிய) மேலும் பல மொழியியல், இலக்கணக் கூறுகளைக் குறிப்பிட்டுள்ளார்.

# இயல் - 6

# வண்ணனை மொழியியலின் வழுக்கள் பற்றிப் பாவாணர் கருத்துக்கள் இன்று ஏற்கப்பட்டுள்ளமை

1. மொழியியலில் முக்கியமான பல விஷயங்களில் சில ஆதாரமற்ற கோட்பாடுகள் முன்பு கோலோச்சி வந்தன. அண்மைக் காலத்தில்தான் அவை மறுக்கப்பட்டுள்ளன, கைவிடப்படுள்ளன. ஆனால் அவை கோலோச்சிவந்த காலங்களிலேயே அஞ்சாது அவற்றுள் சிலவற்றை முழு அபத்தம் என்று ஒதுக்கியும் சிலவற்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், சிலவற்றுக்குத் திருத்தங்கள் தந்தும் அந்தக் காலத்திலேயே தமது ஆழ்ந்த மொழியியல் நுண்ணறிவை மதுகையுடன் நிலைநாட்டிய முன்னோடி பாவாணர் ஆவார். சில காண்போம்.

ஒலியனியல் மாற்றக் கோட்பாடுகள் - இந்தோ-ஐரோப்பிய மொழி களுக்குப் பொருந்துபவை - எல்லா மொழிக் குடும்பங்களுக்கும் பொருந்துமா?

2. புளும்பீல்டு 1925-இல் *Language* என்னும் இதழில் கூறியது வருமாறு:

> "அமெரிக்கச் செவ்விந்தியர் மொழிகளைப் பொறுத்த வரையில் ஒலியன் மாற்றக் கோட்பாடுகள் பொருந்தமாட்டா என மெய்ல் மற்றும் கோஹன் ஆகிய பிரெஞ்சு அறிஞர்கள் கூறுவதை மறுத்தாக வேண்டும். சொற்களின் பொருள் மாறினாலும் சரி மாறாவிட்டாலும் சரி சொற்களில் காலப்போக்கில் ஏற்படும் ஒலியன் மாற்றம்; ஒரு ஒலியன் மாறினால் அதற்குத் தக வேறுமாற்றங்கள்; ஆகியவை எல்லா மொழிகளுக்கும் பொதுவானவை என்ற சட்டத்தை மீறி அத்தகைய பொதுச் சட்டம் செல்லுபடியாகாத மொழி எங்காகிலும் ஒன்றே ஒன்று இருந்து விட்டாலும் சரி "ஒலியனியல் மாற்றக் கோட்பாடு" அடிப்படையில் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வரலாற்றையோ வேறு எந்த மொழிகளின் வரலாற்றையோ நாம் வரையறுக்க முடியாது போகும். ஒரு ஒலியன் காலப்போக்கில் இன்னவாறு மாறும் என்பது அந்தந்த மொழி பேசுநரை மட்டுமே சார்ந்ததல்ல. மாந்த இனத்தின் அனைத்து

மொழிகளுக்கும் அத்தகைய விதிகள் பொருந்தியாக வேண்டும். பொருந்தா விட்டால் அவை விதிகளே அல்ல, அபத்தங்கள்."

3. 1966-இல் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாட்டில் A. சுப்பையா படித்த கட்டுரையில் புளும்பீல்டின் கருத்தைப் பின்வருமாறு மறுத்துள்ளார்:-

> "எல்லாமொழிகளிலும் ஒலியன்கள் மாறும்; எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கும் என்ற உன்னிப்பை (அதை விதி என்பது தவறு).
>
> இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பற்றி மட்டுமே நன்கு அறிந்திருந்தவர்களும் சிந்தனைத் தெளிவு அற்றவர்களுமான மேனாட்டு மொழியலறிஞர் 'பொதுவிதியாக' அமைத்துவிட்டனர்; அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவே."

பாவாணர் 1930-களிலேயே புளும்பீல்டின் கருத்தை மறுத்துள்ளார். மேலும் விரிவாக 1959-இல் *குயில்* பொங்கல் இதழிலும் 1968-ல் *வண்ணனை மொழி நூலின் வழுவியல்* நூலிலும் பாவாணர் வண்ணனை மொழி நூலாரின் அபத்தங்களை விளக்கியுள்ளார்.

பரோ, எமெனோ, பத்ரிராஜு கிருஷ்ணமூர்த்தி போன்ற திராவிட மொழியியலறிஞர்களின் கோட்பாடுகளில் இரண்டை -அதாவது,

> தொல் திராவிடத்தில் மொழிமுதற் ககரம் பலவிடங்களில் சகரமாக மாறியது. அதாவது (அபத்தமாக) கேரளன் -> சேரலன், செம்பு -> கெம்பு, செய் -> கெய் போன்ற பிழைபட்ட சொல் வரலாறுகள்!
>
> பல தமிழ்ச்சொற்களில் மொழி முதற்சகரம் நீக்கப்பட்டது. அதாவது (அபத்தமாக) சுப்பு -> உப்பு, சாறு -> ஆறு (river) *சீய்* -> ஈ போன்ற பிழைபட்ட சொல் வரலாறுகள்!

ஆகிய இரண்டு கோட்பாடுகளையும் அன்றே திட்டவட்டமாகப் பாவாணர் மறுத்துள்ளார். இதனை விளக்கும் வகையில் இராமநாதன் (2003) எழுதிய கட்டுரையைக் காண்க.

4. பாவாணர் அன்றே சொன்னதை அண்மையில்தான் தலைசிறந்த மேனாட்டு மொழியியலறிஞருள் ஒருவரான ஆர்.எம்.டபுள்யூ டிக்சன் தமது *மொழிகளின் தோற்றமும் வீழ்ச்சியும்* (கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 1977) நூலில் சொல்கிறார். அந்நூலின் 14ஆம் பக்கத்தில் மொழிகளின் மாற்றம், வளர்ச்சி; மொழிகள் பிரிந்து /சிதைந்து/பிறமொழிக் கூறை ஏற்று உருமாறுதல் அல்லது 'ஒன்று பலவாதல்' ஆகியவற்றை மொழியியலாளர் ஆய்வுசெய்யும் பொழுது "இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் என்ன நடந்ததோ

அதுவே பிறமொழிக் குடும்பங்களிலும் நடந்திருக்க வேண்டும்" என்று சுளுவாக எண்ணிக்கொண்டு செயல்படுவதைக் கண்டித்துள்ளார்.

### சொல் மாற்றக்காலக் கணிப்பின் புன்மை

5. பல்வேறு வகைச் சொற்களின் விழுக்காட்டுக் கணக்கு அடிப்படையில் மொழிகளின் உறவை ஆய்வுசெய்தல் (Lexicostatistics), சொல் மாற்றக் காலக் கணிப்பு (Glottochronology) ஆகியவை பிழையானவை என அண்மையில்தான் ஒதுக்கப்பட்டுள்ளன. பாவாணர் 1959லேயே அவற்றை ஒதுக்கிவிட்டார். டிக்சன் தமது நூலின் 36ஆம் பக்கம் கூறுவதனைக் காண்க:

> "உலகின் சில மூலை முடுக்குப் பகுதிகளில் இன்னும் லெக்சிகோ ஸ்டாடிஸ்டிக்ஸ், க்ளாட்டோக்ரானலஜி போன்றவை பயன்படுத்தப் படுகின்றன. ஐரோப்பிய - அமெரிக்க மொழியியலறிஞர் அவற்றை ஒதுக்கித் தள்ளி 20 ஆண்டுகள் கழிந்த பின்னர் 1980 இல் இவற்றைப் பயன்படுத்தத் தொடங்கிய ரஷ்யாவும் இப்பகுதிகளுள் ஒன்று!".

"சொல் மாற்றக் காலக் கணிப்பு" முறை கவைக்கு உதவாதது என்பதே ரிச்சார்டு ஜண்டா மற்றும் பிரயான் ஜோசப் (2003)-இன் கருத்துமாகும். பக் 118, 173. Nature 11-10-2007 இதழில் தெகம்சே பிச் (W. Tecumseh Fitch) எழுதிய An invisible hand என்ற கட்டுரையிலும் அதற்கு ஆதாரமாக அதே இதழில் வெளிவந்த இரண்டு ஆய்வு முடிவுகளிலும் be, have, come, do, find, get, give, go, know, say, see, take, think, two, who, tongue, might, one, to die, போன்ற அடிப்படைச் சொற்கள் பத்தாயிரம் இருபதாயிரம் ஆண்டுகளானாலும் மாறுவதில்லை என்பது தெளிவாக விளக்கப்படுகிறது.

### ஞால முதல் மொழி ஒன்றுதானா? பலவிடங்களில் பல முதன் மொழிகள் தோன்றினவா?

6. மாந்தன் முதல் தாய் மொழி ஒன்றே. அதற்கு மிக நெருங்கியது தமிழ் என்பது பாவாணர் கடைப்பிடி; டிக்சன் கருத்துப்படி "முதல்தாய் மொழி ஒரே இடத்தில் தோன்றியிருக்கலாம், அல்லது இரண்டு அல்லது மேற்பட்ட இடங்களில் தோன்றியிருக்கலாம்" "either (Monogenesis or Polygenesis "perfectly possible.") பொதுவாக மாந்த இனம் மொழியைத் தோற்றுவித்தது இன்றைக்கு 50,000 ஆண்டுகட்கு முன்னர்த்தான் என்று அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

7. ஜோஹன்னா நிக்கல்ஸ் *"மொழியின் தோற்றமும் அது ஒன்று பலவான வரலாறும்* (1988)" என்ற தொகுப்பு நூலில் வரும் தமது கட்டுரையில் கூறும் கருத்தானது "மொழி ஒரே முறை ஒரே இடத்தில் தோன்றியிருந்தால் சுமார் 1,30,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கலாம்; சுமார் பத்து இடங்களில்/காலக்கட்டங்களில் தோன்றியிருந்தால் சுமார் ஒரு இலட்சம்

ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கலாம் என்பதாகும். இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் (சமஸ்கிருதம், வேத மொழி, அவெஸ்தன், கிரீக், இலத்தீன், கெல்டிக், ஜெர்மானிக், ஸ்லாவ் போன்றவை) மூதாதையான தொல் இந்தோ-ஐரோப்பிய மொழி உடைந்தது சுமார் கி.மு.4000 வாக்கில் என்பது மொழியியலறிஞர் கருத்து. அவை மேலும் உடைந்து சிதைந்து, இன்று சுமார் 100 இந்தோ-ஐரோப்பிய மொழிகள் உலகில் உள்ளன. ஒரு இலட்சம் ஆண்டுகளை 6000த்தால் வகுத்தால் 17 கிடைக்கும். 6000 ஆண்டுகளில் இந்தோ-ஐரோப்பிய மொழி ஒன்று நூறு ஆகியது போன்ற மாற்றம் தொடக்கத்திலிருந்தே ஏற்பட்டுவந்தது என நாம் எண்ணுவோமானால் இப்பொழுது உலகில் $10^{x2x17} = 10^{34}$ அதாவது பத்து மில்லியனுக்கு (ஒரு கோடிக்கு) அதிகம் எண்ணிக்கையில் இப்பொழுது மொழிகள் இருக்க வேண்டும்! 6000 ஆண்டுகளில் 1 மொழி 2 ஆகமட்டும் உடைகிறது என்று கொண்டாலும் $2^{17}$ =1,30,000 மொழிகள் இப்பொழுது உருவாகி யிருக்கவேண்டும்! ஆனால் இன்று உலகில் 5000 மொழிகள் மட்டுமே உள்ளன ஏன் இப்படி? என்கிறார் நிக்கல்ஸ்.

8. டிக்சன் தனது 1997 ஆம் ஆண்டு நூலில் முன்வைத்துள்ள "சில காலக்கட்டங்களில் சிதைவும், மாற்றமும் மிகையாக இருப்பினும், நிலைத்தன்மை வாய்ந்த நெடுங்காலங்களும் அமைந்த punctuated equilibrium" கொள்கை இதற்கு விடைதருகிறது. மொழி தோன்றிய தொல் பழங்காலத்திலிருந்து பார்த்தால் பல பத்தாயிரம் / ஆயிரம் ஆண்டுகளுக்கு மாற்றம் இல்லாத ஸ்திரத்தன்மையும் நிலவிட, சிற்சில காலக்கட்டங்களில் மட்டுமே மொழிகள் உடைதல்/ சிதைதல்/ ஒன்றுபலவாதல் / உருமாறுதல் நடந்திருக்கவேண்டும் என்பதே இக்கொள்கை. ஒரு மொழி பேசுநர் விரைந்து ஒரு நிலப்பகுதியில் நுழைந்து பரவுதல்; பிற மாந்தர் அதுவரை குடிபுகாத பகுதிகளில் குடியேற்றம்; புதிய கருவிகள் கண்டுபிடிப்பு, புதிய கோட்பாடு அல்லது புது வாழ்க்கை முறை (கால் நடை மேய்த்தல்; வேளாண்மை போன்றவை) காரணமாக ஏற்கெனவே ஒரு பகுதியில் குடி யேறியுள்ளவர்களை வீழ்த்திப் புதிய குழுவினர் அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்துதல்; போன்ற காலக்கட்டங்களில் மட்டுமே மொழிகள் உடைவதும் புதுமொழிகள் உருவாவதும் நிகழ்ந்திருக்கவேண்டும் என்கிறார் டிக்சன். பண்டு தமிழ் பல ஆயிரம் (ஏன் சில பத்தாயிரம்) ஆண்டுகள் பெருமாற்றம் எதுவும் இன்றி நிலவியிருக்க வேண்டும் என்ற பாவாணர் கருத்துக்கு டிக்சன் கொள்கை ஆதரவு தருகிறது. கடந்த 8000 ஆண்டுகளாக உலகில் பிற மாந்தருடன் யாதொரு தொடர்புமின்றி வாழ்ந்து வருபவர்களும் (ஆனால் இன்றும் திராவிட மொழிகளோடு நெருங்கிய ஒப்புமை காட்டும் மொழிகளைப் பேசிவருபவர்களும் ஆன ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகள் ஒரு சில பத்தாயிரம் ஆண்டுகளாகப் பெரும் அடிப்படை மாற்றம் இல்லாமல்

ஸ்திரமாக இருந்திருத்தல் வேண்டும். திராவிட மொழிகளுக்கும் ஆஸ்திரேலியப் பழங்குடிமக்களின் மொழிகளுக்கும் இடையே இன்றும் உள்ள நெருங்கிய ஒப்புமையை மேலே கண்டோம்.

9. மொழி படிப்படியாக உருவானதா? அல்லது திடுமென உருவானதா? திடுமெனத்தான் என்கிறார் டிக்சன். வெடிவெடித்தது போல (like an explosion) மொழி தோன்றியிருக்கும் என்கிறார். மாந்த இன முளைவளர்ச்சி தக்க தகுதி பெற்ற நிலையில் மாந்தமுளை திடுமெனக் கட்டுக்கோப்பான ஒரு முழு அமைப்பாக மொழியைத் தோற்றுவித்திருக்கும் என்கிறார். (The human brain would have invented it, almost as a complete system; "Language would have burst forth") தமிழ் ஒன்றே இயல்மொழி என்றும் எனவே அம்மொழியில் தான் சொற்கள் (ஏன் பிற மொழிச் சொற்களும்) அனைத்தும் சில அடிப்படை வேர்களிலிருந்து ஏரண முறைப்படிப் படிப்படியாக அறிவுப்பூர்வமாக ஏற்கத்தக்க வகையில் வளர்ந்து பெருகி வந்துள்ளதனை மெய்ப்பிக்க முடியும் என்ற பாவாணர் கோட்பாட்டுக்கு டிக்சன் கருத்து ஓரளவு ஆதரவு தருவதைக் காணலாம் [இயல்மொழி என்று பாவாணர் கூறியது மாந்த இன முதல் தாய்மொழிக்கு மிக நெருங்கியது தமிழ் என்ற கருத்தில்].

10. மொழி திடுமென உருவாகியதாயின், ஞானப்பிரகாசர் (1927) முதலிற்கூறியதும் பாவாணர் (1943,1950,1953,1967, நூல் பக்கம் 70-83) திட்பமாக விரிவாக வடிவமைத்ததும் ஆன சுட்டடிக் கொள்கையானது ஞாலமுதல் மொழி ஆய்வாளர் கருதுதற்கு உரியது. தமிழ்ச் சொற்களுள் முக்காற் பகுதி சுட்டடிச் சொற்களிலிருந்து உருவாகியது என்பார் பாவாணர் (1950). சுட்டடிக் கொள்கையை மிகச் சுருக்கமாகப் பின்வருமாறு தரலாம்:

[ஆ — ஈ — ஊ] ——> [அ — இ — உ]

அ. சேய்மைக்கருத்துச் சொற்கள்

இ. அண்மை, பின்மை, இழிகை

உ (முன்மைச்சுட்டு) உல் மற்றும் உகரத்துடன் க், ச், த், ந், ப், ம் ஆகிய மெய்களைச் சேர்த்து. ("Plenary operation of the principle of consonantal prosthesis) உருவாகும் உல், குல், சுல், துல், (நுல்), புல், முல், ஆகிய மூல வேர்களில் இருந்து தோன்றல் (முன்வருதல்), முன்மை, முற்செல்லல் (செல்லுதல்), நெருங்கல், (செறித்தல், கூடுதல்); பொருந்துதல் (கூடுதல், ஒத்தல்), வளைதல், வளைத்தல், துருவுதல், ஆகிய எட்டுப் பெருங் கருத்துக்களும். (இவற்றிற்கு இடைப்பட்டனவும் இவற்றிற்கிளைத்தனவுமான) எத்துணையோ நுண்கருத்துக்களும் அவற்றிற்கான எண்ணிறந்த தமிழ்ச் சொற்களும் அவற்றின் பன்மடித்திரிபுகளான பல்வேறு "குடும்ப" மொழிச் சொற்களும் பிறக்கின்றன என்பார் அவர். இக் கொள்கையின் விரிவைப்

பாவாணர் *முதல்தாய்மொழி* (1953) நூலில் தந்துள்ளார். 1979இல் பாவாணர் எழுதிய "An epitome of the Lemurian language and its ramifications" என்னும் ஆங்கிலக் கட்டுரையில் இக்கருத்தின் ஆங்கிலச் சுருக்கத்தைப் பின்வருமாறு தந்துள்ளார்:

"The three fundamental ideas, viz., remoteness, proximity, and frontality (or forwardness) expressed by the three demonstrative vowels have generated a million words which go to make up Tamil and have also produced subsequently and genealogically a confused multiplicity of dependant languages of varying degrees of richness and importance, through the process of mutation and derivation........Of the words contained in any language, the greatest majority owe their origin to the idea of frontwardness.

11. எச்.எஸ்.டேவிட் (1966) கட்டுரைகளில் குறிப்பிடும் 21 அடிப்படைத் தமிழ்வேர்களும் (வள்/வண், உள் (உண்) உண்டு, கேள்/கேளிர், கேண்மை, கொள் / கொடு/கோடல்; கீழ்; போழ்;ஒல்,கல்,கால், சால், நில், பால், பல், சில், தொல் வல், எள், ஒள், விள்) அவை சார்ந்த சொற்றொகுதிகளும் ஒரு பான்மை ஒத்து நோக்கத்தக்கனவாகும்.

12. *வண்ணனை மொழி நூலின் வழுவியல்* என்ற நூலின் 89-105 பக்கங்களில் சுட்டும் வழுக்களுள் பின்வருவனவும் வரலாற்று மொழியியலாய்வாளர் உணர்வதற்குரியனவேயாம்.

i) *மலைவாணரெல்லாம் பழங்குடி மக்கள் எனல்*

ii) சொற்குறுக்கமெல்லாம் வேர்ச்சொல் எனல்

iii) இலக்கியச் சொற்பொருள் கால வரிசையே இயற்கைச் சொற்பொருள் கால வரிசையெனல் [இதனைத் தமிழ் போன்ற இயல் மொழிச் சொற்களின் சொல்லாய்வின்போது அப்படியே கடைப்பிடிப்பது அபத்தமாக முடியும் என்பதைப் பாவாணர் விளக்கியுள்ளார்.]

# இயல் - 7

# பாவாணர் கனவு நனவாகும் காலம்

1. *செந்தமிழ்ச் செல்வி* ஒன்பதாம் மடலம் (1931-32)308ஆம் பக்கத்தில் பாவாணர் தமது "வடமொழிச் சென்ற தென் சொற்கள்" கட்டுரையில் "எத்தனையோ தென்சொற்கள் வடமொழிச் சென்று வாகுகராய் வழங்கி வருகின்றன. அவை நளராகும் காலமும் நண்ணும்" என்றார். அக்கட்டுரை வடமொழி பற்றியது மட்டுமேயாதலின் அவ்வாறு கூறினார். பின்னர் அடுத்த 50 ஆண்டுகளில் இந்தோ-ஐரோப்பிய மொழிகள், பிறமொழிக் குடும்பம் சார் மொழிகள் ஆகியவற்றிலும் மிகப் பல தமிழ்ச் சொற்கள் ஏறியுள்ளதைப் பாவாணரே நிறுவியுள்ளாராகலின், "வடமொழிச் சென்று" என்பதைப் "பிறமொழிக் குடும்பங்களிடைச் சென்று" எனக் கொள்வது பொருத்தம். ஞாலத்தின் பல்வேறு மொழிக் குடும்பங்களிடைச் சென்று வாகுகராய் வழங்கும் தமிழ்ச் சொற்கள் நளராகும் காலம். (அதாவது பாவாணரின் கனவு நனவாகும் காலம்) நண்ணிவிட்டது என்பதை முன் இயல்களிலிருந்து அறியலாம்.

2. உலகில் இன்று 200 கோடி மக்கள் பேசும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் தமிழிய மொழிகளுக்கும் இடையிலுள்ள நெருங்கிய ஒப்புமை குறித்து ஆழமாக விரிவாகக் கால்டுவெல் முதல் பாவாணர் வரையில் பேரறிஞர் பலரும் நம் காலத்து அறிஞரும் ஆய்வு செய்து நிலைநாட்டியுள்ளனர் *(மேலே இயல்கள் 3-5).* அடுத்து *(மொத்தம் 50 கோடி மக்கள் பேசும்)* உரால்-அல்தாய்க்-சப்பானிய-கொரிய மொழிகளாகிய ஒட்டுநிலை மொழிகளைச் சார்ந்தும் ஓரளவு திறமான ஆய்வுகள் நடந்துள்ளன. *(இயல் 1: பத்தி 12(3))* அவற்றிலிருந்து சில சிறப்பான ஒப்புமைச் சொற்களாகப் பின்வருவனவற்றைத் தரலாம்.

| தமிழ் | பின்னிஷ் | மங்கோலியம் | சப்பானியம் | கொசுவா |
|---|---|---|---|---|
| ஓரம் | ஆரி | —— | ஹொரி | —— |
| ஐ | அய் | அய் | அய் | அய் |
| ஐய(ன்) | ஆய்ஜா | —— | ஆயா | யாயா |
| ஆய்(ச்சி) | ஆயதி | —— | அய்தெ | —— |
| அக்கா | அக்கா | எக்கெ | —— | அகெ |
| இல்/அல் | ஆல | இயி | ஈஇ | இலா |
| அம்மா | ஆம்மா | எமெ(பெண்) | அமொ | அமசெ |
| அன்னை/ அஞ்ஞை (மாமியார்) | அனொப்பி | —— | அன்னா (பெண்) | ஞாஞா (சகோதரி) |

| தமிழ் | பின்னிஷ் | மங்கோலியம் | சப்பானியம் | கொசுவா |
|---|---|---|---|---|
| அபா/ அப்பா | அப்பு (மாமனார்) | அபா (abu) | —— | அபு (தலைவர்) |
| அண்/ ணண் | எனொ (தாய்மாமன்) | அனை (நண்பன்) | அனி | —— |
| கயிறு | ஹைது (மயிர்) | —— | —— | கைது (மயிர்) |
| கா/காவல் | ஹவைதா | —— | qawa (outsider) | qawa watch |
| இளி | இல்க்குவ (deride) | எலகெல | —— | —— |
| யா/யாவை | ஜோக | யாகன் | —— | —— |
| வெயில் (காய்தல்) | காய் | —— | கா (பகல்) | ஜா |
| கயல் | கல | கலிமு | கரெ | கல்வ |
| கல் | கல்லியோ (rock) | —— | —— | கல்க (stone) |
| குரை | கர்ஜுவ (to roar) | —— | —— | —— |
| கடு | கட்கெர (bitter) | —— | —— | கட்சி |
| கட்டு | கட்டொ (roof) | கடர் | கடதெ | கட |
| கால் | கெலி (air) | கெய் | —— | —— |
| கிளர் | கிளுவ (shine) | கிளை | கிரகிர | கில (moon) |
| கீறு | கிர்வைத்தா (to cut) | கிரு | கிரு | கிரி |
| குடி | கொடி | கொடெ | கடெ | —— |

3. சப்பானிய மொழி என அழைக்கப்படும் நிப்பன் மொழி திராவிட மொழிக் குடும்பத்தின் இலக்கண அமைப்பையும் ஏராளமான தமிழிய வேர்ச் சொற்களையும் கொண்டது என்பதை அறிஞர் சுசுமோ ஒனோ அண்மையில் தெளிவாக நிறுவியுள்ளார். ஒனோவின் ஆய்வுக்குத் துணை நின்றவர்கள் முனைவர் பொற்கோ போன்றவர் ஆவர். திராவிட மொழிகளுக்கும் சப்பானிய

மொழிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் பொருள் பொதிந்தவை என்ற தமது 1991 கட்டுரையில் கமில் சுவெலபில் கூறியுள்ளதைக் காண்க:

**சொல் ஒப்புமைகள்**

| தமிழ் | நிப்பன்மொழி |
|---|---|
| கல் (DEDR 1298) - Stone | Kara - கல் (ல -> ர) |
| படுகர் (DEDR 3856) - நெல்வயல் | Fat-ake>Patakai - வயல் |
| புகை (வினை) (DEDR 4240) | Fuk-asu<Puk-asu - (புகை) |
| பரு (வினை) (DEDR 3972) | Faru - பரு |
| தபு (வினை) (DEDR 3068) சா/அழி | Taf-Uru < tap-uru - சா |
| துப்பல் (DEDR 3323) எச்சில் | tuF-a < *tup-a - எச்சில் |

(தமிழில் வேர்ச்சொற்கள் (எ.கா.: கல், பல்) மெய் - உயிர் - மெய் CVC என்று அமைந்துள்ளன. சப்பானிய மொழியினும் அவ்வாறே.)

**சொற்றொடர் ஒப்புமைகள்**

தமிழ்: ஹேர்ன் தான்[1] சப்பானின்[2] பொருளை[3] மிகவும்[4] எழுதிய[5] மனிதனே யாம் (மனிதன்[6] - ஏ[7] - ஆம்[8])

நிப்பன்:Hearn - Wa[1] Nippon - no[2] Koto - tō[3], takusan[4], kaita[5] hito[6] de[7] su[8]

தமிழ்: எந்தை[1] வந்து[2] உரைத்தனன்[3]

நிப்பன்:Watasi - no titi - ga[1] kite[2] katatta[3]

**இலக்கண ஒற்றுமைகள்**

i. வாக்கியங்களில் பெயர், வினை, பெயரடை, வினையடை, பல்வேறு விகுதிகள் போன்றவற்றின் வரிசை முறை.

ii. Who, Which போன்ற மறுபெயர் ஒட்டுகள் - relative pronouns இன்மை.

iii. சுட்டுக்களில் நான்கு வகை அண்மை, இடைநிலை, சேய்மை, வினா (இது, உது, அது, எது).

iv. செய்தாக வேண்டிய கடமையை, கட்டாயத்தை இன்றியமை யாமையைக் குறிக்கும் தமிழ்த்துணை வினை "வேண்டும்" என்ப தாகும். கன்னடத்தில் அது பேக்கு (beku) நிப்பன் மொழியில் அது பேசி (besi) என்பதாகும்.

v. வினையெச்சங்களைப் (Converb, Gerund) பயன்படுத்துதல்.

vi. ஒலிக்குறிப்புச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துதல் (பரபர வென்று எழுதுவது = Sura Sura Kaku).

4. கொரிய மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையே உள்ள ஒப்புமை பற்றி ஹல்பெர்ட் 1905லேயே நூல் வெளியிட்டுள்ளார். அண்மையில் கொரியா சென்று கள ஆய்வு செய்துவந்த தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் இரா. பவுன்துரை கொரிய மொழியில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் வழங்குவதாகக் கூறியுள்ளார். (எ.கா. அப்பா, அம்மா, பால் (கால்), உல்லே (உள்ளே) கல்லா (மலைப்பெயர்), மேய், மா (பெரிய). மிகப் பல பண்பாட்டு ஒப்புமைகளையும் கண்டுபிடித்துள்ளார்.

### வடஅமெரிக்க, தென் அமெரிக்கப் பழங்குடி மக்களின் மொழிகள்

5. இவற்றுள் பெரும்பாலானவை உராய் அல்தாய்க் குடும்பத்தைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன. தென் அமெரிக்காவில் பெருநாட்டில் பேசப்பட்டு வரும் கொஷ்வா (Quenchua) மொழியில் (ஏன் மெக்சிகோவில் அஸ்தெக்கர் பேசி நகுவாதில் (Nahuati மொழி, மயா Maya - மொழி போன்ற பிற அமெரிக்க மொழிகளிலும் கூட) திராவிட மொழிகளோடு இயைபுடைய சொற்கள் உள்ளதையும் பண்பாட்டு ஒப்புமைகளையும் இராமநாதன் 1986/87இல் காண்க. சில சொல் ஒற்றுமைகள் / தமிழ் மூலம் காட்டும் சொற்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| தியோகல்லி (Teocalli) | - | கோயில்கள் |
| குமரா | - | சர்க்கரை வள்ளிக் கிழங்கு |
| ஆயர்இங்கா | - | அரசர் (ஐயர்) இங்கா |
| ஜல் யோ | - | இல் (குடிப்பெயர்) |
| கோன் இறைய | - | தெய்வீக மாந்தன் பெயர் |
| கோன் - டிகி | - | " |
| வீரகோச | - | " |
| apu / apo | - | தலைவன் |
| Huari | - | வாரி (சுவர்) |
| Cuzco | - | கிழக்கில் உள்ள நகர் |
| Pulque | - | மது (புளிச்ச/புழுக்கு) |
| runtu | - | முட்டை |
| cenote | - | சந்நதி |
| siyano | - | சிறியன் |
| Kocha | - | பையன் |
| Zak | - | நாக்கு |
| Taypicala (நகரப்பெயர்) | - | மையக்கல் |

ஏராளமான இடப்பெயர்கள் தமிழ் வேர்ச் சொல் கொண்டவையாயுள்ளன.

## மையக்கிழக்கு நாடுகளின் பண்டை மொழிகளும் பண்டு ஐரோப்பாவில் வழங்கிய மொழிகளும்

6. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் சிந்துவெளி நாகரிகம் செழித்து வழங்கிய கி.மு. 3000 - 1800 காலத்தை ஒட்டியும் அதற்கு ஓரிரண்டு ஆயிரம் ஆண்டுகள் முன்னரும் மையக் கிழக்கு நாடுகளிலும் (இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பேசுநர் நுழைவதற்கு முந்திய - அதாவது ஏறத்தாழ கி.மு. 2000க்கு முந்திய) ஐரோப்பாவிலும் திராவிட மொழியை ஒத்த மொழிகளே வழங்கிவந்தன என்று லாகோவாரி தனது *"திராவிடர் தோற்றமும் மேலை நாடுகளும்"* (1963) என்ற நூலில் நிலைநாட்டியுள்ளதை மேலே கண்டோம். (இக்கருத்து கால்டுவெல் தனது ஒப்பிலக்கண அறிமுகப்பகுதியில் "திராவிட மொழிகளின் இனமொழிகள்" பற்றிக் கூறும்பொழுது தெரிவித்தது தான்.) அம்மொழிகளுள் முதன்மை வாய்ந்தவை எலாமைட், சுமேரிய மொழி, மிதன்னி, பாஸ்கு, எட்ருஸ்கன் முதலியவையாகும்.

### எலாமைட் மொழி

7. இது மெசபொ்தாமியாவுக்குக் கிழக்கே கி.மு. 3000க்கு முன்னர் இருந்தே வழங்கிய ஒட்டு நிலைமொழி. இது திராவிட மொழியோடு இயைந்தது என்ற கருத்தை 1970இல் கேம்பிரிட்ஜ் பழங்கால வரலாறு குறிப்பிட்டுள்ளது. எலாமைட் மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையே சொற்கள், ஒலியனியல் சொல்லிய அடிப்படையில் இன உறவு உள்ளது என்பதை டேவிட் எம். மக் ஆல்பின் 1974லிருந்து நிறுவியுள்ளார். கமில் சுவலெபிலும் இவ்வொப்புமையை ஆதரிக்கிறார். மறுபெயர்களிலும் வேறு சொற்களிலும் காணும் வியத்தகு ஒப்புமைகள் வருமாறு:

| தமிழ் | எலாமைட் |
|---|---|
| நீ (நீன்) | நீ |
| நின் | நுன் |
| நீர் (நீம்) | நும் |
| அத்தன் | அத்தா |
| அம்மா | அம்(மா) |
| ஒன்று | ஒன் |
| சின்ன | சின்ன |
| நாள் | நான் |
| உள் (நினை) | உள் |
| இ(து) | ஹி |
| இடு/இடம் | ட |

8. ஊரல்: அல்டாய்க் மொழிகளும், ஜப்பான் மொழியும் திராவிட மொழிகளும், எலாமைட் மொழியும் எல்லாமே இற்றைக்கு 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே மொழியாக இருந்து பிரிந்திருக்க வேண்டும் என்று சரியாகவே கவலெபில் உன்னிக்கிறார். ஆனால் அந்த ஒரே மொழி வழங்கிய இடம் மத்திய ஆசியா - மையக் கிழக்குப் பகுதி என அவர் உன்னிப்பது தவறு. என்னை? திராவிட (தமிழிய) மொழிகள் தென்னிந்தியப் பகுதியிலிருந்து (கடல் கொண்ட தென்னாடு உட்பட) வடமேற்காக மையக் கிழக்கு நாடுகளுக்கும் பண்டை ஐரோப்பாவிற்கும் கி.மு. 10,000க்கு முன்னர் சென்றேறியவையேயன்றி, மைய கிழக்கு நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் இறங்கியவை அல்ல என்பதை மேலே கண்டோம்.

## சுமேரிய மொழி

9. எலாம் நாட்டை ஒட்டி மேற்கில் இருந்தது சுமேரியா. யூப்பிரட்டீஸ் டைகிரிஸ் ஆறுகள் பாய்ந்த நாடு சுமேரியா (அதுதான் பின்னர்ப் பாபிலோன்; இன்றைய ஈராக்) இந்தியாவிலிருந்து வடமேற்காகச் சென்ற திராவிடர்களே சுமேரிய நாகரிகத்தை உருவாக்கியிருக்க வேண்டும் என்று 1913லேயே ஹெச்.ஆர். ஹால் தெரிவித்தார். சுமேரிய மொழி திராவிட மொழியினத்தோடு இயைபுடையது என்று வைத்தியநாத ஐயர், தியாகராசு, டேவிட், சதாசிவன், லோகநாத முத்தரையன் ஆகியோர் ஆய்வுகளை வெளியிட்டுள்ளனர். சுமேரிய ஆப்பெழுத்துக்களும் (cuneiform script) சிந்துவெளி முத்திரை எழுத்துக்களும் ஒன்றோடொன்று உறவுடையவை. ஒரே மூலத்திலிருந்து உருவாகியிருக்கலாம் என்ற கருத்தைக் கின்னியர் வில்சன் தமது 1974 நூலில் வெளியிட்டுள்ளார். சுமேரிய மொழியில் கண்ட தமிழ்ச் சொற்களுள் சில வருமாறு: அப் (ab)(அப்பா), அத்தா (அத்தன்), அல (எல்லா), அன (ஒன்னு), அமெ (அம்மா), பாத் (பாதை), பா(b)ன (பானை), த(d)ர் (தரை), தாக் (தாக்கு), ஏகி (ஏகு), ஊரு (ஊர்), புரு (புழு), ஆள் (ஆளுதல்), அர (அரைத்தல்), கூ (g) டு (கூடு), (பு)(b)ரு (புற்று), எகிர் (எதிர்), தரி (தறி), ஆர் (கலப்பை - ஏர்).

## மிதன்னி (Mitanni) மொழி

10. பாபிலோனுக்கு வடமேற்கில், சிரியாவின் வடபகுதியில் (ஹித்தைத் என்னும் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுபவர் வாழ்ந்த பகுதிக்குக் கிழக்கே) கி.மு. 1500க்கு முன்னர் வாழ்ந்தவர்கள் பேசியது மிதன்னி மொழி. தெல்-அல் - அமர்னாவில் அகழ்ந்தெடுத்த சான்றுகளிலிருந்து இம்மொழி மீட்டுருவாக்கப்பட்டுள்து. ஜார்ஜ் வில்லியம் பிரௌன் என்பவர் பின்வரும் சான்றுகளின் அடிப்படையில் இம்மொழியும், திராவிட மொழிகளும் ஒரே மூலத்திலிருந்துதான் உருவாகியிருக்க வேண்டும் என்றும் இம்மொழி

பேசினோரும் திராவிட மொழிகளைப் பேசியவர்களும் பண்டு ஒரே குழுவினராக இருந்திருக்க வேண்டும் என்றும் வாதிடுகிறார் (1930).

எழுத்துக்கள்: இம்மொழியில் தமிழிற்போல அ, இ, உ, எ, ஒ என்னும் உயிர்களுக்கு வரிவடிவம் இருந்தது. நெடில்களுக்குத் தனிவரிவடிவம் இல்லாமல் இருந்திருக்கலாம். மெய் எழுத்துகளிலும் பெரும் ஒப்புமை இருந்தது. காடு, கங்கம், பாடு, துன்பம் போன்ற இணைகளில் காடு, பாடு சொற்களில் வரும் க, ப ஆகியவை பிறங்கா ஒலிகள் (Unvoiced); கங்கம், துன்பம் சொற்களில் வரும் க, ப ஆகியவை பிறங்கொலிகள் (Voiced). ஆனால் வரிவடிவம் ஒன்றே. இதேபோன்ற நிலை மிதன்னி மொழியிலும் இருந்தது.

இலக்கணம்: இம்மொழியிலும் மறுபெயர் ஒட்டுகள் (Who, Which) இல்லை. படர்க்கை ஆண்பால் விகுதி 'ன்' (அவன் என்பது போல்) படர்க்கை ஒன்றன்பால் சொற்கள் அதி, அதினின் (அது, அதனின் என்பதுபோல்) இறந்த காலத்தைக் குறித்தது 'த்' ஆகும். வருங்காலத்தைக் குறித்தவை "வ்", "ப்".

சொற்கள்: அத்தா, அஸ்தி (அத்தி), தான் (தா, give) மணி (gem), ஹில் (கேள்), அர் (அளி, give).

பாசுகுமொழி (யூசுகரா)

11. ஐரோப்பாவில் இந்தோ ஐரோப்பிய மொழிகளைப் பேசுநர் நுழைந்தது கி.மு. 2000ஐ ஒட்டி. அதற்கு முன்னர் ஐரோப்பாவில் வாழ்ந்து வந்தவர்கள் இந்தோ ஐரோப்பிய இனம் அல்லாத மொழிகளையே பேசி வந்தனர். அந்த "அல்லாத" மொழிகளில் பின்னிஷ் உக்ரியன் மொழிகள் அடங்கும். இறந்து போன வேறு மொழிகளும் அடங்கும். இன்று உள்ள அவ்வகை சார்ந்த ஒரே மொழியாகிய பாசுகு மொழியும் அடங்கும்.

12. பாசுகு மக்கள் ஸ்பெயின் - பிரான்சு எல்லையில் பைரின் மலைத் தொடர்ப் பகுதியில் சுமார் 3900 சதுர மைல் நிலப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர்; தங்கள் மொழியை யூசுகரா என்று அழைக்கின்றனர். பாசுகு மொழி திராவிட இனமொழியை ஒத்ததே என்று லாகோவரி விரிவாக நிறுவியுள்ளார். யூசுகரா மொழியில் ர, ற உண்டு. மொழி முதலில் ட்ர், ப்ர் என்று ஒன்றுக்கு மேற்பட்ட மெய்கள் வரக்கூடாது. சொல் இறுதியில் க், ப், த் போன்ற வல்லின மெய் வரக்கூடாது. வினைச்சொற்கள் அனைத்தும் பால், எண் போன்ற இலக்கணக் கூறுகளைப் பல்வேறு ஒட்டுகளால் உணர்த்துகின்றன.

13. பாஸ்கு மொழியைப் போன்றே அதனோடு இயைபுடைய தொன்மொழிகள் கி.மு. 2000ஐ ஒட்டிப் பிரிட்டிஷ் தீவுகளிலும் வழங்கின.

அவற்றில் ஒன்று ஆன பிக்ட் PICT மொழியின் பெயர் மட்டும் தெரிய வந்துள்ளது.

## எத்துருசுகன் மொழி

14. இத்தாலியில் கி.மு. 1000-300 காலக்கட்டத்தில் வழங்கிய எத்துருசுகன் மொழியும் திராவிட மொழியே ஆகும் என்பதைப் பேரா.இரா. மதிவாணன் விளக்கியுள்ளார் (*செந்தமிழ்ச் செல்வி* 76: 3-4) 2001 - நவ., டிச.). எத்துருசுகன் மொழிச் சொற்கள் பலவும் தமிழ்ச் சொற்களை முற்றாக ஒத்துள்ளன:

| எத்துருசுகன் | | தமிழ் |
|---|---|---|
| ais, aiser (god, gods) | - | ஈசன், ஈசர் |
| ale, aligu (to give) | - | அளி, அளிக்கு |
| alpnu (gift) | - | அளிப்பு (நன்கொடை) |
| mulavancce (dedicate) | - | முழுவன் செய் (முழுவதுமாக தன்னை ஒப்படைத்து விடு) |
| turune (to give) | - | தருதல் |
| mutana (sarcophagus) | - | மூடன் (இறந்தவர்களை வைத்து புதைக்கும் பானை) |
| clan, clan - ar (sons) | - | மகன், குழகன், ஆண் மக்கள் |
| sec, sex | - | மகள், சேய், குழந்தை |
| Ati, atiu (Mother) | - | அத்தி - ஆத்தி |
| ati naena (grand mother?) | - | பாட்டி |
| papa (grandfather?) | - | பாட்டன் |
| papacs, papals (grandson) | - | (பார்ப்பு, பாப்பா) பேரன் |
| suplu (piper) | - | குழல் ஊதுபவன் (சூப்புதல் - |
| (Latin = Subulo) | - | காற்றை உள்ளிழுத்தல்) |
| ama, ame, amce (to be) | - | அமர் (இரு) அமை |
| svalce (to live) | - | வாழ்தல் |
| ar, ara, arce (to do) | - | அல்லுதல் (முடைதல்) |
| caru, cerine (to make, to build) | - | சேர், சேர்த்தல், கட்டுதல், செய்வித்தல் |
| heci, hecce (to put) | - | வைத்தல் |
| danasa (actor) | - | தாண்டவன் |
| etera (servant, lower class man | - | இதரர் |
| devru (bull) | - | சேவு (எருது, காளை) |

| | | |
|---|---|---|
| damna (horse) | - | குதிரை (தாவுவது) |
| verse (fire?) | - | எரி, நெருப்பு |
| desan (morning, day) | - | காலைப்பொழுது, (தேசு-ஒளி) |
| tin (day) | - | நாள் (தினம்) |
| avil (year, years) | - | ஆண்டு |
| mi, mini | - | நான், எனக்கு |

(இம்மொழியில் ga, ja, dha போன்ற பிறங்கொலிகள் (Voiced consonants) இல்லை. ஜான் பிரேசர் 1879இல் எத்ருஸ்கன் பற்றி எழுதியபொழுது "கற்படிவங்கள் (பாசில்) போல் சொற்களும் வரலாற்றை உணர்த்துகின்றன. ஒரு இன மக்கள் பண்டு எங்கெங்குச் சென்றனர் என்ற வரலாறு உட்பட (John Fraser. 1879): Etruscans: Were they celts, p. 344: Words may also be "fossil history", the history of a nation's wanderings."

## பசிபிக் தீவுகளின் (பாலிநீசிய) மொழிகளில் தமிழ்ச் சொற்களும் பிற ஒப்புமைகளும்

15. பசிபிக் தீவுக் கூட்டங்களின் மொழிகள் கீழை ஆஸ்ட்ரோனீஷிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தன. இம்மொழிகளைப் பேசுவோர் மொத்த எண்ணிக்கை 10 இலட்சம்தான். அம்மொழிகள் எண்ணிக்கை சுமார் 300 பிஜி மற்றும் மெலானீஷிய தீவுகளுக்கு மனிதர்கள் கி.மு. 1000க்கு முன்னரே குடியேறிவிட்டனர். அதற்குப் பின்னரே பாலினீஷியத் தீவுகளில் மக்கள் குடியேறத் துவங்கினர். கடைசியாகக் குடியேறிய தீவு நியூசிலாந்து. (கி.பி. 900 ஐ ஒட்டியே அங்கு மயோரி பழங்குடிமக்கள் ஹவாய்த் தீவுகளிலிருந்து சென்று குடியேறினர்.

16. பாலினீஷியத் தீவு மக்களிடையே தாங்கள் இந்தோனேசியப் பகுதியிலிருந்து குடியேறியதாக நம்பிக்கை இருந்தது. அதற்கும் முன் அவர்கள் இந்தியாவிலிருந்து சென்று இருக்கவேண்டும் என்பது அறிஞர்கள் கருத்து. ஆபிரகாம் போர்னாந்தர் (1812-1887) என்பவர் இதுபற்றி 1878இல் An Account of the Polynesian Race என்னும் நூலை வெளியிட்டுள்ளார். அந்தக் காலக்கட்டத்தில் திராவிட (தமிழ்) மொழி ஆராய்ச்சி நன்கு பரவாது இருந்தமையால் அவர் பாலினீஷிய மொழி, பண்பாடு ஆகியவற்றுக்குப் பொதுவாக இந்திய ஒப்புமைகளைக் கூற இயலாதவர் ஆயினர். இந்தோ ஆரிய மொழிகள் கொளுவுநிலை (inflectional) மொழிகளாவதற்கு முன் திராவிட மொழிகளைப் போல ஒட்டுநிலை (Agglutinative) மொழிகளாகத் தான் இருந்திருக்க வேண்டும். அந்த நிலையிலேயே பாலினீஷிய மொழிகளைப் பேசுவோர் ஆரியரிடமிருந்து பிரிந்து சென்றிருக்க வேண்டும்

என்பதும் போர்னாந்தர் கணிப்பு. தமிழ் போன்ற ஒட்டுநிலை மொழிகளை இழிசினர் பேசும்பொழுது உருப்பெறுபவையே வடமொழி போன்ற கொளுவு நிலை மொழிகள் என்ற அறிஞர் டெக்னர் கருத்து நினைவுகூரத் தக்கது. இந்திய மொழிகளுக்கும் பாலினீஷிய மொழிகளுக்கும் இடையே ஒப்புமைச் சொற்களாகப் போர்னந்தர் தரும் பட்டியலில் பலவும் தமிழ்ச் சொற்களாக இருப்பதைக் காணலாம்:

| ஹவாய், டொங்கா போன்ற பாலினீஷிய மொழிகளின் சொற்கள் | தமிழ்ச் சொல் |
|---|---|
| ஆலாஇ ஹாலா, சாலா (Road) | சாலை |
| அலோஹா | (நட்புமுறை) ஒருவருக்கொருவர் கூறும் வாழ்த்துச் சொல் (சங்க இலக்கிய "எல்லா") |
| தபு (Taboo) - தடை செய்யப்பட்டது; மீறினால் உயிருக்குக் கேடு வருவது | தபு (தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூற்பா 76 - உரை) |
| மொளெ | முளை |
| காய் காய் (be red) | ஞாயிறு (காய்)தல் |
| மெலு (Soft) | மெல் |
| காண | காண் |
| பழ (Soft, ripe) | பழு, பழம் |
| வா (Mangarewa: Waa Hawaian: Waha) | வாய் |
| Hele (go) | செல் |
| ஆளி (Alii) | தலைவன் |
| ஆரி (Arii) | தலைவன் |
| அரியோய் (Arioi) | பசிபிக் தீவுகளில் மதிக்கப்பட்ட இனத் தலைவர்கள்; ஆளும் சாதியினர் |
| ia ora na (good day) | நல்லநாள் (ஒரையென்று சொல்லலாம்) |
| புரெ (Pure) | புரை (வீடு) |
| பூவா ஆளி (royal flower) | சிறந்த பூ |

17. பசிபிக் தீவு மொழிகளின் இலக்கண அமைப்பு, சொற்றொடர் அமைப்பு ஆகியவையும் தமிழ் போன்றவையேயாகும். ஈஸ்டர் தீவுக்கு

அம்மொழியில் (தே - பிதோ - ஒ - டெ ஹெனுவா (Te - Pito-o-te-Henuva) என்று பெயர். அதாவது உலகத்துடைய உந்தி என்று பொருள்.

18. மயோரி மொழியின் வேர்ச்சொற்களில் 'க' வெம்மையையும் 'கு' குடிலத்தன்மையையும் 'த' தாக்குதலையும் 'வ' உய்த்தலையும் குறிக்குமாம். தமிழிலும் இவ்வேர்கள் இவ்வாறே ஏறத்தாழச் செயல்படுவதாக ஏ.எம். பெர்குசன் "இந்தியன் ஆன்டிகுவாரி x *(1881)* இதழின் *47* ஆம் பக்கத்தில் ஒரு குறிப்பு வரைந்துள்ளார்.

*19.* பண்பாட்டுக் கூறுகளில் தமிழர்களுக்கும் பசிபிக் தீவு மக்களுக்கும் உள்ள ஒப்புமைகள் மிகப்பல. பெருமக்கள் (ஆண்கள் உட்பட), காதுகளில் பெரிய துளை போட்டுத் தொள்ளைக் காதாக விடுவது சிறப்பாகக் கருதப் பட்டது. பச்சை குத்திக் கொள்ளுதல் மற்றொரு வழக்கம். மலர்களுக்கும் அவர்கள் இன்று வரையும் சங்ககாலத் தமிழர்களையொப்ப முதன்மை தருகின்றனர். தமது தமிழ்த்தூதில் தனிநாயக அடிகளார் கூறுவது நினைவுகூரத் தக்கது. "ஹாவாய்த் தீவுகளுக்கு யான் சென்றபொழுது சங்க இலக்கியக் காலத்தின் நினைவு என்னையறியாமலே எனக்குத் தோன்றிற்று. ஏனெனில் அங்குத் துறைமுகத்துக்கு வந்தவர் அனைவரும் கண்ணியும், மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்தனர்; விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூட்டி விடையளித்தனர்; பாடினர். அலோஹா என்னும் ஹாவாய் இசையினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். இப்பெண்டிரும் ஆடவரும் சங்ககாலத் தமிழ் மக்களைப் போல எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனினும் உயர்வு நவிற்சியன்று."

*20.* செமித்திய மொழிகளிலும் சீனமொழியிலும்கூடத் தமிழிய மொழிகளோடு அடிப்படைச் சொற்களில் ஒற்றுமைகள் உள்ளதைக் காட்டக் கால்டுவெல் சில எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார்.

**செமித்திய மொழிகள்**

கால்டுவெல் கண்டறிந்த சொல் ஒப்புமைகளுள் முக்கியமானவை; ab (அப்பன்), em (அம்மா), ய் ஓர் (ஆறு); அல் not; அவ் (அவா); ஆர்/ ஈர் (ஊர்); அர் = to be (Babylonian) இரு; சுடர் = குத்து, கூர்; ஷாஅன்= lean, சாய்; சாமக = to support; சுமை; ஷுர், சுவர்; ஷாவா = சமம், செவ்வை; பால = to divide; பிள; மாய = to die, மாய்; மித்தா = a bed, மெல், மெத்தை.

**சீனமொழி**

கால்டுவெல் தந்துள்ள ஒப்புமைகள் : நீ ngan *(கண்)*, tsu *(செய்)*, aka *(அண்ணன்)*, bat *(படர்)*; கிட் *(கட்டு)*; bad *(படு)* - sign of passive, சத் *(சிதறு)*.

*21.* ஆக, பாவாணர் வழியில் தமிழிய - இந்தோ ஐரோப்பிய மொழி ஒப்புமைகள் பற்றி மட்டுமன்றி, தமிழிய - ஏனைய *(இந்தோ-ஐரோப்பியம் அல்லாத)* மொழி ஒப்புமைகள் பற்றியும் விரிவாக, ஆழமாகத் **தமிழ்/திராவிட மொழியல் வல்லுநர்கள்** ஆய்வுசெய்ய ஈடுபடுவார்களாக. அவ்வாறு செயற் பட்டால் உலக அளவில் "வரலாற்று மொழியியல்", "நாகதிராதிக்/யூரேசியாடிக் ஆய்வுகள்" "ஞால முதன்மொழி ஆய்வுகள்" ஆகிய புலங்களில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும் என்பது உறுதி.

## நூற்பட்டியல்


Andronov, M. 1968. *Dravidian and Uralian*; A peep into the Prehistory of language families; Two lectures on the historicity of language Families, Annamalai University.

Allchin, Bridget and Raymond. 1998. *The birth of civilization in India and Pakistan*; Cambridge University Press.

Arasendiran, K. 1997/2000. *Ulagam Paraviya Tamilin Verkal* (four Volumes), Onriya Tamilar Tholamai;Australia.

Arokiaswami, M. 1967. *The classical age of the Tamils*. University of Madras.

Aruli, P. 1985. *Moliyiyal Uraikal*. (5 vols) Arivan Pathippagam, Tamilur, Pondicherry.

Bellwood, Peter and Colin Renfrew, 2002. *Examining the farming/language dispersal hypothesis*, Cambridge.

Bloch, Jules. (1946 French Orgl), 1954. *The Grammatical structure of Dravidian Languages*; Deccan College, Poona.

Blazek, Vaclav. 1999. Elama: bridge between ancient Near East and Dravidian India. In Blench, Roger and Mathew springs (Edrs):

*Archaeology and Language, Vol IV: Language changes and Cultural transformation*. (One World Archaeology:35); London, Routledge.

Brown, G.W., 1930. The possibility of a connection between Mitanni and the Dravidian languages. *Journal of the American Oriental Society*, 50, pp. 273-305.

Burrow, T. (1945). "Some Dravidian words in Sanskrit", *Transactions of Philological Society*; pp 79-120.

(1946). "Loan words in Sanskrit" *Trans. Phil. Soc.*, pp. 1-30.

(1948). "Dravidian Studies VII: Further Dravidian words in Sanskrit", *Bulletin of the School of Oriental and African Studies*, University of London, *Vol 12, 365-96.*

Caldwell, Rev. Robert, 1856. *A Comparative grammar of the Dravidian or the South Indian family of language* (II Edn. 1875).

Carstairs Mc.Carthy, Andrews, (2001). The origins of language; at Pp. 1-18 of Mark Aronoff and another: *The handbook of Linguistics*; Blackwell, London.

Cavalli-Sforza and others (1994). *The history and geography of Human genes*, Princeton University press, New Jersey.

Comrie, Bernard. et al, 2003. *The Atlas of languages - The origin and development of languages throughout the world,* New York.

Crystal, David. 1997. *The Cambridge Encyclopaedia of Linguistics,* 50.

Dani, A.H. and other (Edrs). 1996. *History of Humanity: vol II From The III millennium to the 3rd century* B.C. Routledge/UNESCO; see pp. 246-265: "The Indus valley (3000-1000 B.C.)" By B.K. Thapar and M.Rafiq Mugal.

David, H.S. (1966). Suggestions to Research Scholars and Lexicographers in Tamil and Dravidology, *Tamil Culture* XII 1,2-3.

Devaneyan, 1950. Derivation of words from the Deictic source. *Centamil Celvi* 24 - 7.

1967. *Tamil Varalaru.*

1996. *The Primary Classical Language of the world.* (for complete list of his works see: Devaneyan.2004)

2004. *Nostratics – the light from Tamil, according to Devaneyan.* South India Saiva Siddhanta Works Publishing Society limited; Chennai – 18.

Dixon, R.M.W., 1980. *The Languages of Australia*; Cambridge University Press.

1977. *The rise and fall of languages*; Cambridge.

Dolgopolsky, Aharon. *The Nostratic Macro family and Linguistic Palaeontology*; Cambridge – The Macdonald Institute for Archaeological Research. 1

Ellis, Francis White. 1816. "*Note to the Introduction*" *in A grammar of the Teloogoo Language* by A.D. Campbell. Madras : Press of college of Fort St George.

Emeneau, Murray Barnson. 1954 "Linguistic Prehistory of India", *Proceeding of American philosophical Society* 98, 282 – 92.

1955. India and Linguistics, *Journal of American Oriental Society* 75: 145-33.

1956 India as a Linguistic Area *Language,* Vol. 32, pp. 3-16

1974. "The Indian Linguistic Area revisited", *International Journal of Dravidian Linguistics*; Thiruvananthapuram; III – 1; pp.92-134.

1971. "Dravidian and Indo-Aryan-The Indian Linguistic Area *in Symposium on Dravidian Civilisation* (ed. A.F. Sjoberg Austin and New York; see pp. 33-68.

1980. *Language and Linguistic Area.* Stanford. Contains all previous papers.

1994. *Dravidian Studies – Selected Papers.* New Delhi, Motilal Banarsidass. 51.

Ehrenfels, U.R. 1952. "Ancient South India and her cultural contacts", *Journal of the Annamalai University*; Vol 17.

Fairservis, Walter A. 1971. *The roots of Ancient India.*

Fanne, Hannah., 1980. Sumerian Dravidian interconnections – the Linguistic, archaeological and textual evidence; *I.J.D.L.* X1.

Flemming, N.C. 2004. "Submarine prehistoric archaeology of the Indian Continental shelf: a potential resource. *Current Science* 86-9, pp. 1225-30; 10th May 2004.

Gamble, Clive (1995). *Timewalkers, the prehistory of global colonization;* Penguin.

Gnanagiri Nadar, K.C.A. 1972. *Tamil: Its contribution to European Languages.*

Gnanaprakasar, S. 1927, *Tamil Amaippurra Varalaru.*

1929. "The origin of language, a new theory", *The Madras Christian College Magazine*: IX-4.

1938-48. *An Etymological and comparative Lexicon of the Tamil language*; Jaffna. (reprinted by ITTS, 1999).

1953. Linguistic evidence for the common origin of the Dravidians and Indo-Europeans. **Tamil Culture**; II-1.

Goswami, O. 1957. *The story of Indian music.*

Greenberg, J.H. 2000. *Indo-European and its closest relatives- The Eurasiatic Language family.* Vol I. Grammar; and II. Lexicon.; Stanford University Press, California.

Grierson, G.A. *Linguistic Survey of India; Vol IV: Munda and Dravidian Languages*, by Sten Konow; Calcutta. Part II-pp. 277-681, Dravidian.

Hakola, Hannu Pannu, 2000. "*1000 DURALJAN Etyma- an extended study In lexical similarities in the major agglutinative language.* Kuopio, Finland.

(2003) with co-author Hoddjat assadian: Sumerian and *Proto-Duralijan;* Kuopio, Finland.

Haspelmath, Martin and others 2003. The World Atlas of Language Structures, OUP.

Hegdeus. Iron, et.al. 1977. *Indo-European, Nostratic and beyond.* (Festschrift for Vitaly V.S. Shvoroshkin; Washington, Institute for the study of man,52.

Heras, Rev H. (1953) *Studies in proto-Indo-Mediterranean culture,* Bombay.

Hevitt, J.F. 1888. "Notes on the early history of Northern India" *Journal of the Royal Asiatic society;* Vol XX.

Hulbert, Homer B. 1905. *A comparative grammar of the Korean Language and the Dravidian language of India.* Seoul. The Methodist Publishing House.

Jaiswal, Suvria. 1974. "Studies in the social structure of the early Tamils" In R.S. Sharma(Ed) *Indian Society: Historical probings in memory Of D.D. Kosambi;* Peoples Publishing House, New Delhi.

Janda, Richard.D and Brian Joseph 2003. *The Hand Book of Historical Linguistics,* London; Blackwell.

Jeeva, Purnachandra (2004). *Cintu veliyil Muntu Tamil.* Thaiyal pathippagam, Ponneri.

Kasinathan, Natana, (2006). *Date of Early Tamil Epigraphs;* JTS June 2004.

Khaire Vishvanath 2003. Visnu in the Veda ABORI, Pune, LXXIV.

Kothandaraman, P. (1994). *A comparative study of Tamil and Japanese.*

Krishnamurthi, Bhadriraju, 2003, *The Dravidian Languages,* Cambridge University Press.

Kuiper, F.B.J. 1955. "Rig Vedic Loan Words", *Studia Indologica: Festschrift for Willibald kirfel.* Bonn; see pp. 137-85; Reprintdin I.J.D.L. XXI-2; June 1992.

1967. "The genesis of a linguistic area" Indo Iranian Journal: 2-3; pp. 81-102.

Lahovary, N. 1963. *Dravidian origins and the west.* Orient Longmans, Madras.

Lehmann, Thomas and Thomas Malten. 1993. *A word Index for Sankam Literature* – Institute of Asian Studies, Chemmancheri, Chennai.

Lewin, Roger (2005 Edn). *Human evolution – an illustrated Introduction,* London: Blackwell.

Levitt, Stephan Hillyer, 1998. "Is there a genetic relationship between Indo-European and Dravidian", *The Journal of Indo-European Studies* Vol 26, pp. 131-159.53.

2000. Some more possible relationships between Indo-European and Dravidian. *JIES.* 28; pp 407-438.

2007. A word for horse in Chinese and Dravidian. *IJDL xxxxvi-2.*

Maclean, C.D. 1885. *Manual of the Administration of the Madras Presidency.*

Madhivanan, R. 1995. *Indus Script – Dravidian.* Madras; Tamil Canror Peravai.

1995. *Indus Script among Dravidian speakers.*

2001. *Italiyal pandu valangiya Etruscan moliyil Tamil corkal, Centamil Celvi,* 76-3.

2006. *Pavanarin Gnala Mutal moli kolkai,* IITS.

Mahadevan, I. 1977. *The Indus script: texts, concordance and tables.* Archaeological Survey of India, New Delhi.

2003. *Early Tamil Epigraphy, from the earliest times to the 6th century A.D.*, Harvard University.

Maloney, Clarence. 1975. "Archaeology in South India: accomplishments and prospects" in Burton Stein. *Essays on South India.* Hawaii.

Mallory, J.P. 1996. "The Indo-European Phenomenon: Linguistics and Archaeology" at pp. 80-91 of Dani AH and others: *History of Humanity:* Vol II.

Marr, J.R. 1975. "The Early Dravidians", In A.L. Basham: *A Cultural History of India.*

Marshall, Sir John, 1934. *Mohenjodaro and The Indus Civilisation.*

Maraimalaiyadigal. 1903. *Mullaipattu Araychiyurai,* Madras (He was then called N. Vedachalam Pillai.)

1923. *Tamilar Nagarikam allatu Velalar nagarikam.*

1930. *Manickavasagar Varalarum kalamum.*

1941. *Tamilar Madham.*

Masica, Colin P. 1992. The Indo-European Languages; Cambridge University Press.

2001. Paper in *The year Book of South Asian Languages and Linguistics.* (presented at Dec 1999 Tokyo seminar on South Asian languages;Contact, convergence and typology); New Delhi' Sage Publications.

Nilakanta Sastri, K.A.1976. (IV Edition) *A history of south India.*

Oppenheimer, Stephen (2003). *The real Eve: Modern Man's Journey Out of Africa.* New York. Carrol and Craf.

Piggott, Stuart, 1950. *Prehistoric India down to 1000 B.C.*

Pillai, K.K. 1969. *A social history of the Tamils.*

Posschl, Gregory. 2002. *The Indus civilizations, a contemporary Perspective.* (Reprint by Sage Publications, New Delhi)

Prichard, James Cowls. 1847. *Researches into the physical history of Mankind, world civilizations, races, tribes and culture; Vol V: Oceania and America.* London: Sherwood, Gilbert and Piper.

Ramachandran, K. 2004. *Ulaga Molikalil Tamil Chorkal:* **SISSW**, Chennai.

Rajan, K. 2004. Tolliyal nokkil Sangakalam, **IITS**, Chennai.

2005. The emergence of Early historic period in Tamil Nadu. *Proceedings of Tamil Nadu History Congress;* 12th Session, Mayiladuthurai.

2007. The Earliest hero-stones of India. *I.J.D.L.*, **xxxvi-1** Jan 2007.

Ramachandra Dikshitar, 1947. *The origin and spread of the Tamils.* [Tamil Version, with introductory update by P.Ramanathan: 2006; Tamil Mann Pathippagam].

Ramanathan, P.1967. Irunkovel and Kottai Velalar, the possible origins of a closed Community. *Bulletin of the School of Oriental and African Studies,* University of London, xxxii-2; June 1969.

1984. Australia Palangudi makkalin molikalum Tamilum, *Centamil Celvi;* May 1984.

1986/87. America pandaiya nagarikangalil Tamil moli, *panpadu akiavarrin kurukal; Centamil Celvi;* Dec.1986 and Jan. 1987.

1993. *Pacific theervugalin nagarikangalil Tamil moli, panpadu akiavarrin kurukal,* Centamil Celvi; July 1993.

1998. *A New account of the History and culture of the Tamils;* Chennai **SISSW** Publishing society.

1999. *Cintu veli tol Tamila Nagarikam;* S.I.S.S.W.

2002. Situating Indus Valley civilization in the prehistory of India. *PILC Journal of Dravidic Studies;* 12: 1-2; Pondicherry.

2003. Direction of Movement of Dravidian speakers in pre-historic times, *Dravidian Studies* (Kuppam) 1-3 April-June 2003.

2004. Original home of Dravidian speakers in prehistoric times and the history of their spread; new light from linguistics and from recent findings on the origin and spread of Homo Sapiens Sapiens *Proceedings of 11th session of Tamilnadu History Congress;* Kanchipuram.

2004. Introduction to Devaneyan (2004): *Nostratics the light from Tamil according to Devaneyan.*

2006. Sangam literature in its historical setting: Certain aspects from a contemporary perspective *Indian Historical Studies* II-2; April 2006 (Paper read at **Tamil Nadu History Congress** 12th session, Mayiladuthurai 2005).

Sathasivam, A. 1965. *Sumerian, A Dravidian Language.* Ph.D. Thesis (Not published yet); Berkeley; University of California.

Sjoberg, Ms Andree F. (1990) The Dravidan contribution to the development of Indian civilization: a call for reassessment *Comparative Civilizations Review;* Vol. 23, pp. 40-47.

Slater, Gilbert 1924. *The Dravidian element in Indian Culture.*

Smith, Vincent 1958. (III Edition edited by Percival Spear) *The Oxford History of India.* Part I: Ancient and

Hindu India, revised / rewritten by Sir Mortimer Wheeler and A.L.Basham, Oxford University Press, IV Edn 1981.

Srinivasa Iyengar P.T. 1929. *History of the Tamils from the earliest times to 600 AD.* (Tamil version with introductory update by P.Ramanathan (2007) Tamil Mann Pathippagam).

Stein, Burton, 1998. *A History of India,* Blackwell, Oxford.

Steve-Jones, et al. (1992) *The Cambridge Encyclopaedia of Human Population.*

Steever, Sanford 1998. *The Dravidian Languages,* London, Routledge.

Subramanian, T.N. 1938. *Pandai Tamil Eluttukal.*

Subramania Pillai Ka. 1939 *Moli Nool Kolkaiyum Tamil moli amaippum.*

Sykes, Bryan. 1999. *The Human inheritance: Genes, language and Evolution;* OUP, See pp. 1-32: Colin Renfrew-"Reflections on the Archaeology of linguistic diversity".

Tamilaha Arasu Varalarru Kuzhu 1972. *Tamil Naattu Varalaru-Tolpalankalam.*

Thani Nayagam, Xavier S. *Nature in ancient Tamil poetry,* reprinted in 1996 as *Landscape and poetry.*

1964. *Tamil Culture and civilization – Readings.*

Thapar, Romila. 2002. *Early India from the origins to AD 1300,* University of California Press / Penguin.

Thirunavukkaracu, Ka. Tha. 1972. "Inamarapu" at pp. 51-136 of *Tamil Nattu Varalaru – Tolpalankalam.*

Trautmann, Thomas, R.*Dravidian Kinship;* Cambridge University Press.

Turner R.L. (1989 reprint) *A Comparative Dictionary of the Indo-Aryan Languages.*

Tayler. S.A. 1973. *India, an Anthropological perspective.*

Upadhyaya U.P. and Susheela P. Upadhyaya. 1981. New dimensions of the Dravidian problem-Negro-Dravidian affinities. *Fifth International Conference-Seminar of Tamil Studies, Madurai, proceedings.*

Vacek, Jaroslav. 2006. Dravidian and Altaic – in search of a new paradigm. *Archive Orientalni.* 72 (pp 382-453).

Vaiyapuri Pillai, 1956. *History of Tamil language and literature.*

Varadarajan, Mu. 1972. *Tamil Ilakkiya Varalaru.*

Venkatachalam, Chengam K. 1993. A Study of the weights and measures of the Indus Valley civilizations. (*Tamil University Seminar paper).*

Wheeler, Sir Mortimer, 1968. *The Indus Civilization,* Cambridge.

Wolpert, Stanley. 1982. *A new history of India.*

1991. *An introduction to India.*

Zvelebil, Kamil. V. 1972. "The descent of Dravidians", *International Journal of Dravidian Linguistics.* I-I pp. 57-63.

1973. *The smile of Murugan, On Tamil literature of South India* E.J. Brill, Leyden.

1974. *Tamil literature,* Otto Harassowitx, Weisbaden.

1975. *Tamil literature,* E.J. Brill, Leyden.

1990. *Dravidian Linguistics – an introduction.*

1991. *Dravidian and Japanese once again,* Archiv Orientalni 59, 73-77.

## BOOKS ON AUSTRALIAN ABORIGINAL LANGUAGES, THEIR AFFINITIES AND RELATED MATTERS

Basedow, Herbert, 1925. *The Australian aboriginal - an ethnological study*; Adelaide, Breece and Sons.

Bates, Daisy, 1938. *The passing of the aborigines;* London, John Murray.

Bird-Rose, Deborah, 1991. *Hidden histories - Block stories from Victoria river downs;* Humbert river and Wave Hill stations; Canberra, Aboriginal Studies Press.

Blainey, Geoffrey, 1975. *Triumph of the nomads - a history of ancient Australia;* Australia, Macmillan.

Bleek, W.H.J., 1871. On the position of the Australian languages; London, Journal of the Anthropological Society.

Caldwell, Rev. Robert, 1875. *A Comparative grammar of the Dravidian or South Indian family of languages, II Edn;* London.

Calvert, Albert, F., 1894. *The aborigines of Western Australia London;* Simpkin, Marshall, Hamilton.

Davidson, D.S., 1935. *Is the Boomerang oriental?;* Journal of the American Oriental Society; Vol. 55; see pp. 163-81.

Dixon, R.M.W., 1972. *The Dyirbal language of North Queensland,* Cambridge, Cambridge University Press.

Dixon, R.M.W., 1980. *The languages of Australia,* Cambridge, Cambridge University Press.

Dixon, R.M.W. and Barry J. Blake, 1979. *Handbook of Australian languages,* Canberra, Australian National University Press.

Elkin, A.P., 1938. *The Australian aborigines;* Sydney, Angus and Robertson.

Greenway, John. 1973. *Down among the wild men;* London; Hutchinsons.

Harney, W.E., 1957. *Life among the aborigines;* London, Robert Hales.

Harney, W.E., 1959. *Tales from the aborigines;* London, Robert Hales.

Horner, N.M., 1863. *On the History and Structure of the Australian Language.*

Jose, Arthur Wilberforce, H.J. Carter and T.G. Tucker, 1927. *The Australian Encyclopaedia;* Sydney; Angus and Robertson; see pp. 1-15 on aboriginal languages.

Lockwood, Douglas, 1962. *I, the aboriginal;* Adelaide, Rigby Ltd.

Lockwood, Douglas, 1963. *We, the aborigines;* Australia; Cassells.

Love, J.R.B., 1936. *Stone Age Bushmen Today;* London; Blackie & Sons.

Maclean, C.D., 1885. *Manual of the administration of the Madras Presidency;* Madras; Vol. I; see p. 44.

Masefield, J. (Ed.) 1906. *The voyages of Captain William Dampier;* London.

Morgan, Lewis, H. 1870. Systems of consanguinity and affinity of the Human family, Smithsonian Institution.

Nolvaney, D.J., 1969. The prehistory of Australia, London, Thames and Hudson.

Richard, James Cowles, 1847. *Researches into the physical history of mankind,* world civilisation, races, tribes and

cultures; Vol. V: Oceania and America; London; Sherwood, Gilbert and Piper.

Ramanathan, P., 1984. *Astraliappalankudi makkal molikalum tamilum;* Centamil Celvi, Madras, May 1984.

Ramanathan, P., 1991. *Diravidar Uravumurai;* Tamil polil; Thanjavur, May-June 1991.

Ramanathan, P., 1998. *A new account of the History and Culture of the Tamils;* Madras; SISSW Publishing Society.

Reynolds, Henry, 1981. *The other side of the frontier - aboriginal resistance to the European invasion of Australian Townsville,* Queensland; James Cook University.

Ridley W., 1850. *Kamilaroi, Dippil and Turrubul,* London, Trubner.

Strenlow, T.G.H.. 1947. *Aranda Traditions;* Melbourne University Press.

Trautmann, Thomas R., 1981. *Dravidian Kinship,* Cambridge, Cambridge University Press.

Warner, W. Lloyd, 1937. *A black civilisation - a social study of an Australian Tribe;* London; Harber and brothers.

Yallop, Colin. 1982. *Australian aboriginal languages,* Andre Deutsch, London.

1,40,000 ஆண்டுகட்கு முன்னர் ஆப்பிரிக்காவில் தோன்றிய இக்கால மாந்தர் இனம் (AMH) உலகெங்கும் பரவிய வரலாறு பற்றிய கணிப்பு




= route along the Continental shelf of South India ( See Fleming; Oppenheimer etc)

Continental shelf, now submerged under sea which was land before the end of the last ice age about 20,000 years ago, when sea level was about 300 feet lower

# புடவியின் தோற்றத்திலிருந்து இன்றைய மாந்தன் வரை
# From BIG BANG to Present-day Man (AMH)






இற்றைக்கு.......... கோடி ஆண்டுகட்குமுன்
கண்டங்கள் இருந்த நிலை




பூமி உருண்டையின் மேலோட்டின் (லித்தோஸ்பியா)
பாளங்களின் (பிளேட்) அமைப்பு
அவற்றில் தற்பொழுது அமைந்துள்ள கண்டங்கள் பாளங்களின் தற்பொழுதைய போக்கு ஆகியவை {(இந்திய = இந்திய பாளம் (பிளேட்)}

# ஞால முதன்மொழி - தமிழ்

## TAMIL - NEAREST TO MOTHER TONGUE OF MAN

### ஞாலமுதன்மொழிக்கு (முதல்தாய்மொழிக்கு) மிக நெருங்கியது தமிழ்

உலகில் பலவிடங்களிலும் வாழ்ந்த / வாழும் பல்வேறு மொழி பேசுநர்களின் மொழிகளில் மிகப்பல தமிழுட னும் தமிழிய (திராவிட) மொழிகளுடனும் நெருங்கிய தொடர்புடையவை என்பதைக் காட்டுவது இப்படம்.

TAMIL is closest to the MOTHER TONGUE OF MAN (This chart summarises data showing the closeness of Tamil and of Tamilian (Dravidian) languages to many of the major languages families / languages in diverse parts of the world

Basque (Euskara) language is the only pre Indo-European language left after Indo-European Speakers spread through Europe about 2000 BC

இந்தோ ஐரோப்பிய மொழிபேசுநர் ஐரோப்பாவுக்குள் கி.மு. 2000ஐ ஒட்டி நுழையுமுன்னர் அக்கண்டத்தில் பேசப்பட்டு வந்த மொழிகளுள் எஞ்சியுள்ள பாஸ்கு (யூசுகரா) மொழி திராவிட மொழியே.

ஹீராஸ் (1954): லாகோவரி : Dravidian Origins and the West (1963); Benon Zbigniew Szalek.

இத்தாலியில் கி.மு. 1000-300 அளவில் வழங்கிய எதிருசுகன் மொழியும் திராவிட மொழியே. Etruscan spoken in Italy during 1000-300BC is a Dravidian Language

இரா. மதிவாணன் : **செந்தமிழ்ச் செல்வி (2000)**

மெக்சிகோ நாட்டில், அஸ்தெக்கர் பேசிய **நகுவாதில்** மொழி; அந்நாட்டில் யுகடான் பகுதியில் பேசப்படும் **மயா** மொழி; தென் அமெரிக்க பெருநாட்டில் பேசப் பட்டு வரும் **கொஷுவா** மொழி ஆகியவற்றுக்கும் தமிழுக்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன.

Many similarities between Tamil on the one hand and **Nahuatl** spoken by Aztecs in Mexico; **Maya** language of Yucatan peninsula in Mexico; and **Quechua** spoken in Peru.

Chamanlal: **HINDU AMERICA** (1950)
மீ.மனோகரன் : தென் அமெரிக்காவின் சோழர்கள் (1976)
டாக்டர். ஜி. சீனிவாசன் : ஆதி அமெரிக்காவில் பண்டைத் தமிழனின் பாதச்சுவடுகள் (1985)
**செந்தமிழ்ச் செல்வி** : திசம்பர் 1986 சனவரி 1987
ஹெச்.பி.ஏ. ஹகோலா: 1000 DURALJAN ETYMA

கிரேக்கம், லத்தீன், ஸ்லாவ், ஜெர்மானிக் (ஆங்கிலம் உட்பட), அவெஸ்தன், வேதமொழி (சமஸ்கிருதம் உட்பட) முதலியவற்றின் மூதாதை இந்தோ ஐரோப்பியத் தொன்மொழி எனப்படுவது. அத்தொன்மொழி பேசியவர்கள் மேற்கே ஐரோப்பாவுக்கும் தெற்கே பாரசீகத்திற்கும் பரவுவதற்கு முன்னர் கி.மு. 4000 – 3000 அளவில் மைய ஆசியப் பகுதியில் வாழ்ந்தனர். அத் தொன்மொழிக்கான மூலமும் தமிழிய மொழிகளிலேயே உள்ளது.

Proto Indo-European speakers lived about 4000-3000 BC in Central Asia before they spread westwards and southwards to Europe and Iran-India (and ultimately gave rise to Greek, Latin, Slav, Germanic, Avestan and Vedic (including Sanskrit). The roots of that proto language are ultimately to be traced to Tamilan (Dravidian) languages.

Cald well (1856); Gnanaprakasar; G. Devaneya Pavanar, S.H. Levitt; Ilyich-Svitych, Dolgopolsky; J.H. Greenberg.; R. Mathivanan; Aruli; K. Arasendiran.

கி.மு. 3000-1800 கால அளவைச் சார்ந்த சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துக்களின் மொழி தொல் தமிழே (பழந் திராவிடமே)

The Language of the inscriptions on seals of Indus-Valley civilization (3000-1800 BC) was proto Tamil (Proto-Dravidian); Heras, Asko Parpola, Fairservis, Iravatham Mahadevan, R. Madhivanan, Knorozov, Purnachandra Jeeva.

தமிழிய (திராவிட) மொழிகளும் ஊரல் இன மொழி களும் (பின்னிஷ், ஹங்கேரியன்) அல்டாய்க் இன மொழிகளும் (துருக்கி, மங்கோலியன்) ஒரே பெருங் குடும்பத்தைச் சார்ந்தவை, மிக நெருங்கியவை.

Dravidian languages and languages of Uralic family (Finnish, Hungarian) and Altaic family (Turkish, Mongolian) belong to the same family and are close to each other.

Rasmus Rask Caldwell, Schroder, Burrow, Andronov, Tyler, Vacek; K.V. Zvelebil, Szalek etc., H.P.A. Hakola : 1000 **Duraljan Etyma** (2000)

கொரிய மொழி திராவிட மொழிகளுக்கு நெருங்கியது.

Korean language has affinities with Dravdian
Homer B. Hulbert; **A Comparative grammar of Korean and the Dravidian languages** (1905)
டாக்டர். பவுன் துரை

சப்பானிய (நிப்பன்) மொழிக்கும் தமிழுக்கும் (கி.மு. 5000 லிருந்து) சொற்கள், இலக்கணத்தில் நெருங்கிய ஒப்புமை.

Japanese and Tamil : Closeness in vocabulary and grammar (going back to about 5000 BC)
(i) சுசுமோ ஒனோ : தமிழும் சப்பானிய மொழியும் (1989)
(ii) பொன்கோதண்டராமன் : **A Comparative Study of Tamil and Japanese** (1994)
(iii) K.V. Zvelebil : Tamil and Japanese : **Archiv Orientalni** (1991)
(iv) H.P.A. Hakola : 1000 **Duraljan Etyma** (2000)




பசிபிக் தீவுகளின் (பாலினீசிய) மொழிச் சொற் களுக்கும் தமிழ்ச் சொற்களுக்கும் இடையே ஒற்றுமை; இலக்கண அமைப்பிலும் ஒற்றுமை

Glossarial and grammatical affinities between languages of Polynesian islands in Pacific and Tamil.

(i) Abraham fornander : **An account of the Polynesians Race** (1878)

(ii) **செந்தமிழ்ச் செல்வி** : சூலை (1983)

கி.மு. 1500க்கு முன்னர் சிரிய வடபகுதியில் பேசப்பட்ட மிதன்னி மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் ஒரே மூலமே

**MITANNI** spoken before 1500 BC in Northern Syria and Dravidian Languages should have had a common origin. G.W. Brown : **Journal of American Oriental Society** (1930) கட்டுரை

கி.மு. 3000க்கு முன்னர் சுமேரியா வில் (மெசபொதாமியா) வழங்கிய சுமேரிய மொழி திராவிட மொழியே.

**SUMERIAN** spoken before 3000 BC in Sumeria (Mesopotamia) was a Dravidian Language.
A. Sadhasivam : **Sumerian a Dravidian Language** (1965)
J.W. Kinnier Wilson : **Indo - Sumerian** (1974); Hakola

கி.மு. 3000க்கு முன்னர் மெசபொதாமியாவுக்கு கிழக்கே ஏலாம்பகுதி யில் வழங்கிய மொழி திராவிட மொழிகளுடன் நெருங்கிய இன உறவு கொண்டது.

ELAMTE spoken before 3000 BC in Elam, east of Mesopotamia is closely related to Dravdian
David W. McAlpin : **Proto Elamo-Dravidian and its implications** (1981); K.V. Zvelebil : **Dravidian Linguistics** (1990)

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகள் (கி.மு. 20000க்கு முன்னர் இருந்து இன்று வரை): சொற்கள், சொற்றொடர் அமைப்பு, ஒலியன் அமைப்பு, இலக்கணம் முதலியவற்றில் தமிழோடு வியத்தகு ஒற்றுமை.

AUSTRALIAN ABORIGINAL LANGUAGES (B.C. 20000 and earlier - to present day) Remarkable affinity with Tamil in Vocabulary, Morpho-Phonemics; Phonemes and grammar.
(i) Douglass Lockwood - **We The Aborigines** (1963) (ii) R.M.W. Dixon - **The languages of Australia** (1980) (iii) **செந்தமிழ்ச் செல்வி** : மே (1984) (iv) Colin Masica (2000)

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெபொமீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| அறந்தாங்கித் தொண்டைமான்கள் | 45.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| **தமிழில் தத்துவ நூல்கள்** | **40.00** |

---

**598 நாகதிராதிக்-ஞாலமுதன்மொழி ஆய்வுகளுக்குப் பாவாணர் தரும் ஒளி** **35.00**